Deviyin KANMANI Tamil Fortnightly JULY -1, 2007. Regd. No. TN/PMG(CCR) 766/06-08 Registered With RNI Under No.49510/89
Published every 1st and 15th of every month.

## என்னைப் பற்றி



'கண்மணி' வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

'அந்தி வரும் நேரம்' நாவலின் வாயிலாக உங்களை மூன்றாவது முறையாக சந்திப்பதில் பெருவகை அடைகிறேன்.

சொத்துக்காக நிறம் மாறிய சொந்தங்களை உதறி விட்டு... தன் பெண்மையை காத்துக் கொள்ள அனாதையாக அகதியைப் போல் அடைக்கலம் தேடி ஓடுகின்றாள், கதாநாயகி கவுரி! அன்பு, பண்பு, தியாகம், கருணை இவற்றின் மொத்த உருவமாகத் திகழும் கவுரி. உங்களது இதயங்களில் நிச்சயம் இடம் பெறுவாள்.

கண்ணியம், நேர்மை இவற்றை தன் இரு கண்களாகக் கொண்டுள்ள நாயகன் கைலாஷ், சொக்கலிங்கம் தம்பதியினர் மரகதம், மருது, முருகி, முத்துப்பாண்டி போன்ற கதாபாத்திரங்கள்... பசு மரத்தாணி போல் உங்களது நெஞ்சங்களில் பதிந்து போவார்கள். 'தென் மேற்கு பருவக்காற்று' வீசும் தேனியில்தான் நான் படித்து வளர்ந்தேன், வீரபாண்டி கிராமம், பெரிய குளம், கம்பம், குமுளி என்ற தேனிக்கு அருகாமையிலுள்ள பகுதிகளை... கதைக்குரிய களமாக்கியுள்ளேன்! 'கண்மணி' ஆசிரியர் அவர்கட்கு என் இதயம் கனிந்த நன்றி!

உங்களது மேலான கருத்துக்கள்... என்னை மென்மேலும் மெருகேற்றும் என்று நம்புகின்றேன்! மிக்க நன்றி!

உங்கள் சகோதரி,
ஏ.லஷ்மி பிரபா.

# கண்மணி

ஏ. லக்ஷ்மிபிரபா

ரூ.7



# அந்தி வரும் நேரம்

# அந்தி வரும் நேரம்

முல்லை ஆறு சலசலவென்று பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சை பசேலென்ற வயல் வெளிகள் தென்னந்தோப்பும், மாந்தோப்பும், திராட்சை தோட்டங் களும், பூந்தோட்டங்களும் செழிப்புடன் கண்களை வசீகரித்தன.

இத்தனை செழுமைக்கும் பசுமைக்கும் 'நான்தான் காரணமாக் கும்' என்று கட்டியங் கூறாத குறையாக... இரு கரைகளையும் தொட்டு நுரை பொங்கப் பிரவாகம் எடுத்தது முல்லை ஆறு!''

தேனி மாவட்டத்தில்.... எண்ணற்ற கிராமங்களை செழுமைப் படுத்தி கர்வமாய் பிரவாகித்த முல்லை ஆற்றங்கரையில் அமைந்த 'வீரபாண்டி' கிராமம் தனி சோலையுடன் மிளிர்ந்தது என்றால் அது மிகையல்ல...!

பச்சைப் பசேலென்ற கிராமம் என்பதோடு... ஆற்றங்கரையில் அமைந்த கண்ணீஸ்வரமுடையார் திருக்கோவிலும்... வீரபாண்டி கவுமாரி அம்மன் திருக்கோவிலும்... அதற்கு மென்மேலும் சிறப்பு சேர்த் தன.

கண்ணீஸ்வரமுடையார் கோவிலின் படித்துறையைத் தொட்டுத் தழுவிக் கொண்டு சென்ற முல்லையாற்றில் முங்கிக் குளித்து விட்டு எதிரே அண்ணாந்து பார்த்தாள் கவுரி!

கோவில் கோபுரத்தின் கலசம். இளம் வெயில் பட்டு தகதக வென்று ஜொலித்தது.

கண்களை மூடி கரங்களைக் குவித்து தியானித்து விட்டு மெல் லக் கரையேறினாள் கவுரி. கரையோரத்தில் இருந்த பருத்த ஆலமரத் தின் அடி வேரில் அமர்ந்திருந்த தோழி முருகேஸ்வரி விழிகள் தெறிக் காத குறையாக ஆச்சரியத்துடன் கவுரியை ஏறிட்டாள்.

அடர்ந்த நீண்ட கூந்தலும், அகன்ற கண்களும் கூர் மூக்கும் கொடி போன்ற தேகமும், தந்தத்தைக் கடைந்தாற் போன்ற நிறமுமாய்... கண் களைக் கட்டிப் போட்டாள் கவுரி.

'கவுரி! நீ ரொம்ப ரொம்ப வித்தியாசமான பொண்ணுடி! இந்த கிராமத்துலேயே பிறந்து வளர்ந்தவ நீ... ஆறு, குளம், கோவில், தோட் டம், துரவு, வயக்காடு, வாய்க்கால்... இதெல்லாம் உனக்கு அலுக்

-ஏ. லக்ஷ்மி பிரபா



கவே இல்லையா? எங்களுக்கெல்லாம் பாத்து பாத்து சலிப்பு தட்டி ருச்சு!

''இந்த மண்ணுல பிறந்ததுக்கு நாம கொடுத்து வச்சிருக்கணும். மகசூலை அள்ளிக் கொடுக்கிறா நம்ம பூமித்தாய்! மண் மாதாவோட அழகை நா தினமும் ரசிக்கிறேன். நம்மைப்பெத்த தாயோட முகமும், அன்பும் நமக்கு அலுக்குமா? சலிப்பு தான் தட்டுமா?'' முல்லைப் பல் வரிசை தெரிய முறுவலித்தாள் கௌரி.

''உன் அளவுக்கு... யாருக்குமே இங்க ரசனை இல்ல போ! எல் லாம் மடச்சாம்பிராணிங்க தான்... இந்த கிராமத்துலே நம்ம மாதிரி வயசுப் பொண்ணுங்க எத்தன பேரு இருக்காளுக... ஒருத்தியாவது விடியக்காத்தால ஆத்துப்பக்கம் தலைவச்சுப் படுக்கிறாளா? தோ... என்னைப்பாரு... ஆத்துல ஒரு முங்கு முங்கினாலே... ஆச்சுப்போச் சுன்னு ஆயிடுது. வீட்டுல அம்மா விளாவி வச்ச வெந்நீர்லே காக்காய் குளியல் தான் போட முடியுது. வசதியான வீட்டுல பிறந்தாலும் பந்தா இல்லாம... பாந்தமா நடந்துக்கிறே! நீ ஒரு தனி ரகம் கவுரி''

''உஷ்! என்னைத் தூக்கி வச்சுப் பேசாட்டி உனக்குத் தூக்கம் வராதே! அஞ்சு விரலும் ஒரே மாதிரியா இருக்கு? ஒவ்வொருத்தருக் கும் ஒரு தனித்துவம் இருக்கும். அதனால... மட்டம் தட்டி பேசறதை நிறுத்திக்கோ முருகி''

அதற்குள் அவர்கள் வரப்பு வழியாக நடந்து மாந்தோப்பை எட்டி விட்டிருந்தனர்.

''எங்க... மருது மாமாவை காணலியே?'' கவுரி பார்வையால் துழாவினாள்.

''கவுரி! அதோ... அங்கே இருக்காரு பாரு!'' முருகேஸ்வரி சுட் டிக்காட்டினாள். அவள் காட்டிய திசையில் பார்வையைப் பதித்தாள் கௌரி.

மருதப்பன் மாமரத்தடியில் குனிந்து சருகுகளில் புதைந்திருந்த பழங்களைத் தேடிப்பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தார்.

கால் கொலுசு சப்திக்க அவர்கள் நடந்து அவனை சமீபத்ததும்... புன்னகையுடன் எழுந்தார் மருதப்பன்.

''இந்தா கவுரி! அணில் கடிச்ச பழமா பறிச்சிருக்கேன். தேனாட் டம் இனிக்கும்!'' ஐந்தாறு பழங்களை அவளிடம் நீட்டினார்.

''தேங்க்ஸ் மாமா!'' ''ஹாங்! முருகி! இந்தா சாப்பிடு!'' என்றாள் கவுரி.

மருதப்பன் விடுவிடுவென்று நடக்க ஆரம்பித்தார். தோழிகள் இருவரும் அவரை பின் தொடர்ந்தனர்.

மருதப்பன் கௌரியின் வீட்டில் பல வருடங்களாக வேலை செய் பவர். வயது நாற்பத்தெட்டுக்கு மேலிருக்கும். விசுவாசமான தொழி லாளி. கவுரி பிறப்பதற்கு முன்பிருந்தே அவளது வீட்டில் வேலை செய்பவர்.

கௌரியை கண்ணின் இமை போல் பாதுகாப்பவர். அவள் தின
மும் ஆற்றங்கரைக்குச் செல்லும் போது நிழல் போல் கூடவே வரு
வார். அவள் குளித்து விட்டு வரும் வரை மாந்தோப்பில் உலாவிக்
கொண்டிருப்பார்.
கௌரியின் குடும்பத்திற்காக தன்னுயிரையே கொடுக்கத் தயங்
காதவர்.
கௌரியை அவருக்கு ரொம்பவே பிடிக்கும். தனது வீட்டில்
வேலை செய்யும் பணியாள் என்று அவள் என்றுமே கருதியதில்லை.
வாய் நிறைய ''மருது மாமா'' என்று முறை வைத்து அவள் அழைக்
கும் போது... பாசத்தில் நெக்குருகிப் போய் விடுவார் மருதப்பன்.
இந்த மாந்தோப்பு கூட கௌரியின் தந்தை சொக்கலிங்கத்திற்கு
சொந்தமானது தான்! பத்து நிமிட நடையில்... வீட்டை அடைந்தாள்
கௌரி.
''வா முருகி! காபி குடிச்சிட்டுப் போ!''
''உக்கும்! நா இன்னும் குளிக்கவே இல்லையேடி! அப்புறமா
வாரேன்!'' சிட்டாகப் பறந்து ஓடினாள்.
அந்த காலத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான வீடு அது!. தேக்கு
மரக்கதவுகளும், தூண்களும், கூடத்திலிருந்த பெரிய ஊஞ்சலும்
கம்பி போட்ட முற்றமும்... இன்றளவும் பிரமிக்க வைத்தது.
கௌரி... அந்த வீட்டின் ராஜகுமாரி உள்ளே நுழைந்ததும் தான்
தாமதம்! அடுப்பங்கரையிலிருந்து தூபக்காலை ஏந்திக்கொண்டு ஓட்
டமும் நடையுமாய் ஓடி வந்தாள் காமாட்சி.
''வந்து இந்த ஊஞ்சல்லே உட்காரு தாயி! சாம்பிராணி போட
றேன். ஈரத்தலையை சீக்கிரமா உலர்த்தணும் கண்ணு! இல்லேன்னா...
தலையிலே நீர் கோர்த்து மண்டை வலி வந்துடும் ராசாத்தி!''
''நா போட்டுருக்கிற டிரஸ்ஸைப் பாரேன்! வெளியில காத்து அள்
ளிக்கிட்டுப் போவுதா... எல்லாமே உலர்ந்திடுச்சு! இரு... வேற
டிரஸ்ஸை மாத்திட்டு வந்திடறேன்!'' கவுரி சிணுங்கியபடி பேசி
விட்டு தனது அறைக்குள் புகுந்து கொண்டாள்.
காமாட்சி தூபக்காலில் சாம்பிராணியைத் தூவியபடி கூடத்தில்
இருந்த சாமி படங்களுக்கு காட்டிவிட்டு ஊஞ்சலில் வந்து அமர்ந்
தாள்.
''காமாட்சி! கவுரி எங்கே?'' என்றபடி முகம் கொள்ளாத பூரிப்பு
டன் உள்ளே வந்தார் சொக்கலிங்கம்.
''உடுப்பு மாத்த உள்ளார போயிருக்கு!'' என்றவளிடம் ஒரு
சாவியை நீட்டினார்.
''இதை சாமி படத்துக்கு கிட்ட வையி! கவுரி வந்து எடுத்துக்கட்
டும்!''
சொக்கலிங்கம்... இந்த வயதிலும் சுறுசுறுப்பாக ஓடி உழைப்ப
வர்... மண்ணை தெய்வமாக வணங்கி உழைத்ததால்... அது பொன்



னாக விளைந்து மகசூலை அள்ளித்தந்து அவரை உயர்த்தியது.
இதனால் நஞ்சை, புஞ்சை நிலங்களோடு... மாந்தோப்பு தென்
னந்தோப்பு, பூந்தோட்டம், கரும்புத் தோட்டம் என்று போட்டி
போட்டுக் கொண்டு... சொக்கலிங்கத்திற்கு சொந்தமாயின.
சொக்கலிங்கம்- காமாட்சி தம்பதியினருக்கு பத்து வருடங்க
ளுக்கு மேலாக குழந்தை பாக்கியமே கிட்டவில்லை. அவர்கள்
போகாத கோவில் இல்லை... பண்ணாத பரிகாரம் இல்லை... தேனி
மாவட்டம், மதுரை மாவட்டம் என்று சுற்று வட்டாரத்தில் பிரபல
மாயிருந்த டாக்டர்கள் ஒருவரையும் அவர்கள் விட்டு வைக்க
வில்லை.
மாதங்களும், வருடங்களும் விரையமானது தான் மிச்சம்! ''எங்
களால முடிஞ்சதை செஞ்சிட்டோம் ஆத்தா! உன் காலடியில நாங்க
கிடக்கிறோம். நீயா பாத்து மடிப்பிச்சை போடு ஆத்தா!... இனி நாங்க
எந்த முயற்சியும் எடுக்கல... நீ தான் எங்களுக்கு கெதி!''
அந்த வருடத் திருவிழாவில்... தீச்சட்டி ஏந்திக் கொண்டே கண
வனும், மனைவியும் 'வீரபாண்டி கௌமாரி அம்மனை' வேண்டி கத
றித் தீர்த்தனர்.
அவர்களது வேண்டுதல் வீண் போகவில்லை. அவர்கள் கதறிய
கதறலுக்கு அம்பாளே செவி சாய்த்தாள். காமாட்சி உண்டானது தெரிந்
ததும்... கணவனும் மனைவியுமாய் ஆனந்தம் தாள மாட்டாமல்
தேம்பி அழுதனர்.
''வீரபாண்டி கவுரிமாரியே குழந்தையா பொறந்துட்டா புள்ள
ஆத்தாளோட பேரையே வச்சிருவோம்'' சொக்கலிங்கம் மகளின் அழ
கில் அப்படியே சொக்கித் தான் போனார்.
''ஆத்தா கவுரீ...'' என்று தான் அவளை அழைப்பார். சொக்கலிங்



''பார்த்தீங்களா பேப்
பரை..! சமையல் செய்ய
மறுத்த கணவன் விவாகரத்
தாம்..!''
''சரி ராஜி... இன்னிக்கு
என்ன சமையல் பண்ண
ணும்? சொல்லு...!''
-தேனி, எஸ்.மாரியப்பன்.

கம் பெயருக்கேற்ப குணத்திலும் சொக்கத்தங்கம் தான். பரந்த மனது டையவர் காமாட்சியும் அவனுக்கு கொஞ்சமும் சளைத்தவள் அல்ல...

கணவரைப் போன்று அவளும் பரோபகாரி தான்!

'விதையொன்னு போட்டால் சுரையொன்றா முளைக்கும்?' பெற் றவர்களுக்கு மகள் தப்பாமல் பிறந்திருந்தாள். இளகிய மனம்... தயாள குணம்... ஈவு, இரக்கம், பண்பு, அன்பு, பாசம்... இவற்றின் மொத்தக்கலவை தான் கௌரி!

அன்பே வடிவானவள்! அன்பிற்காக எதையும் செய்பவள்! ஆகாய நீல வண்ணத்தில் பட்டுப்பாவாடை தாவணி அணிந்து பார்த் துப் பரவசப்பட்டனர். சொக்கலிங்கம் தம்பதியினர்.

''இப்டி உட்காரு தாயி!'' ஊஞ்சலில் தனக்குப் பக்கத்தில் அமர்த் திக் கொண்டு அவளது கூந்தலைக் கோதி சாம்பிராணி புகையிட்டாள் காமாட்சி.

''என்னப்பா? வச்ச கண் வாங்காம அப்டி பாக்கறீங்க? ஏதோ சொல்ல நினைக்கிறீங்க? என்ன விஷயம் அப்பா?'' தந்தையின் விழி களை ஊன்றிப் பார்த்தாள் கௌரி.

''போ தாயி! சாமி படத்துக்கிட்ட ஒரு சாவி வச்சிருக்கோம். ஆத் தாளை மனசுல நினைச்சு கும்பிட்டுட்டு அதை எடுத்துட்டு வாம்மா!''

விழிகளில் ஆச்சரியம் மிதக்க... கூடத்தை நோக்கி நடந்தாள். தழைய கட்டியிருந்த பட்டுப்பாவாடை தடுக்கி தடுமாறி தடாலென்று விழுந்தாள்.

## 2

''ஆத்தா கவுரீ'' பதறிப்போய் அலறினார் சொக்க லிங்கம். ''ஐயோ புள்ளக்கி என்னாச்சு?'' பதற்றத்து டன் ஓடி வந்தாள் காமாட்சி.

''நத்திங்! ஒண்ணுமில்லேப்பா... ஏம்மா இப்டி பதட்டப்படறே? பாவாடை தடுக்கி விழுந்துட்டேன். அவ்ளோ தான்!'' கௌரியின் முழங்கையில் இலே சான வீக்கம் ஏற்பட்டிருக்கிறது.

''என்ன புள்ள இது? இப்டி வீங்கிடுச்சே?'' காமாட்சியின் விழிக ளில் கண்ணீர் குபுக்கென்று கொப்பளித்தது.

''என்னம்மா நீ சின்ன விஷயத்துக்குப் போய் இப்டி பதறு வாங்களா?'' கேட்ட கௌரிக்கு மனதில் ஏதோ ஒன்று நெருடியது.

நெற்றியைச் சுருக்கி புருவ மத்தியில் சிறு முடிச்சு விழ ஒருகணம் யோசித்தவள்... சட்டென்று எழுந்து சென்றாள். கூடத்தில்... சாமி சிலைகளும், படங்களும் வைக்கப்பட்டிருந்த பெரிய அலமாரியின் அருகில் சென்றாள் கௌரி.

அலமாரிக்குக் கீழே இரு பெரிய வெள்ளி குத்து விளக்குகள் ஏற்



றப்பட்டிருந்தன. தோட்டத்தில் பூத்திருந்த பவள மல்லி பூக்கள்... குத் துவிளக்குகளின் அடிப்பாகத்தில் தூவப்பட்டிருந்தன.

சந்தன பேளா, குங்குமச்சிமிழ், விபூதி சம்புடம் இத்யாதிகள் வைக்கப்பட்டிருந்த வெள்ளித் தாம்பாளத்தில்... அந்த சாவி சயனித் திருந்தது.

கண்களை ஒரு வினாடி மூடி அம்பாளை தியானித்து விட்டு அந்த சாவியைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு யோசனையுடன் சொக்க லிங்கத்தை ஏறிட்டாள்.

''இந்தாங்கப்பா! இது என்ன சாவிப்பா?'' அவளது நெஞ்சினில் இருந்த நெருடலுக்கு... என்ன காரணம் என்று இனம் கண்டறிய முடி யவில்லை.

''வாம்மா! வாசல்லே வந்து பாரேன்!'' சொக்கலிங்கத்தைப் பின் தொடர்ந்து காமாட்சியும், கௌரியும் வாசலுக்கு விரைந்தனர். புத்தம் புது அம்பாஸிடர் கார்! காரின் அருகே பவ்யமாய் நின்றிருந்தான் டிரை வர்!

''அ... அப்பா கார் எதுக்குப்பா? பக்கத்துல போக வரவில் வண்டி இருக்கு! பக்கத்து டவுண்க்குப் போக ஏகப்பட்ட மினி பஸ் இருக்கு? எதுக்குப்பா இதை வாங்கினீங்க?''

''போ தாயி! நீ பெரியகுளம் காலேஜுக்கு பஸ்லே போயிட்டு வர்றே! கூட்ட நெரிசல்லே நீ இடிச்சுப் புடிச்சுக்கிட்டுப் போறதைப் பாத்து... எனக்கு மனசு தாங்கலை ஆத்தா! அப்புறம் சாயந்தரம்... டவுன்லே ஏதோ கம்ப்யூட்டர் வகுப்புலே சேர்ந்து படிக்கிறே... அதுக்கு வில்லுப வண்டியிலே போய் வந்துட்டு இருக்கே... வசதியா சம்முனு கார்லே போய் வா தாயி!''

''என்னப்பா நீங்க? பஸ்லே போறதுலே எனக்கு ஒண்ணும் கஷ் டம் இல்லேப்பா... என் ஃப்ரண்ட்ஸ் கூட பஸ்லே சேர்ந்து ஜாலியா போயிட்டு வந்துட்டிருந்தேன். போங்கப்பா!'' கௌரிக்கு நிஜமாகவே சங்கடமாக இருந்தது.

''இதுக்கா வருத்தப்படறே? அந்த புள்ளைங்களையும் நம்ம பிளசர் கார்லேயே ஏத்திக்கிட்டுப்போ ஆத்தா! யாரு வேணாம்னு தடுத்தா?'' வெற்றிலைக் காவியேறிய பற்கள் தெரிய சிரித்தார் சொக் கலிங்கம்.

''நம்ம ஐயா சொல்றது சரி தேன்! பத்திரமா சாக்கிரதையா நம்ம கார்லே போயி படிச்சு வுந்துரு தாயி! ஒண்ணே ஒண்ணு கண்ணே கண் ணுன்னு உன்னை வளத்துட்டோம்... இம்புட்டு சொத்து பத்தை ஐயா யாருக்கு சேத்து வச்சிருக்காரு... இந்த வயசுல அனுபவிக்காம எப்போ அனுபவிக்கப் போறியாம்?'' மருதப்பன் உரிமையாய் கௌரியை சமாதானப்படுத்தினார்.

தேனி மாவட்டத்தில் இருந்த பெரியகுளம் மகளிர் கல்லூரியில் பி.எஸ்.சி. இரண்டாம் ஆண்டு படித்து வந்தாள் கௌரி.

''இந்த புள்ள என்னத்துக்கு இப்டி தயங்குதாம்? அததுக... எப்படா பிளசர் கார்லே போவோம்னு ஆசைப்படுதுங்க... இவ என்னடான்னா... டவுனு பஸ்கலே போக முடியலேன்னு வருத்தப்படுறானே... ஆச்சரியம் தேன்!''

காமாட்சி வியந்து போய் கையை மோவாயில் வைத்ததும்... தந்தையும் மகளும் குபீரென்று சிரித்து விட்டார்கள்.

''நா என்னத்தை சொல்லிப்பிட்டேன்னு இப்டி கெடந்து சிரிக்கிறீக? ஹிம்! பள்ளிக்கூடப் படிப்பு முடிஞ்சதும்... காலா காலத்துல கண்ணாலம் காட்சி பண்ணியிருக்கணும். புள்ள ஆசைப்படுதே... எம்புட்டு வருஷம் வேணாலும் படிக்கட்டும்னு... பச்சைக்கொடி காட்டியாச்சு! ஆனா... இந்த பாழும் மனசு கேக்குதா? கெடந்து அடிச்சுக்குது...

இந்த தங்க விக்கிரகத்தை பத்திரமா... ஒரு நல்ல மகராசன் கையில் ஒப்படைக்கணும்... வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கிறதால... ராவுல தூக்கமே வரமாட்டேங்குது!''

''ஆரம்பிச்சுட்டியா உன் புலம்பலை? விடிஞ்சு வெள்ளக்கோழி கூவினா போதுமே... அங்க சுத்தி இங்க சுத்தி... புள்ளயோட கண்ணாலப்பேச்சுல வந்து நிப்பியே? அதது... கால நேரம் கூடி வந்தா சாம்சாம்னு நடக்கும்! அது வரைக்கும் செவனேனு கோவிலைச் சுத்திட்டு வந்து கட்டையை சாய்ச்சின்னா... நல்லா தூக்கம் வரும்! என்ன நா சொல்றது சரிதானே காமாட்சி?'' குரலில் கண்டிப்பு தொனிக்க அதட்டினார் சொக்கலிங்கம்.

''செரி! செரி தேன்... ஹிம்!'' காமாட்சி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே... அவிழ்ந்த கூந்தலை கோடாலி முடிச்சிட்டு கொண்டு உள்ளே செல்ல எத்தனித்தாள்.

''மாமோய்!'' வாப்பா! இப்ப தான் வாரீயா?'' வாய் நிறைய வர



''உன் சேலை துணியை வேலைக்காரிக்கு கொடுக்காதே...ன்னு சொன்னேனே...! கேட்டியா...?''

''ஏங்க...? என்ன ஆச்சு...?''

''அதைக் கட்டவும் அவளோட அழகு கூடிடுச்சு...!''

-தேனி, எஸ்.மாரியப்பன்.



வேற்றார் சொக்கலிங்கம்.

''அட ராமதுரை!'' வாப்பா! இப்ப தான் வாரீயா?'' வாய் நிறைய வரவேற்றார் சொக்கலிங்கம்.

''விடிஞ்சும் விடியாததுமா பூனை மாதிரி வந்து நிக்கானே? இவன் ஆத்தாளுக்கு தப்பாம பொறந்த பயலாச்சே... பிரச்சனையை கௌப்பி விட்டுட்டு... குளிர் காய்ற எளந்தாரிப் பய வந்துட்டானே?''

இவன் ஊருக்குத் திரும்ப போறவரைக்கும் நம்ம வாய்க்கு பூட்டு போட்ரணும் சாமி! எதுக்கு வம்பு?''

கௌரிக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல முணுமுணுத்தாள் காமாட்சி.

''வாப்பா! துரை! அம்மா அப்பாவுங்கெல்லாம் சொகம் தானே?'' குசலம் விசாரித்தாள்.

''ஆ! ஆங்... எல்லாரும் சொகந்தேன்! நா டவுனுக்கு சில சாமான் வாங்கிப்போக வந்தேன். அப்டியே ஒரு எட்டு உங்க எல்லாத்தையும் பாத்துப்போட்டு போலாமேன்னு இங்கன வந்தேன்!''.

ராமதுரை கோணலாக சிரித்தான். சொக்கலிங்கத்திற்கு இரு தங்கைகள்! மூத்தவள் தங்க லட்சுமியின் மகன் தான் ராமதுரை. அவள் 'போடி'யில் வாழ்க்கைப்பட்டிருந்தாள்.

அவளுக்கு இரு பெண்களும், ஒரு மகனும் இருந்தனர். மகன் ராமதுரைக்கு தனது அண்ணன் மகள் கௌரியைக் கட்டி வைத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள் தங்க லட்சுமி!

ராமதுரைக்கு படிப்பு மண்டையில் ஏறவில்லை. அவனது அப்பா நடத்தி வந்த 'லேத் பட்டறை'யில் சேர்ந்து தொழில் கற்றுக் கொண்டு... அதை தானே நடத்தும் அளவுக்கு தேறி விட்டிருந்தான்.

ராமதுரை...! அமாவாசை இருட்டின் நிறத்தில் இருப்பான். அதீத குடிப்பழக்கத்தினால் சதா சிவப்பேறிய விழிகள்... முறுக்கு மீசை... முழுக்கை சட்டையை வாகாக மடித்து மடித்து முழங்கை வரை விட்டிருப்பான். முகத்தில் முரட்டுக்காளை தாண்டவமாட... சண்டியர் தனமாய் நடமாடுபவன்!

''மாமோய்! காரெல்லாம் வாங்கிட்டீக போலிருக்கு!'' பின்னாலே திரும்பி காரையும் டிரைவரையும் நோட்டமிட்டு விட்டு இளித்தான்.

''ஆமாப்பா! நம்ம கவுரி காலேஜுக்குப் போக வர வசதியா இருக்கட்டுமேன்னு வாங்கிப்புட்டேன்!''

''அதுவும் சரி தேன்! என்ன கவுரி... அத்தான் வந்து நிக்கறேன். வாங்கன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டியா?'' சிவந்த

விழிகளால் அவளை ஏற இறங்க அளவெடுத்துக் கொண்டே... ராமதுரை கேட்ட போது கௌரிக்கு உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

'பார்க்கிற பார்வையைப் பார்! பொறுக்கிப் பயல்' பொங்கி வந்த ஆத்திரத்தை பற்களைக் கடித்து அடக்கினாள் கௌரி.

''வாங்க'' என்று சொல்லி விட்டு நகரும் முன்... காரின் மீது மீண்டும் ஒரு பார்வையை வீசி விட்டு... உள்ளே விரைந்தாள்!

மகளுக்காக ஆசையாக அப்பா வாங்கிய வாகனம் தான்! அதுவே எமனாக மாறி பாசக்கயிற்றை வீசும் என்று யாரும் கருதவில்லை!

3

**ஃபை**ல்களில் தனது கையெழுத்தை 'சரக்' 'சரக்' என்று போட்டு முடித்து விட்டு நிமிர்ந்த கைலாஷ், வாஸந்தியைப் பார்த்தான். அவள், அவனது அந்தரங்க காரியதரிசி!

''மோதிலால் அண்ட் கோ'வுக்கு எஸ்டிமேட் ஃபைல்ஸ் எல்லாம் போய் சேந்துச்சா?''

''எ... எஸ்டிமேட் ஃபைல்ஸை இன்னக்கித்தான் அனுப்பணும்... சார்!'' சற்றே தடுமாற்றத்துடன் கூறினாள் வாஸந்தி.

''இன்னக்கி அனுப்பணும்... நாளைக்கு அனுப்பணும்னு சொல்றதுக்குத் தான் நீங்க இருக்கீங்களா? ரீசன்டா உங்க கிட்ட நிறைய தடுமாற்றம் தெரியுது. ஜாப்புல 'கான்சென்ட்ரேஷன்' குறைஞ்சா இப்படி தான் இருக்கும்!'' குரலில் கடுமை வழிந்தது. ஒவ்வொரு வார்த்தையும் விஷத்தைத் தடவிக் கொண்டு வெளிப்பட்டன.

''இதை டெஸ்பாட்சுக்கு அனுப்பிடுங்க! எஸ்டிமேட் ஃபைல்ஸை அனுப்பிடுங்க... 'கொட்டேஷனை' ரெடி பண்ணி என் டேபிளுக்குக் கொண்டாந்து வைங்க! 'ப்ளான்ஸ்' எல்லாம் முடிஞ்சிருந்தா என் பார்வைக்கு வைக்கச் சொல்லுங்க'' மட மட வென்று கூறி விட்டு நாலே எட்டில்... கண்ணாடிக் கதவைத் திறந்து வெளிப்பட்டான்.

ஆறடி உயரத்தில் உடைத்த கோதுமை நிறத்தில் மிகவும் கம்பீரமாக இருந்தான். கைலாஷ் வெளிப்பட்டதும் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் மரியாதை நிமித்தம் எழப் பார்த்தார்கள். வலது கரத்தை இலேசாக அசைத்து, தொடர்ந்து அலுவலை கவனிக்கும் படி சைகை செய்துவிட்டு' விரைந்தான்.

நாலாபுறமும் சுற்றித் துழாவும் விழிகளால் அவர்கள் அனைவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு நடந்தான்.

கார்க் கதவைத் திறந்து அதில் ஏறிக் கொண்டே திரும்பிப் பார்த்தான். குறிப்பெடுத்திக் கொள்ள ஏதுவாக ஒரு சிறு டைரியை வலது



கையில் ஸ்டைலாகப் பிடித்தபடி நின்றிருந்த வாஸந்தியைக் கண்டதும் தாடை இறுக புருவங்களை மேலேற்றினான் கைலாஷ்.

''யூ நீட் நாட் காம்! ஜெனரல் போர்ட் மீட்டிங்கை நான் மட்டும் தான் அட்டெண்ட் பண்ணப் போறேன். யூ ப்ளீஸ் கேரி ஆன்!'' காரை விருட்டென்று கிளப்பினான்.

புகையைக் கக்கியபடி விரைந்து மறைந்த அந்த காரையே வெறித்து விட்டு... ஹை ஹீல்ஸ் சப்திக்க திரும்பி உள்ளே நடந்தாள். அவளது விழிகளில் தெறித்த ஏமாற்றத்தையும், சுண்டிப்போன முகத்தையும் கண்ட பியூனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

ஆர்வந்தானாமல் கிளார்க்கின் டேபிளருகே சென்று நின்று கொண்டு அடிக்குரலில் பேசத் தொடங்கினான்.

''பர்ஷனல் செகரட்டரியோட மூஞ்சி போன போக்கை பாத்தீங்களா, பாஸ் போற எல்லா இடத்துக்கும் கோந்து போட்டு ஒட்டுனதினுசுல கூடவே போலாம்னு நெனச்சிருக்கு போல... பாவம்! பெரிய பாஸ் லேடீஸ் விஷயத்துல 'வீக்' அப்படின்னு ஊர் உலகத்துக்கே தெரியும்.

அப்பாவைப் போல புள்ளையும் வீக்கா இருப்பாருன்னு... புதுசா வேலைக்கு சேர்ந்த பாசந்தி... சாரி! வாஸந்தி தப்புக் கணக்கு போட்டிருச்சு! கைலாஷ் சார்... 'வீக்' இல்ல ரொம்ப 'ஸ்ட்ராங்' புரிபட்டதும்... மூஞ்சி சுண்டிப் போச்சு பாத்தீங்களா? அலுவலக நேரத்தில் வம்பு மூட்டையை அவிழ்த்தான் ப்யூன்.

''உம்! கவனிச்சேனே! சின்ன பாஸ் கைலாஷ் பத்தரை மாத்துத் தங்கம். இளகின மனசுள்ளவரு தான்! ஆனா... அவருக்கு 'எக்ஸ்ரே கண்'! யாரோட மனசுல என்ன மாதிரி நெனப்பு ஓடுதுன்னு... பார்த்த மாத்திரத்துல புரிஞ்சுக்கிற சாமர்த்தியசாலியாச்சே! வேற மாதிரி எண்ணத்தோட அவர் கிட்ட யாராச்சும் நெருங்க முடியுமா?

சதா நெற்றிக்கண்ணை திறந்து வச்சுட்டிருக்கிறவராச்சே... அப்பாவைப் போல இல்லாமல்... கண்ணியமா நடந்துக்கிற இளைஞர். அப்பா குருமூர்த்தியோட போக்கை சகிக்காம... சொல்லிப் பாத்தாரு... ஒண்ணும் முடியலைன்னு தெரிஞ்சதும்... தகப்பனை 'ச்சீ'ன்னு உதறிட்டு தன் வழியே நடக்கிறவராச்சே! பெத்த தாய் மேல உசுரையே வச்சிருக்காரு! இந்த காலத்துல இப்படியொரு புள்ளை கிடைக்க மரகதம் அம்மா... புண்ணியம் செய்திருக்கணும் இல்லையா?'' மூக்கில் சரிந்த மூக்குக் கண்ணாடியை சரியாகப் பொருத்திக் கொண்டே முறுவலித்தான் கிளார்க்.

''ஆமாமா! வாஸந்தி இத்தோட வாலை சுருட்டிக்கிட்டு வேலையை பாத்தாக்க நல்லது. மறுபடியும் வலை விரிக்க பாத்தாள்னா... அவ்ளோ தான்! சீட்டு கிழிச்சு வெளியே துரத்துடுவார் சின்ன பாஸ்! நமட்டுச் சிரிப்புடன் நகர்ந்தான் பியூன்!

டைனிங் டேபிள் முன் அமர்ந்த மகன் கைலாஷுக்குப் பரிமாறி விட்டு, அவன் சாப்பிடும் அழகைக் காண வழக்கம் போல் எதிரில் அமர்ந்து கொண்டாள் மரகதம்.

சாப்பாட்டில் கைலாஷின் மனம் லயிக்கவில்லை என்பது... அவன் தட்டிலிருந்த சோற்றை அளைவதிலிருந்து புரிந்தது. நெற்றியில் முடிச்சு விழ, பலத்த சிந்தனையில் அவன் மூழ்கியிருப்பதை கவனித்த மரகதம் மெல்ல பேச்சுக் கொடுத்து, அவனது கவனத்தை திசை திருப்பினாள்.

''உனக்கு ரொம்ப பிடிச்ச மணத்தக்காளி வத்தக்குழம்பு, வாழைப்பூ பொரியல், காலிப்ளவர் வடை... எப்படியிருக்குன்னு சொல்லலையே?'' என்றாள்.

''ஆங்! ரொ... ரொம்ப நல்லாயிருக்கும்மா... உன் கையால எது சமைச்சாலும் அது எனக்கு அமிர்தம் தானேம்மா?'' அவனது இதழ்க்கடையில் குறுநகை பூத்தது.

''உன்னை மாதிரியே... உங்கப்பாவுக்கும் இதெல்லாம் ரொம்பவே பிடிக்கும். அவரை மாதிரியே நிறைய விஷயத்துல நீ இருக்கே!'' என்று மரகதம் கூறியது தான் தாமதம்... சாதத்தை அள்ளி வாயில் திணிக்கப் போன கைலாஷ்... சட்டென்று வெகுண்டு போய் சாதத்தை தட்டில் உதறினான்.

''அம்மா!... எத்தன வாட்டி உங்களுக்கு சொல்லியிருக்கேன்? தயவு செஞ்சு அவரைப் பத்தி எதுவும் பேசாதீங்க. அதுவும் அவரைப் போல் நானிருக்கேன்னு சொல்லி... என் நெஞ்சுல நெருப்பை அள்ளிக் கொட்டாதீங்க! எனக்கு... அவரைப் பத்தின பேச்சை எடுத்தாலே... உடம்பெல்லாம் திகு திகுன்னு பத்திக்கிட்டு எரியுது'' கோபமாகக் கூறிக் கொண்டே சாப்பாட்டுத் தட்டை அப்பால் நகர்த்தி விட்டு எழுந்து கொண்டான்.

''டேய் கைலாஷ்! என்ன கண்ணா இது? சாப்பிடாம பாதியிலே எழுந்துட்டே? உனக்கேன் இவ்ளோ கோபம் வருது? அவருக்குப் பிடிச்சதெல்லாம் உனக்கும் பிடிக்குது. உன்னோட ரசனையும் உங்கப்பாவோடதும் ஒண்ணா இருக்கு... அதோட சாயல்லே அவரை உரிச்சுக்கிட்டு தானே நீ வந்திருக்கே? இதைச் சொன்னா... என்ன தப்பு?

நெஞ்சுல நெருப்பை அள்ளிக் கொட்டாதீங்கம்மா'ன்னு பேசறே... தப்பு கண்ணா... ரொம்ப தப்பு! ஆயிரந்தான் இருந்தாலும் நீ அவரோட பிள்ளை! அவர் எப்படி வேணாலும் இருந்துட்டுப் போகட்டும். ஆனா... அவர் உன்னோட தகப்பன் இல்லையா? அந்த பந்தத்துக்குரிய பாசத்தையும் மரியாதையையும் காட்டறது உன்னோட கடமைப்பா. ஊர் உலகத்துல உன்னை 'பத்தரை மாத்துத் தங்கம்'னு பெருமையா பேசிக்கிறாங்க...

அப்பாவை வெறுத்து கண்டபடி ஏசற பிள்ளைன்னு... அவங்க உன்னைப் பத்தி பேசற அளவுக்கு நீ நடந்துக்காதே! நான் அவ்ளோ



தான் சொல்வேன். வா! உட்காருப்பா! அம்மா பேச்சைத் தட்ட மாட்டே இல்லியா? சாப்பிட்டுட்டுப் போ கைலாஷ்!''

மரகதம் தன் மகனின் கையைப் பற்றி இழுத்து அமர வைத்தாள்.

''ஏம்மா? நான் என்ன அடாவடித்தனம் பண்ற பிள்ளையா? தகப்பனை மதிக்காம ஏசற அளவுக்கு... நடந்துக்கற தான் தோன்றியா? நா தழுதழுக்க கைலாஷ் கேட்டதும்... மரகதத்திற்கு 'பகீர்' என்றது.

**4**

மரகதம் இரு தலைக் கொள்ளி எறும்பு போல்... உள்ளூர தவித்துப் போனாள்.

சாதாரணமாக தான் ஏதோ ஒன்று சொல்லப் போய்... கடைசியில் அது கைலாஷின் மனதை இந்தளவுக்கு கீறி ரணப்படுத்தும் என்று எதிர்பார்க்கவில்லை.

மகன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் தவித்தாள். வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கித் தவித்தன.

''என்னைப் பத்தி உனக்கே தெரியும் இல்ல? அப்பாங்கிற பந்தத்துக்கு எந்த அளவு பாசத்தையும் மரியாதையும் காட்டணும்னு எனக்கும் தெரியும்மா!... எனக்கே ரெண்டு கழுதை வயசாகுது. அவர் இந்த வயசுல... ச்சே!... வயசுக்கேத்த மாதிரியா அவர் நடந்துக்கிறார்? இதனால தான் எனக்கு அவர் மேல பாசமும், மரியாதையும் சுத்தமா போயிடுச்சு!

நாம்ப மேலே உயர்றதைப் பிடிக்காத... பொறாமை பிடிச்சவங்க வேணும்னா... அவரைப்பத்தி அசிங்கமா என் காதுபடவே பேசறாங்



''எனக்கு ஜுரம் தானே! எதுக்கு ஆபரேஷன் பண்ணனுங்கிறீங்க டாக்டர்?''

உங்க வாயிலே வெச்ச தெர்மாமீட்டரை நீங்க பாட்டுக்கு விழுங்கிட்டீங்களே... அதை யாரு வெளியிலே எடுக்கிறதாம்?''

-போளூர். சி.ரகுபதி.

கம்மா! உனக்கு வேணா... அவர் நடமாடும் தெய்வமா இருக்கலாம். 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'னு நீ பதியை பூஜிக் இற பத்தாம் பசலியா இருக்கிறதால தான் அவர்... 'பறவைகள் பலவி தம்'னு பாடிக்கிட்டு பொண்ணுங்க பின்னாடி ஓடறாரு.

திமிரும்மா! பணம் இருக்குங்கற திமிர்! குடும்பம், மனைவி, பிள்ளை, சமுதாயம்னு எதைப் பத்தியும் விசனப்படாம தன்னிஷ்டப் படி ஆட்டம் போடறா. தோ பாரும்மா! தயவு செய்து என்னை அவ ரைப் போல இருக்கேன்'னு மட்டும் சொல்லாதே! என்னைச் சீண்டிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டு... ரொம்பப் பேர் இப்படித் தான் பேச றாங்க.

'அசப்புல அப்பன் மாதிரியே இருக்கான்.... இவனும் கொஞ்ச நாள்லே அப்பனை மாதிரியே வாலாட்டிக் கிட்டு பொண்ணுங்க பின் னாடி திரியப் போறான்'னு கிண்டல் பண்றாங்க. எ... எனக்கு இதைக் கேட்டா உயிரே போகுதும்மா! ஒரு பிள்ளே தன்னோட அம்மா கிட்ட பேசக்கூடாத விஷயத்தையெல்லாம்... பேசற நிலைமைக்கு என்னை அந்தாளு ஆளாக்கிட்டார். பாத்தியாம்மா? ச்சே! எல்லாம் என் தலை யெழுத்து... டாமிட்!''

குரலுடைந்த கண்கள் குளமாக தலை குனிந்தவன்... இரு கைகளா லும் தன் தலையைப் பிடித்துக் கொண்டான். மகனின் விழிகளில் நீர் துளிர்த்ததைக் கண்டதும்.... மரகதத்திற்கு இதயத்தில் இரத்தம் கசிவ தைப் போன்றிருந்தது.

கைலாஷ் இந்த அளவிற்கு மனம் உடைந்து வேதனைப் படுவ தற்கு... வலுவான காரணம் இருந்தது என்னவோ உண்மை!

கம்பம், கம்பம் மெட்டு, குமுளி, மூணாறு போன்ற பகுதிகளில் தேயிலைத் தோட்டம், பழத்தோட்டம், ரப்பர் தோட்டம்... திரும்பின பக்கமெல்லாம் எஸ்டேட்ஸ் என்று ஏகப்பட்டவை அவர்களுக்கு சொந்தமாயிருந்தன.

தேனி நகரிலும் ஏழெட்டு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்கள், ஐந்தாறு பங்களாக்கள் இவற்றுடன் 'மரகதம் பில்டர்ஸ்', 'மரகதம் அப்ளை யன்சஸ்', 'கைலாஷ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்று ஏகப்பட்ட நிறுவ னங்களுக்கு அதிபதியாகவும் இருந்தார், குருமூர்த்தி!

சுமாரான வசதிபடைத்த குருமூர்த்தி... அந்த காலத்திலேயே ஒரே மகளாய் பிறந்து ஏகப்பட்ட சொத்துக்களுக்கு ஏகபோக வாரிசாக இருந்த மரகதத்தைக் கைப்பிடித்து... அவளுடைய சொத்துக்களை தன தாக்கிக் கொண்டார்.

மரகதம் அழகிற்குப் பெயர் போனவள் அல்ல! சுமாரான தோற் றத்திற்கும் ஒரு படி குறைவு என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் குரு மூர்த்தியோ நல்ல நிறத்துடன் சர்வ லட்சமணமான தோற்றத்து டன் ஆறடி உயரத்தில்... ஆஜானுபாகுவாய் கம்பீரமாய் இருப்பார். திரும்பின பக்கமெல்லாம் செல்வம் கொழித்துக் கொண்டிருந்தது.



இந்த காரணங்கள் போதாதா? அவர் மன்மத ராசா ஆட்டம் போடு வதற்கு? மரகதத்தின் தந்தை வேறு மகளை மணம் செய்து வைத்து விட்ட திருப்தியில் கண்களை மூட விட... தட்டிக்கேட்க ஆள் இல் லாமல் போனது... குரு மூர்த்திக்கு மிகவும் சவுகரியமாகப் போய் விட் டது.

மரகதம் மனதிற்குள் ஊமையாய் அழுது புழுவாய் துடித்தாளே தவிர... கண்டும் காணாமல் தான் நடந்து கொண்டாள். தனது தோற் றத்தைக் குறித்து உள்ளூர ஒருவித தாழ்வு மனப்பான்மை வேறு இருந்து வந்தது.' இது போதாதற்கு... 'கணவனே கண் கண்ட தெய் வம்' என்று பதியின் பால் பக்தி வைத்த பத்தாம் பசலி!

இத்தகைய காரணங்களால் சுத்தமாகக் குளிர் விட்டுப் போன குரு மூர்த்தி பிரபலமான அழகிய பெண்களின் சகவாசத்தை நாடிப் போனார். சில வருடங்களுக்கு முன்பு... அவர் புதிதாகக் கட்டி முடித் திருந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸை திறந்து வைப்பதற்காக... பிரபல குணச்சித்திர நடிகையை சென்னையிலிருந்து 'கம்பத்திற்கு' வரவ ழைத்தார்.'

திரைப்படங்கள் மூலமும், 'சின்னத்திரை' மூலமும் மக்கள் மத் தியில் நல்ல செல்வாக்குப் பெற்றவள் நடிகை மேகலா! அவளது கையால் குத்துவிளக்கேற்றி... ஷாப்பிங் காம்ப்ளக்ஸை திறந்து வைத் தால் நல்ல விளம்பரம் கிடைக்குமே என்பது குருமூர்த்தியின் வியா பார நோக்கம்!

நடுத்தர வயதைத் தாண்டி விட்ட நிலையில், அதுவும் பட வாய்ப் புகள் குறையத் தொடங்கியதால் கவலையில் மூழ்கியிருந்த மேகலா... குறுகுறுவென்று பார்வையால் துளைத்த குருமூர்த்தியை சரியாகப் புரிந்து கொண்டு... அந்த பணக்காரப் புளியங்கொம்பை வளைத்துப் பிடித்து விட்டாள்.

சென்னையை விட்டு இங்கேயே செட்டிலாகி விட்டதாகக் கேள்வி! மாதமொரு முறை.... ஒருவாரம் ஷூட்டிங்கில் கலந்து கொண்டு விட்டு இங்கேயே திரும்பி விடுவாள். எஸ்டேட்டில் ஒரு பங்களாவும் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஒன்றும் அவள் பெயருக்கு எழுதி வாங்கி விட்டதாக காற்று வாக்கில் ஒரு செய்தி பரவியிருந்தது.

தனது செல்லமகன் கலங்குவதைக் கண்ட மரகதத்திற்கு வயிற் றைப் பிசைந்தது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''கைலாஷ்! தப்பு தான்! உன் மனசு நோகும்படி எதுவும் பேச மாட்டேன்பா... நீ... நீ என்னைத்தான் உரிச்சுட்டு வந்திருக்கே! என்னை மாதிரியே தான் எல்லா விஷயத்திலும் இருக்கே! போதுமா? இந்த அம்மாவை மன்னிச்சுடு கண்ணா!'' அழுது கொண்டே மகனின் தலையை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

தாயின் சூடான கண்ணீர்த் துளிகள் கைலாஷின் நெற்றியில் பட்டு வழிந்தது. திடுமென்று கைலாஷ் சுதாரித்து இயல்பு நிலைக்குத் திரும்

பினான்.
''ஸாரிம்மா! நான் தான் உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும்!
உனக்கு பி.பி. இருக்கு... சுகர் பேஷண்ட் வேறே... நான் இன்னிக்கு
உன்னை டென்ஷன் பட வச்சுட்டேனே... ஸாரிம்மா! ..... அ...
அம்மா! மணத்தக்காளி வத்தக்குழம்பு இன்னிக்கி ஏ ஒன்னா இருக்
கும்மா! உங்க நளபாகத்துக்கு 'கிச்சன் க்வீன்' னு பட்டம் குடுத்து
கைக்கு ஒரு தங்கக் காப்பு போடணும்!'' வலிய வரவழைத்துக்
கொண்ட சிரிப்புடன் அம்மாவை ஏறிட்டான் கைலாஷ்!
''இந்த நளபாகத்தை அப்படியே இந்த வீட்டுக்கு வரப்போற மரு
மக நந்துவுக்கு கத்து கொடுத்திட்டாப் போச்சு! ஹூம்! காலா காலத்
துல உங்க கல்யாணத்தை நடத்தி.... அதை கண் குளிரப் பாத்துட்டா...
நா நிம்மதியா கண்ணை மூடிடுவேன்!''
''என்னம்மா பேச்சு இது? மறுபடியும் என்னை வருத்தப்படுத்
திப் பாக்கணுமா?''
''ஒரு பேச்சுக்கு சொன்னேன்பா! விடேன்!''
'நந்து' என்ற வார்த்தையைக் கேட்டதும்... கைலாஷுக்கு எரிச்ச
லும் ஆத்திரமும் மண்டிக் கொண்டு வந்தன.
நந்து என்ற நந்தினி... மரகதத்தின் ஒன்று விட்ட தம்பி பசுபதி
யின் மகள்! சொந்தம் விட்டுப் போகக் கூடாதென்று தம்பி மகளை
மருமகளாக்கி விடத் துடித்தாள் மரகதம்.
தனக்கு வரப்போகும் மனைவி இப்படித்தான் இருக்க வேண்டும்
என்று சில வரைமுறைகள் வகுத்து வைத்திருந்தான் கைலாஷ்! அவ
னது கற்பனையில் உதித்த தேவதைக்கும், நந்தினிக்கும்... மலைக்கும்,
மடுவுக்கும் உள்ள வித்தியாசம்' இருந்ததால்... 'நந்து' என்றாலே...
கைலாஷுக்கு நாராசமாய் இருந்தது.

## 5

தங்கச் சிலையாய் ஆற்று நீரில் முங்கிக் குளித்
தாள் கவுரி. இன்றைக்கு வழக்கத்திற்கு மாறாக வெகு
நேரம் ஆற்றில் நீந்திக் கொண்டிருந்தாள்.
முருகேஸ்வரி அசந்து தூங்கி விட்டாள் போலும்!
கோந்து போல் ஒட்டிக் கொண்டு துணைக்கு வருப
வள் இன்றைக்கு ஆளைக் காணோம்.
கவுரிக்கு வீட்டிற்குச் செல்லவே தயக்கமாக இருந்
தது. மூன்று நாட்களுக்கு முன் வந்த ராமதுரை வீட்
டோடு தங்கி விட்டிருந்தான். அம்மா தங்க லட்சுமிக்கு போன் செய்து
பேசி அவளையும் அன்று சாயந்தரமே வரவழைத்திருந்தான்.
கவுரி கல்லூரிக்குச் சென்று விட்டு மாலையில் வீடு திரும்பியது
தான் தாமதம்! இருண்ட முகத்துடன் ஆவேசமாக வீட்டிற்குள் நுழைந்
தாள் தங்க லட்சுமி.
''வா... வாங்க அத்தே! சௌக்கியமா?''



''உம்... உம்! ஆமா...
என்ன நடக்குது இங்க? கூப்
பிடு உன் ஆத்தாளை?'' வெண்
கலக் குரலில் கத்தினாள்.
சரக்கைகளை முந்தானை
யில் துடைத்துக் கொண்டு
அடுப்பங்கரையிலிருந்து
அடித்துப்புரண்டு ஓடி வந்
தாள் காமாட்சி.
''அண்ணன் பொஞ்சா
தின்னு பாக்கறேன்! இல்
லேன்னா... மருவாதை கெட்
டுப் போயிடும்! நெஞ்சுல என்
னாவொரு நெஞ்சழுத்தம்?
உன் மக பொறந்ததுலேர்ந்து...
என் மகன் ராமதுரைக்கு அவ
ளைக் கண்ணாலம் கட்ட
ணும்னு பேசினோமா இல்
லையா?''
''யார் இல்லேன்னா
சொன்னா? வந்ததும் வராத
துமா ஏன் வம்புச்சண்டைக்கு
வர்றீக? கத்துன கத்துல்லே
எனக்கு தூக்கி வாரிப்போட்டு
ருச்சு!'' குரலில் எரிச்சல்
தொனிக்கப்பேசி விட்டாள், காமாட்சி.



''என்ன சார்...! இப்பத்
தான் சாப்பிட்டுப்
போனீங்க...! அதற்குள் சாப்
பிட வந்திட்டீங்களே...!''
என் னப் பண் றது ...!
உனக்கு ருபாகசக்தி அதிகம்
எனக்கு ஜீரண சக்தி அதிகம்!''
-தேனி. எஸ்.மாரியப்பன்.

''எங்கண்ணனை கட்டிக்கிட்டு ஏகபோகமா இருக்கியே... அந்த
ஏத்தத்துல பேசுறியா? உன் மக படிச்சுப்போட்டு வந்ததும்... நல்ல
மவராசனா பாத்து அவன் கையில இவளை ஒப்படைக்கணும்னு
பேசினியாமே? இந்த பேச்சை இன்னிக்கோட நிறுத்திக்கோ!
இதுவே வேற யாராச்சும் சொல்லியிருந்தா... நாக்கை இழுத்து
வச்சு ஒட்ட அறுத்திருப்பேன். சாக்கிரதை!''
ருத்ர தாண்டவம் ஆடினாள் தங்கலட்சுமி.
''விரலை நீட்டிப்பேசறீகளே? உங்கண்ணன் இல்லாத நேரத்துல
கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணா பயந்துடுவேன்னு பாத்தீகளா? கவுரி
என் பொண்ணு! அவ வருங்காலத்தைப் பத்தின முடிவை நாங்க
தான் எடுக்கணும்!''
''என்னாடி சொல்ல வர்றே?'' கர்ஜித்தபடி காமாட்சியை அவள்
நெருங்கவும் கவுரி பயந்து விட்டாள்.
''அம்மா! அம்மா! நீ உள்ளே போம்மா! ப்ளீஸ்... அத்தே! நீங்க

அம்மா இருங்க! என்னத்துக்கு இப்போ சண்டை? என்னிக்கோ நடக்கப்போற சங்கதிக்கு... இப்போ இருந்தே வார்த்தைகளைக் கொட்டி... மனஸ்தாபம் எதுக்கு? விடுங்க எனக்காக பிளீஸ்! அப்பா வந்துடுவாரு அவர்கிட்ட அப்புறமா பேசிக்கோங்க!''

அவளை ஒரு வழியாக சமாதானப்படுத்துவதற்குள் கவுரிக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

கவலையுடன் தன் அறைக்குச் செல்லத் திரும்பியவளுக்கு திக்கென்றிருந்தது.

கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து ஆடியபடி ராமதுரை பார்வையால் அவளைத் துளைத்தெடுத்தான். உள்ளூர கூசிப்போனாள் கவுரி.

கொளுத்திப்போட்டு விட்ட திருப்தியில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தவனைக் கண்டதும்... கோபத்தில் உள் மனம் கொதித்தது.

கண்கள் வெறுப்பை உமிழ சட்டென்று அறைக்குள் புகுந்து கொண்டாள். இரண்டு மூன்று நாட்களாக இதே கூத்து தான்!

கல்லூரிக்கும் மாலையில் கம்ப்யூட்டர் கிளாஸுக்கும் சென்று வந்த நேரம் தவிர... வீட்டில் அவள் இருந்த தருணங்களில்... 'அத்தான்' என்ற உரிமையை வைத்துக் கொண்டு... அடிக்கடி அவளிடம் பேச்சு கொடுத்தான். அவனது சல்லித்தனமான பார்வையையும், கோணலான சிரிப்பையும் கண்டாலே கம்பளிப்பூச்சி தேகமெங்கும் ஊர்வது போன்றதொரு அருவருப்பு ஏற்பட்டது.

அரைமனதோடு கரையேறிய கவுரி... தழைந்த பாவாடையின் அடிமுனையைத் திரட்டி நீரைப்பிழிந்தாள். ஆலமரத்தின் அடிவேரில் போட்டு வைத்த பெரிய பூத்துவாலையை எடுத்து தோளைச் சுற்றி போர்த்திக் கொண்டு நிமிர்ந்தவளுக்கு பக்கென்றிருந்தது.

''என்ன கவுரி? ஆத்துல குளிச்சுட்டு வர்றியா?'' அபத்தமான கேள்வியைக் கேட்டு விட்டு அசட்டுத்தனமாய் சிரித்தான் செந்தில் சொக்கலிங்கத்தின் இளைய தங்கை வைரமணியின் மகன்!

''இவன் எப்படி இங்க வரமுடியும்னு பாக்கறியா? வழியில காவலுக்கு இருந்த மருதுகிட்ட சொக்கலிங்கம் மாமா வெளியில எங்கியோ அவசரமா போகணுமாம். வில்லுவண்டி பூட்டச்சொன்னாருன்னு சொன்னேன். ஆளு அப்படியே போயிட்டாப்பல''

''நான் தான் அஞ்சு நிமிஷத்துல வீட்டுக்கு வந்துடுவேன்ல ஆத்தங்கரை வரைக்கும் ஏன் வந்து மெனக்கெடறீங்க?'' பட்டென்று கேட்டு விட்டு விடுவிடுவென்று வரப்பு வழியாக நடந்தாள்.

''அத்தான் ஒரு மாசமா உன்னைப் பாக்க வரலியேன்னு... கோபப்படறியா கவுரி?''

அவனது வருகைக்காக ஏங்கி உருகி காத்திருக்கும் காதலியிடம் பேசுவது போல் உரிமையுடன் பின்னால் வந்தவனைத் திரும்பி ஏறிட்டாள்.

''பிளீஸ்! நீங்க படிச்சவர்... ராமதுரை அத்தான் தான் கொஞ்சம்



கூட இங்கிதமே தெரியாம நடந்துக்கிறாருன்னா... நீங்களுமா? பிளீஸ்... செந்தில் அத்தான் முன்னாடி நீங்க நடங்க...!''

மந்திரத்திற்கு கட்டுண்டவனைப் போல் தலை குனிந்தபடி விருட்டென்று நடந்தான், செந்தில்.

வைரமணி அத்தை வீட்டிற்கு நிச்சயம் வந்திருப்பாள் என்று கவுரி ஊகித்தாள்.

வைரமணி ஆண்டிபட்டியில் வாழ்க்கைப் பட்டிருந்தாள். இவளுக்கு இரு மகன்கள்... மூத்தவன் செந்திலுக்கு அண்ணன் மகளைக் கட்டி வைத்து விட வேண்டும் என்று துடியாய் துடித்தாள்.

செந்தில் அரியர்ஸ் வைத்து திக்கித்திணறி ஒரு வழியாக பி.காம். முடித்து விட்டிருந்தான். தாய் மாமன் சொக்கலிங்கத்திடம் பணத்தைப் பெற்று... பஞ்சு மார்க்கெட் வியாபாரத்தில் இறங்கி... ஓரளவு நல்ல லாபத்தையும் ஈட்டிக் கொண்டிருந்தான்.

தங்கச் சிலையாய்... கண்ணைக் கட்டிப்போடும் அழகுடன் மிளிர்ந்த கவுரியை மணந்து கொள்ள வேண்டும் என்று பல வருடங்களாக மனக்கோட்டை கட்டி வைத்திருந்தான் செந்தில்.

பட்டதாரியான தனக்குத்தான் மாமன் சொக்கலிங்கம் தனது அருமை மகளை தாரை வார்த்துத் தருவார் என்று கலர் கலராய் கனவு கண்டு கொண்டிருந்தான், செந்தில்.

பெயருக்குத்தான் சொக்கலிங்கத்தின் தங்கைகள் தங்கலட்சுமியும், வைரமணியும்... 'போடி'யிலும் 'ஆண்டிபட்டி'யிலும் வாழ்க்கைப்பட்டார்களே தவிர... மாதத்தில் பாதி நாட்களுக்கு மேல் அண்ணன் வீட்டிற்கு மாறி மாறி வந்து 'டேரா' அடித்துத் தங்கினர்.

சில சமயத்தில் சொல்லி வைத்தாற்போல்... இருவரும் வந்து இறங்குவதும் உண்டு.

அண்ணனின் திரண்ட சொத்துக்கள் அனைத்தும் கவுரியின் மூலம் தங்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற பேராசையில்... அக்கா தங்கைகள் இருவரும் 'பனிப்போர்' நடத்தினார்கள்.

சமயத்தில்... பேச்சுவார்த்தை முற்றி பெருங்குரலில் கத்தி கூச்சலிட்டு ரகளை செய்வதோடு... குடுமிச்சண்டை போட்டு... வீட்டு வேலைக்காரர்களும் தெரு ஜனங்களும் கூடி வந்து மத்தியஸ்தம் செய்யும் அளவு வரம்பை மீறவும் செய்தார்கள்.

ஆனால்... அண்ணனின் தலையைக் கண்டாலே... தங்கைகள் இருவரும் பெட்டிப்பாம்பு போல் அடங்கி விடுவார்கள்.

அவரவர் ஊருக்குச் செல்லும் போது... வேண்டிய பணத்தைக் கொடுத்து ஐந்தாறு பைகள் நிறைய பழங்கள், பட்சணங்கள், தானிய வகைகள், மிளகாய், பருப்பு என்று பலசரக்கு வகையறாக்களை தாராளமாக அள்ளி வைத்து தான் அனுப்பினர் சொக்கலிங்கம் தம்பதியினர்.

அத்தைகள் வந்து தங்குவதை கௌரி ஒரு நாளும் இடைஞ்சலா

கக் கருதியதில்லை. வேண்டிய பணம், சீர் எடுத்துச் சென்றதையும் பொருட்டாக நினைக்கவில்லை.

'அண்ணன் மனைவி காமாட்சி சுகபோகமாய் ஆண்டு அனுபவிக்கிறாளே' என்று இருவருக்குமே உள்ளூர நமைச்சல்! பொறாமையில் பொசுங்கி வயிற்றெரிச்சல் தாளாமல்... காமாட்சியை சதா குத்திப் பேசி குடைந்து அவளை ரணப்படுத்துவார்கள்.

இதைத்தான் கவுரியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. 'உறவு முறைக்குள்ளே இது சகஜம் ஆத்தா! கண்டுக்காம போயிடணும்! அட... ரெண்டு மொணங்கு மொணங்கிட்டு போய்த் தொலையட்டுமே... குத்தம் பாத்தா... சுற்றம் இல்லை ராசாத்தி!''

சொக்கலிங்கம் காமாட்சியையும், கவுரியையும் அடக்கி விடுவார்.

''இன்னிக்கி இல்லாட்டியும்... நம்ம கௌரி கண்ணாலத்துல பெரிய பூகம்பம் வெடிக்கப்போகுது பாருங்க... நா சொல்லிப்புட்டேன்னு வருத்தப்படாதீக... உங்க தங்கச்சி பயலுகளுக்கு நாம பொண்ணைத் தரப்போறதில்லைன்னு முடிவு பண்ணி இருக்கோம்... கண்ணாலம் நடக்கற சமயத்துல... உங்க தங்கச்சிங்க குடும்பத்தோட வந்து என்னைத்தேன் கூறு போடுவாளுங்க பாருங்க!''

''செரி! அத நெனச்சு இப்ப இருந்தே ஏன் வெசனப்படறே? அவளுங்களை எப்படி செரி கட்டி வாயை அடைக்கணும்னு எனக்குத் தெரியும்'' நீ கொஞ்சம் சொம்மா இரேன்!'' என்று வீராப்பாக பதிலளித்தாலும்... சொக்கலிங்கத்திற்கு அடி வயிற்றில் அமிலம் சுரந்ததை... கவுரியால் புரிந்து கொள்ள முடிந்தது.

எப்படியும் தனது திருமண சமயத்தில்... உறவுத்தலைகளுக்குள் பிரச்சனை பூதாகரமாக வெடித்து... பகை உருவாகும் சூழல் ஏற்படும் என்பதை எண்ணும் போதே... கவுரியின் இதயம் இரும்பு குண்டாய்






கனத்தது.

அலை அலையாய் எண்ணங்கள் எழும்பி இதயத்தை மோதின. 'இன்றைக்கு என்ன பிரச்சனை கிளம்பப்போகுதோ?' தயங்கியபடி வீட்டை அடைந்தாள் கவுரி.

செந்தில் கூறியபடி...வில் வண்டியைப் பூட்டிக் கொண்டு மருதுவுடன் எங்கோ சென்று விட்டிருந்தார் சொக்கலிங்கம்.

கரும்பச்சை வண்ண பட்டுப்பாவாடை தாவணி அணிந்து கூந்தலை வாரித்தழைய பின்னலிட்டு விட்டு வெளிப்பட்ட கவுரி... மாடியில் விருந்தினர் அறையில் தங்கியிருந்த சின்ன அத்தை வைரமணி செந்திலுடன் மலர்ந்த முகத்துடன் பேசி விட்டு இறங்கி வந்தாள். ஹேண்ட் பேக்கில் இரு புத்தகங்களைத் திணித்துக் கொண்டாள்.

காமாட்சி அடுப்பங்கரையில் சமையல்காரியிடம் விருந்தாளிகளுக்குப் பிடித்த அயிட்டங்களை பட்டியலிட்டுக் கொண்டிருந்தாள்.

கௌரியைக் கண்டதும் வேகமாக வெளியில் வந்தாள். ''இன்னிக்கி... உனக்கு சாம்பிராணி கூட நா போடலை தாயி! ஈரம் காயும் முன்ன பின்னல் போட்டுட்டியே... செரி! இரு... பலகாரம் கொண்டாரேன்!'' நகர முற்பட்டவளின் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

''வேணாம்மா! டைமாச்சு! காலேஜ் கேன்டீன்ல சாப்பிட்டுக்குவேன். நா கிளம்பறேன் வாம்மா!''

''இப்டி வயித்தைக் காயப்போட்டா... எப்டிம்மா?'' புலம்பியபடி வாசலுக்கு வந்தாள் காமாட்சி. டிரைவர் காரைக் கிளப்பும் முன் வீட்டிற்குள் ஓடி மல்லிகை சரத்தை எடுத்துக் கொண்டு மகளின் தலையில் சூட்டி விட்டாள். மலரைப் போன்று மென்மையான மனம் படைத்தவள் கவுரி.

அதில் புதிய இரசாயன மாற்றம் இன்றைக்கு உருவாகப்போகின்றது என்பதை அவள் கனவிலும் கருதவில்லை!

## 6

**வா**னம் மேகமெனும் தூரிகை கொண்டு மழையெனும் அழகிய ஓவியத்தை பூமியின் மீது வரைய ஆரம்பித்தது! மரம் செடி கொடிகளும் மலர்களும்... அந்த ஓவியத்திற்கு வித விதமாய் வண்ணம் சேர்த்து பொலிவூட்டின.

கல்லூரிக்குச் சென்று திரும்பி வரும் போது மழையின் வேகம் குறைந்து... இலேசாய் வானம் தூறிக் கொண்டிருந்தது.

டிரைவர் மிதமான வேகத்தில் காரை சாலையில் செலுத்திக் கொண்டிருந்தான்.

''கவுரி! ரொம்ப தேங்க்ஸ்டி... நானும் உன்கூட காலேஜ் வரைக்கும் படிப்பேன்னு கனவுல நெனச்சுப் பாக்கலைடி... ஏன்னா நா ஒரு

மக்கு! எல்லாம் சமயத்துல எனக்காக டயம் ஒதுக்கி... பாஸ்மார்க் எடுக்கற அளவுக்கு தேத்தி விட்டு கரையேத்திடறே! அப்பாடி! இன்விக்கோட இந்த செமஸ்டர் எக்ஸாம் முடிஞ்சதை நெனச்சா... மலையளவு பாரத்தை இறக்கி வச்ச மாதிரி இருக்குடி!'' என்றபடி கவுரியின் கரத்தைத் தொட்டாள் முருகேஸ்வரி.

சாலையின் இரு புறமும் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த கவுரி முறுவலித்து விட்டு ''தேங்க்ஸ் எல்லாம் சொல்லி என்னை ஏன் அன்னியப்படுத்தறே முருகி?'' என்றாள்.

''ஸாரி! அட.... சாரலடிக்குது இல்லே.... கண்ணாடியை ஏத்தி விடாம இருக்கியே?''

''வானம் பன்னீர் தெளிக்குது முருகி! முழுசா நனையத்தான் குடுத்து வைக்கல... அட்லீஸ்ட்... இதையாவது ரசனையோட அனுபவிக்கலாமே!''

''ஆத்துல குளிக்கிறது, மழையில நனையறதுன்னு கிறுக்குத்தனமா திரியறியே வகுப்புல பர்ஸ்ட் மார்க்! புத்திசாலி! முரண்பாடான குணாதிசயம்டி உனக்கு!'' முருகி தன்பாட்டில் முணுமுணுத்துக் கொண்டதை இலட்சியம் செய்யாமல் கவுரி பதட்டத்துடன் டிரைவரை ஏறிட்டாள்.

''அண்ணே! காரை நிப்பாட்டுங்க ப்ளீஸ்!'' கார்க்கதவைப் படாரென்று திறந்து கொண்டு ஓடினாள் கவுரி.

சாலையின் இடதுபுறமாய் இருந்த அரசமரத்தின் அடியில் மழையில் நனைந்து வெடவெடவென்று நடுங்கியபடி... சிறிய நாய்க்குட்டி ஒன்று ஹீனஸ்வரத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

கவுரி பாய்ந்தோடி வந்து அதை வாரி எடுத்துக்கொண்டு மார்போடு அணைத்துக் கொண்டாள். கருணை பொங்கும் விழிகளால் நாய்க்குட்டியை ஆதுரமாகப் பார்த்தபடி மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

''ஏண்டி! கவுரி! உனக்கு கிறுக்கா பிடிச்சிருக்கு? அது தெரு நாய்டி... உங்கப்பா கிட்ட நீ கேட்டா... உயர் சாதி ரக நாய்க்குட்டியை வாங்கித்தந்துட்டுப் போறாரு... தாவணியில அழுக்கு அப்பிக்கப் போகுது... பாரேன்! அது கெடந்த எடத்துலயே விட்டுட்டு வாடி!'' காரிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தபடி முருகேஸ்வரி கடிந்து கொண்டாள்.

''பாவம் முருகி! வாயில்லா ஜீவன்! தெரு நாய்னு இளக்காரமா பேசாதே... இப்டியே விட்டுட்டுப் போனா... அது உசுரை விட்டுடும். 'எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டணும்'னு படிச்சிருக்கோம். நீ கொஞ்சம் கம்முனு இருடி!''

நாய்க்குட்டியை தடவிக் கொடுத்தபடி தற்செயலாக சாலையின் எதிர்த்திசையில் பார்வையை பதித்தாள் கவுரி.

''ஆஜானுபாகுவாய் சபாரி சூட்டில் களை பொருந்திய முகத்து



டன் கையில் செல் போனுடன் நின்றிருந்த இளைஞன்... இமை கொட்டாமல் தன்னை விழுங்குவதைப் போன்று பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும்... உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் முகத்திற்கு வந்து விட்டதைப் போன்று குப்பென்று கவுரியின் அழகு முகம் சிவந்து போனது.

இதயத்தில் புறாக்கள் சிறகடித்தன.

மனம் மத்தளம் வாசித்தது.

வறண்டு கிடந்த இதயத்தில் லட்சோப லட்சம் வண்ண மலர்கள் ஒரு சேரப் பூத்தது போலிருந்தது.

''யார் இவன்? பல வருடங்கள் இவனுடன் பழகினாற் போன்ற உணர்வு ஏற்படுகிறதே... ஏன்? இதற்கு முன் இவனை எங்கு பார்த்தோம்? அவளது இளம் உள்ளம் அடுக்கடுக்காய் கேள்விக் கணைகளைத் தொடுத்தது.

குமுளியிலிருந்து தேனியிலிருந்த தனது அலுவலகத்திற்குச் செல்ல வேகமாக காரைச் செலுத்திக் கொண்டு வந்தான் கைலாஷ். எஸ்டேட்களை கவனித்துக் கொள்ளும் சூபர்வைசர்களுடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு... சற்று தாமதமாகத் தான் கிளம்பினான்.

வரும் வழியில் திடீரென்று கோடை மழை வலுத்து விட்டதால்... மலைச் சரிவில் சர்வ ஜாக்கிரதையாக வளைத்து ஒடித்து கம்பத்திற்கு வரும் வரை மெதுவாக காரையோட்டினான்.

கம்பத்தைத் தாண்டியதும் கார் வேகமெடுத்துப் பறந்தது. 'செல்' அவசரக் குரலில் அலறியது. 'செல்'லில் ஒளிர்ந்த எண்களை நோட்டமிட்டான் கைலாஷ்!

'நந்தினி...!'

'சட்!' சட்டென்று லைனை கட் செய்து விட்டவனுக்கு... எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

நந்தினி.... நிகரற்ற அழகி தான்! நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் நவ நாகரீகமான யுவதி தான்! பந்தயக் குதிரை போன்ற நடையுடன் கண்களில் ஒரு வித செருக்குடன் மிதப்பாக அலைபவள்.

கைலாஷுக்கு அவளைக் கட்டோடு பிடிக்காது. அவளைப் போய் தனக்கு மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்று பல வருடங்களாகக் கனவு கண்டிருந்தாள் அம்மா மரகதம்.

''தம்பி பசுபதி நல்லவன்பா! நந்துவுக்கு குழந்தை மனசுப்பா... கள்ளம் கபடமில்லாம பேசுறா... மனசுல எதுவுமே வச்சுக்கத் தெரியாத வெகுளிப் பொண்ணு... அவ கண்ணைப்பாரேன்... சூது வாது தெரியாத குழந்தை மாதிரி அப்பாவித் தனம் தான் தெரியும்!'' என்பாள் மரகதம்.

கைலாஷ் உள்ளூர நொந்து போவான். மரகதத்தைக் காண்கையில் மட்டும் தான்... அந்த கண்களில் குழந்தைத் தனத்தைத் தேக்கி காட்டு

றான். அதே சமயம் கைலாஷ் பார்க்கும் போது... அந்த விழிகளில் 'மனதை வசியப்படுத்தும் ஈர்ப்பு சக்தி அல்லவா தென்படுகின்றது?

இதை எப்படி தாயிடம் விளக்கிச் சொல்வது? கைலாஷ் இல்லாத சமயங்களில் மரகதத்தை அடிக்கடி சந்தித்து அவள் மனதில் இடம் பிடித்து... ஒருவாறாக மூளைச் சலவை செய்து விட்டிருந்தாள் நந்தினி. மரகதம் கெஞ்சும் போதெல்லாம் கல்யாணப் பேச்சிற்கு பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டிருந்தான்.

மரகதம் கிழித்த கோட்டை இது வரை தாண்டியறியாதவன் தான்! அப்பாவால் ரணப்பட்டுக் கிடந்த அவள் மனதை தானும் தன் விருப்பமின்மையைத் தெரிவித்து... புண்படுத்த விரும்பவில்லை.

தக்க தருணம் வரும் போது சொல்லிக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்தான் கைலாஷ்!

''ட்ரிங்!...ட்ரிங்!'' எரிச்சலுடன் எண்களைப் பார்த்தான். அவனது ஆடிட்டரிடமிருந்து அழைப்பு...!

செல்லை ஆன் செய்து அவருடன் பேச முற்படும் போது லைன் கட்டானது. அதற்குள் அவனது கார் 'வீரபாண்டியை'த் தாண்டி விட்டிருந்தது. 'இன்னமும் எட்டு கிலோ மீட்டர் தானே...! தேனி வந்து, விடும்! அலுவலகத்திற்குச் சென்று விட்டு தொடர்பு கொள்ளலாம்' என்ற எண்ணத்தில் காரைத் தொடர்ந்து செலுத்தினான்.

அதற்குள் மூன்று முறை அழைப்பு வந்து வந்து கட்டானதும் காரை சாலையோரம் நிறுத்தி விட்டு கீழே இறங்கினான். சிக்னல் கிடைக்காமலிருந்தது போலும்! செல்லில் மீண்டும் அழைப்பு வர... 'ஆன்' செய்து பேச வேண்டியதை பேசிக் கொண்டே எதிர்ப்புறம் விழிகளை யோட்டினான் கைலாஷ்.

''டாக்டர் இல்லைன்னா நர்ஸ்ங்க பாடு படு ஜாலி தான்...''


''அப்படியா?''

''ஆமாம் அங்கே பாருங்க மாத்திரகளை வெச்சு, நர்ஸ்ங்க எல்லாம் பல்லாங்குழி விளையாடுவதை!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.







கரும் பச்சை வண்ணப்பட்டுப் பாவாடை தாவணியில் தேவதை போன்ற பெண் ஓடி வந்து... அரச மரத்தடியிலிருந்த நாயக்குட்டியை கருணையுடன் எடுத்து அணைத்துக் கொண்ட போது கிட்டத்தட்ட அதிர்ந்தே போனான்.

'நிலவைப் போன்ற வட்ட முகம், அகன்ற கண்கள், சிவந்த இதழ்கள், அடர்ந்த கூந்தல் அதில் சூடியிருந்த மல்லிகைச் சரம்!

இவள் சிலையா? ஓவியமா? வானத்திலிருந்து இறங்கி வந்த அன்பு தேவதையா?

கேள்விகளை சுமந்த வண்ணம் எண்ண அலைகள் எழும்பி மோதின.

'ஹோம்லி லுக்!... தனக்கு வரப் போகும் மனைவி எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்தானோ... அந்த கற்பனையின் மொத்த உருவமாகத் திகழ்ந்தாள் கவுரி.

காரிலிருந்து முருகேஸ்வரி அவளை கடிந்து கொண்டதையும் கவுரி சொன்ன பதிலையும் கேட்டுக் கொண்டே... ஆணி அடித்து விட்ட தினுசில் அவளையே பார்த்தான்.

அதுவரை இருண்டு கிடந்த அவனது முகத்தில் பளீரென மின்னல் தோன்றியதைப் போல் சந்தோஷ வெளிச்சம் பரவியது.

மாசு மருவற்ற முகத்தின் அழகை கண்களின் வழியே அனுப்பி இதயத்தில் சிறைப்படுத்திக் கொண்டான்.

'இந்த அப்பழுக்கற்ற அன்பு தேவதையை எனக்காவே கடவுள் அனுப்பியிருக்கிறார்' என்ற எண்ணம் ஆணிவேராய் ஆழமாய்' பதிந்து இறங்கியது.

''ஏண்டி கவுரி! மழையில தெரு நாயைத் தூக்கிட்டு குத்துக் கல்லாட்டம் நிக்கிறியே வர வர உன் கிறுக்குத் தனம் சாஸ்தியா போகுதுடி என்னை நீ ரசனை கெட்ட ஜென்மம்னு சொன்னாக்கூட பரவாயில்லைடி ஆனா ரசனைங்கிற பேர்லே ஆத்துல குளிக்கிறே... மழையில நனையிறே கோயில் கோபுரத்தைப் பாத்துட்டா கண்ணை மூடிக்கிட்டு கும்பிட ஆரம்பிச்சுடறே...!

போன வாட்டி பெஞ்ச மழையில... நிறைய மரம் ஆத்துல அடிச்சுக்கிட்டு போயிடுச்சுன்னு மரக்கன்றுகளை வாங்கி ஆத்தோரமா நிறைய நட்டு வச்சிருக்கே ஏண்டி கவுரி! யாராவது பாத்தாக்க... மரை கழண்ட அரை லூசுப் பொண்ணுனு நெனக்கப் போறாங்கடி!'' என்று சத்தமாய் பேசிக்கொண்டே காரைவிட்டு இறங்கி அவளது கையைப் பிடித்து இழுத்தாள் முருகேஸ்வரி.

''இதோ வந்துட்டேன் முருகி!'' முணுமுணுத்தபடி மெல்ல அடி எடுத்து வைத்தாள். கால்கள் பூமியை விட்டுப் பெயர மறுத்தன.

தழைத்திருந்த பார்வையை மீண்டும் சாலையின் எதிர்ப்பக்கமாய் வீசினாள். அவளது வலதுகரம் மிருதுவாக நாய்க்குட்டியைத் தடவியது.



மீண்டும் நான்கு விழிகளும் சந்தித்துக் கொண்டன. மின்னல் வெட்டியது. இதயங்கள் தடம் புரண்டு இடம் மாறிக் கொண்டன.

'இந்த ஒரு தருணத்திற்காகவே ஜென்ம ஜென்மமாய் காத்திருந்தது போன்ற உணர்வு இருவருக்குள்ளும் தலை தூக்கியது.

கவுரி ஏறி அமர்ந்ததும் கார் விருட்டென்று வீரபாண்டியை நோக்கிப் பறந்தது. கைலாஷுக்கு தன் உடம்பிலிருந்த உயிரை யாரோ உருவி எடுத்து விட்டது போலிருந்தது. கார் சென்ற திக்கையே வெகு நேரம் வெறித்துக் கொண்டு நின்றான்.

**7**

**வீ**ரபாண்டித் திருவிழா! தேனியைச் சுற்றியிருக்கும் எட்டுப்பட்டி கிராமங்களும் திரண்டு திருவிழாவைக் காண வந்து விடுவதால்... 'வீரபாண்டியே' திமிலோகப்படும்!

எட்டுப்பட்டியிலிருந்து மட்டுமல்ல தென்னகத்தின் பல ஊர்களிலிருந்தும் எண்ணற்ற மக்கள்... கவுமாரி அம்மனுக்கு காணிக்கை செலுத்தவும் வேண்டுதல் நிறைவேற்றவும் திருவிழா கேளிக்கைகளை வேடிக்கை பார்க்கவும்... வந்து குவிந்த வண்ணம் இருந்தார்கள்.

கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் எண்ணற்ற கடைகள் முளைத்து விட்டிருந்தன. அடிக்கொரு மூங்கில்கள் நடப்பட்டு விளக்குகள் பொருத்தப்பட்டு.. வர்ணமயமாய் பார்க்க தேவலோகம் போல் ஜெக ஜோதியாக இருந்தது.

ராட்சத ராட்டினங்கள், குடை ராட்டினங்கள், பொருட்காட்சி அயிட்டங்கள் முதலியன... சிறுவர்களையும், இளம் வயதினரையும் கொக்கி போட்டு ஈர்த்தன.

கவுரியின் வீடே களைகட்டியிருந்தது. வருடா வருடம் வீரபாண்டி திருவிழாவின் போது சொக்கலிங்கமும், காமாட்சியும் தீச்சட்டி எடுப்பார்கள். எட்டுப்பட்டிகளிலும் இருந்த உறவுத்தலைகள் எல்லோரும் திரண்டு வந்து விடுவதால்... வீடே அமர்க்களத்தில் இரண்டு பட்டுப் போகும்.

கவுரி அடுப்படிக்கு பரபரப்பாகச் சென்றாள். சமையல் காரமம்மா போட்டுக் கொடுத்த காபியை ஏழெட்டு தம்ளர்களில் நிறைத்து... ட்ரேயில் அவற்றை வைத்துக் கொண்டு வெளிப்பட்டாள்.

''முருகி! கெஸ்ட் எல்லாத்துக்கும் காபி கொடுத்துடணும் யாருக்கும் விட்டுப் போயிடக் கூடாது. சரியா? இந்தா... நான் இன்னும் பத்து டம்ளர்ஸ்லே காபி எடுத்துட்டு வரேன்!'' அதெல்லாம் கரெக்டா பாத்துடறேன் கீழே இருக்கிற கெஸ்ட் எல்லாருக்கும் குடுத்தாச்சு டோண்ட் ஒர்ரிடி!'' ட்ரேயை வாங்கிக் கொண்டு ம்மாடிக்கு விரைந்தாள்

முருகேஸ்வரி.

வருடா வருடம் உறவுத் தலைகள் திரண்டு வரும் போது முருகேஸ்வரி.. கவுரியுடனே தங்கி விடுவாள்.

''ஏ.. புள்ள முருகி! புள்ள கவுரி! அவசரத்துக்கு வெரசா வருதுகளா பாரு.. ஏ... முருகி!'' என்று இரைந்தார் முத்துப்பாண்டி.

முத்துப்பாண்டி முருகேஸ்வரியின் தந்தை மட்டுமல்ல அந்த சிற்றூரின் மணியக்காரரும் அவர் தான்! சொக்கலிங்கத்தின் நெருங்கிய சிநேகிதன் வேறு.

''என்ன மாமா?'' ஓட்டமும் நடையுமாக ஓடி வந்தாள் கவுரி. ''தீச்சட்டியில் தீ வளக்கறதுக்கு... வேப்பங்குச்சிகளைப் பதமா சீவி காய வைச்சு தயாரா இருக்குல்லே?

''எல்லாம் ரெடியா இருக்கு மாமா?''

''சரி! சரக்கெல்லாம் எக்கச்சக்கமா வாங்கிப்புட்டோம். சமையல்காரப்பசங்க கேக்கற அளவை மட்டும் பாத்து எடுத்துக்குடு போதும்! இந்தா லிஸ்டும், சொச்சப் பணமும்... வாரேன் புள்ள!'' பரபரப்பாக ஓடினார் முத்துப்பாண்டி.

கவுயின் வீட்டிற்குப் பக்கவாட்டில் காலியாக இருந்த நிலத்தில் பெரிய கீற்றுக் கொட்டகை போடப்பட்டிருந்தது. முன் பகுதியில் விருந்தினர்களுக்கு பந்தி பரிமாறுவதற்கு ஏதுவாக... பெஞ்சுகளும் சேர்களும் தயாராக போடப்பட்டிருந்தன. பின் பகுதியில் பெரிய, பெரிய அடுப்புகளில் சமையல் தயாராகிக் கொண்டிருந்தது.

முத்துப்பாண்டியும், மருதப்பனும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார்கள்.

உறவு தலைகள் புடைசூழ சொக்கலிங்கம் தம்பதியினர் மஞ்சள் ஆடை அணிந்து கொண்டு முல்லை ஆற்றின் கரையில் முறைப்படி தீ வளர்த்தனர். தீச்சட்டி ஏந்தய படி உறவினர்கள் உச்சஸ்தாயியில் குலவையிட... வீதியை சுற்றி வந்து கோவிலுக்குள் நுழைந்தனர்.

கோவில் பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து தீச்சட்டியை அதற்குரிய பிரம்மாண்டமான தொட்டியில் சோர்பித்தனர். ஆயிரக்கணக்கில் அங்கே தீச்சட்டிகள் குவிந்து கிடந்தன.

அன்று அதிகாலையிலேயே கவுரியை தனியாக அழைத்து ''ஆத்தா கவுரி! ஒன்னோட கொணத்துக்கும் அழகுக்கும் ஏத்த மாப்பிள்ளை வாய்க்கணும்னு... ஆத்தாளை வேண்டிக்கதாயி... நீ அமோகமா வாழணும்னு தான் வருஷா வருஷம் நாங்க தீச்சட்டி ஏந்தறோம் கவுரி!'' என்று நா தழுதழுக்கப் பேசினார். சொக்கலிங்கம்.

''சரிப்பா! அப்டியே வேண்டிக்கிறேன்பா!'' கவுரியின் குரல் தயங்கி கிசுகிசுப்பாக வெளிப்பட்டது.

சில வருடங்களாக அவளும் அந்த கோரிக்கையை அம்பாளிடம் வைத்து வேண்டிக் கொண்டு தான் இருந்தாள்.

இருபது நாட்களுக்கு முன்... சாலையில் அந்த இளைஞனைக்






கண்ட பிறகு... அது காலம் வரை மொட்டாக கூம்பியிருந்த அவளது இதயம் மொட்டவிழ்ந்து மலர்ந்து.. அந்த களை பொருந்திய முகத்தைத் தன்னுள் பதித்துக் கொண்டது.

அவனே தனக்கு கணவனாக வாய்க்க வேண்டும் என்று மனம் நப்பாசை பட்டது.

'யார் அவன்? எந்த ஊரைச் சேர்ந்தவன்? பெயர் என்ன?' என்று எதுவுமே தெரியாமலிருந்தாலும்... இந்த பாழும் மனம் அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறதே?''

அவளையும் மீறி அவளது இதயக்கதவுகள்... அந்த இளைஞனை சிறைப் படுத்தி வைத்திருந்த அதிசயத்தை எண்ணி அவளுக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை!

''அம்மா! தயாபுரி! யார் எவருன்னே தெரியாட்டியும் இந்தப் பேதை நெஞ்சம்... அவரையே விரும்புதும்மா.. மறக்க முயற்சித்தாலும் முடியலை... அவரை சந்திக்கும் சந்தர்ப்பத்தை எதுக்கு ஏற்படுத்தினே தாயே? இனி அவரைத் தவிர வேற யாரையாவது... இந்த இதயம் கணவரா ஏத்துக்குமா?''

உள்ளம் எரிமலையாகக் குமுறியது! அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அம்மனின் சன்னதியில்... அம்மனை தரிசிக்கும் போது உள்ளுக்குள் ஊமையாய் கதறினாள் கவுரி.

எத்தனை கட்டுப்படுத்தினாலும்... அவளது அழகிய நயனங்களில் குளம் கட்டிய கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு அவளது கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கி தாவணியில் சிதறியது.

விழிகளை இறுக மூடி மனம் உருகப் பிரார்த்தனை செய்து விட்டு நிமிர்கையில் எதிர் வரிசையில் அம்மனை தரிசிக்க வந்து நின்றவனை எதேச்சையாகப் பார்த்தாள் கவுரி! ஆஜானுபாகுவாக கம்பீரமாக வந்து நின்ற கைலாஷைக் கண்டதும் அவளுக்கு இன்ப அதிர்ச்சியில் 'பகீர்'

என்றது.

'இ தென்ன அவளது இதயத்தைக் கவர்ந்த வாலிபன் கனவில் தானே அடிக்கடி தோன்றினான்? இப்போது நனவிலும் வரத் தொடங்கி விட்டானோ? காதல் பைத்தியம் முற்றி காணுமிடமெல் லாம் அவனுருவம் தெரியத் தொடங்குகிறதோ?'

அகன்ற விழிகள் ஆச்சரியத்தில் மேலும் விரிய மானின் மருட்சி யுடன்' மிரண்டு போய் அவனைப் பார்த்த கவுரி... மெல்ல தனது கையில் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

''உஸ்! அம்மாடி! இது கனவல்ல நிஜம் தான்! அவளையும் அறி யாமல் அவளது இதழ்கள் மெதுவாக முணுமுணுத்தன.

அவளது எண்ண ஓட்டத்தை.. தனது எக்ஸ்ரே விழிகளால் வாசித் அறிந்த கைலாஷின் இதழ்களில் குறுநகை இழையோடியது. கண்க ளில் குறும்புத் தனம் வழிய... ''இட்ஸ் ட்ரூ!''

என்ற ரீதியில் கண்களை ஒரு கணம் மூடி மலர்த்தினான்.

தலை நிறைய மல்லிகைப் பூவைச் சூடி சிவப்பு வண்ண பட்டுப் பாவாடை தாவணியில் தேவதையாய் மிளிர்ந்த கவுரியை மீண்டும் சந்திப்போம் என்று கைலாஷும் சத்தியமாய் எதிர்பார்க்க வில்லை போலும்!

இனம் தெரியாத இன்ப உணர்வில் இனிய அதிர்ச்சியில் இருவ ரும் தத்தளித்துத் தான் போயினர்.

''நாலஞ்சு வருஷமா... ஏதாச்சும் தடங்கல் வந்து வீரபாண்டித் திரு விழாவுக்கு நாம போக முடியாம போச்சுப்பா... இந்த வருஷமாவது போயிட்டு வரலாமா?'' அம்மா மரகதம் பரிதாபமாய் கேட்ட போது கைலாஷினால் மறுக்க முடியவில்லை.

இருக்கும் வேலைகளை எல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு காரை எடுத்துக் கொண்டு அம்மாவுடன் திருவிழாவுக்கு வந்திருந்தான்.

அந்திவானமாய் முகம் சிவக்க... சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்ட கவுரிக்கு... அம்பாளின் அருளையும், சக்தியை யும் நினைத்து மெய் சிலிர்த்தது! அம்மனின் திருவுருவத்தை மீண்டும் கண்ணீர் மல்க தரிசித்தாள்.

கவுரி! இவங்க யார் தெரியுமா? இதோ எதிர்க்க மஞ்சக் கலரு பட் டுப் புடவை... புடவைத் தலைப்பால போர்த்திக்கிட்டு மங்களகரமா நிக்கிறாங்களே? அவங்க தான் மரகதம்மா!. பக்கத்துல உயரமா கம் பீரமா நிக்கிறவர் தான் அவங்க புள்ளை கைலாஷ்... பெரிய எஸ்டேட் ஓனர்!

குமுளி, மூணாறு, தேவாரம், கம்பம் மெட்டு இன்னும் பல இடங்கள்லே 'எஸ்டேட்ஸ் இருக்கு. தேனியில கூட மரகதம் கன்ஸ்ட் ரக்ஷன்ஸ், 'கைலாஷ் பில்டர்ஸ்' மரகதம் சாஃப்ட் வேர் கம்பெ னின்னு கேள்விப் பட்டிருப்பியே? அதெல்லாம் இந்தப் புள்ளையோ டது தான்!



தேனியில் நிறைய பங்களா இருக்கு கோடை காலத்துல குமுளி யில இருக்கற பெரிய பங்களாவுல தான் இவங்க இருப்பாங்க மழைக் காலம் ஆரம்பிச்சாக்க தேனி பங்களாவுக்குப் போயிடுவாங்க

எங்க வட்டாரத்துக்கே இவங்களைத் தெரியும்! பெரிய புள்ளி! அந்த அம்மாவைப் போலவே புள்ளைக்கும் தங்கமான குணம் தெரி யுமா?''

பக்கத்தில் நின்றிருந்த பார்வதி கவுரியின் காதுகளில் கிசு கிசுத் தாள். பார்வதி! காமாட்சியின் ஒன்று விட்ட அக்கா! பெரியம்மாவின் மகள் ஆனால் உடன் பிறந்த சகோதரிகளைப் போன்று பாசப்பிணைப் புடன் திகழ்பவர்கள்.

ஒவ்வொரு வருடமும் திருவிழாவுக்குத் தவறாமல் வீரபாண் டிக்கு வந்து விடுவாள். குமுளியில் தொடக்கப் பள்ளி ஆசிரியையா கப் பணி புரிபவள். அவளது கணவன் எஸ்டேட்டில் தான் வேலை செய்தான்.

பார்வதிக்கு மூன்று மகன்கள்! இன்னும் கொஞ்ச காலத்தில் ரிட் டையர்ட் ஆகப் போகின்றவள். பார்வதிக்கு பெண் குழந்தைகள் இல் லாததால் கவுரியிடம் மிகவும் வாஞ்சையாகவும், பிரியமாகவும் இருப் பாள்.

''அப்படியா பெரியம்மா!'' கவுரி மெல்ல மரகதத்தை ஏறிட்டாள். மாநிறத்துக்கும் சற்று குறைச்சலான நிறத்துடன் சுமாராக இருந்த முகத்தில் அதீத கவலை அப்பியிருந்தது.

ஈரம்படர்ந்த விழிகளை அம்மன் திருவுருவத்தில் பதித்த படி தனது மனக்குறை தீர அவள் வேண்டுவது புரிந்தது.

'இவங்களுக்கு என்ன குறையிருக்க முடியும்?' கவுரியின் மனதில் கேள்வி முளை விட்டது.

மறுகணமே பரிதாபத்தில் அவளது மனம் பாகாய் கரைந்தது.

''பாவம்! இந்தம்மா! இவங்க குறையையும் தீர்த்து வையும்மா தாயே!'' கவுரியும் உள்ளம் உருக வேண்டினாள்.

அவள் தான் பறவைக்கும் இரங்கும் மனது படைத்தவளாயிற்றே! மிருகங்களுக்கும் உருகும் கருணை உள்ளம் கொண்டவளாயிற்றே குறைந்தது இரண்டு வாயில்லா ஜீவன்களுக்கு உணவு படைக்காமல் இலையின் முன் உட்காராத காருண்ய நெஞ்சம் கவுரிக்கு!

''ஆத்தா கவுரீ!. நம்ம சனங்க எல்லாம் தேங்காய் உடைச்சு அர்ச் சனை பண்ணிட்டாகளா?'' கூட்ட நெரிசலில் பின்னாலிருந்த சொக்க லிங்கம் வயிற்றை எக்கிக் குரல் கொடுத்தார்.

''ஆச்சுப்பா! அம்மா நீயும் சேந்து வாம்மா அர்ச்சனைக் கூடை உன்கிட்டே தான இருக்கு?'' முன் மண்டபத்தில் அம்மன் சன்னதி யின் எதிரே இருந்த 'வேம்பு முக்கொம்பில்' மஞ்சள் தண்ணீரை ஊற் றும் போது தன் கையிலிருந்த அர்ச்சனைக் கூடையை காமாட்சியிடம் கொடுத்திருந்தாள் கவுரி!

''என் கிட்ட இருக்கு ராசாத்தி!'' கூட்டத்தில் முண்டியடித்தபடி சொக்கலிங்கமும் காமாட்சியும் முன்னால் வந்து கவுரியின் அருகே நின்றனர்.

குடும்பத்துடன் அம்மனை தரிசிக்கும் பாக்கியம் இனி தனக்கு கிட்டப் போவதில்லை என்பதை கவுரி கனவிலும் கருதவில்லை, பாவம்! விதி விளையாடப் போகின்றது என்பதையும் மரணம் அவர்களை நெருங்குகின்றது என்பதையும் அவள் எவ்விதம் அறிவாள்?

8

கவுரியின் மனம் கல்லெறிபட்ட குளமாய் குழம்பித் தவித்தது.

அவளது இதய சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டிருந்த அந்த இளைஞனின் ஊர், பெயர், முகவரி தெரியாமல் இருந்த போது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது.

அம்மனின் சன்னதிக்கு சொல்லி வைத்தாற் போல் அவன் வந்ததும் பார்வதி பெரியம்மாவின் மூலம் கைலாஷைப் பற்றிய முழு விவரங்கள் தெரிய வந்ததும் கவுரியின் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கத் தான் செய்தது.

எல்லாம் கோவிலைத் தாண்டி வரும் வரை தான் நீடித்தது. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாக மனதில் மீண்டும் பாரம் ஏறி அழுத்தியது.

'பரம்பரை பணக்காரன் கோடீஸ்வரன் அனைத்து சொத்துக்களையும் கட்டி ஆளப்பிறந்த ஒரே ஆண் வாரிசு கைலாஷ்!.

எங்கோ கிராமத்தில் பிறந்த சாதாரண வசதி படைத்த விவசாயியின் மகளை அந்த மரகதம் அம்மாள் மருமகளாக ஏற்றுக் கொள்வாளா?

அவனுக்கும், தனக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா? தன்னைப்



''மாப்பிள்ளை என் மகளைக் கண் கலங்க விடாமல் காப்பாற்ற வேண்டியது உங்க பொறுப்புத் தான் மாப்பிள்ளை''

''காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு கண் கலங்காமல் இருப்பது அவள் பொறுப்பு... சீரியல் பார்க்காமல் இருந்துக்கட்டும்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



போல் கைலாஷும் அவளை உயிருக்குயிராக நேசிக்கிறானா?

இந்த காதல் நிறைவேறுமா? அல்லது கானல் நீராகி விடுமா? கைலாஷின் விழிகளில் ஆத்மார்த்தமான காதல் தானே நிரம்பி வழிந்தது.

அந்த அன்பு ததும்பும் விழிகளை சந்திக்க நேர்ந்த போது மனதிலிருந்த பாரம் இறங்கி பஞ்சு போல் இலேசானதே!

காலம்! இந்த இரு அன்பு உள்ளங்களை சேர்த்து வைக்குமா? பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவளுக்கு எவ்வளவு பேராசை? இந்த ஆசை நிறைவேறுமா?

சந்தேகமும், பயமும் மனதைச் சூழ்ந்து கல்வி அவளை அலைக்கழித்தன.

பந்தியில் அமர்ந்த உறவுத்தலைகளுக்கு விருந்து தடபுடலாகப் பரிமாறப்பட்டது.

''என்ன கவுரி? இந்த அப்பத்தா வெஞ்சனம் வெக்கச் சொன்னா அப்பளத்தை வெக்கிறியே இந்த குமரிப்புள்ள மனசுல எந்த அத்தான் குடியிருக்கியான்? செந்திலு பயலா, ராம துரை பயலா? மனசை விட்டு சொல்லிப் போடேன் ரெண்டு எளந்தாரிகளும் 'எனக்கா? உனக்கா'ன்னு தலையைப் பிய்ச்சுக்கிட்டு திரியாறானுங்கள்லே சொல்லுப்புடு வெரசா!''

'அல்லி நகரத்திலிருந்து வந்த சொந்தக்காரக் கிழவி அவளைக் கிண்டலடித்து விட்டு பொக்கை வாயைத் திறந்து 'கெக்கே பிக்கே' என்று சிரிக்கவும் கவுரிக்கு சங்கோஜமாகி விட்டது.

''சே! கைலாஷைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியிருந்ததால் இந்த கிழவி கேலி செய்யும் படி ஆகி விட்டதே!'' தன்னையே நொந்து கொண்டாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல அப்பத்தா மருது மாமா! அப்பத்தாவுக்கு வெஞ்சனம் வைங்க'' என்று சொல்லி விட்டு நழுவி ஓடினாள்.

''ஆத்தா கவுரி! இங்கன வா! இதையெல்லாம் நாங்க பாத்துக்கிறோம். இந்த முத்துப்பாண்டியைப் பாத்தியா? ஆளையே காணோம். அவன் எப்பவும் இப்படித்தேன். எல்லாத்தையும் இழுத்துப்போட்டு செஞ்சு போட்டு சாப்பாட்டு நேரத்துல தலைமறைவாப் போயிடுவான். அவனைக் கையோட கூப்புட்டு வாரியா புள்ள? கடைசி பந்தியாகப் போகுது. வெரசா வரணும்!

சொக்கலிங்கம் தனது நண்பனைக் காணாமல் தவித்துப் போனார்.

''சரிப்பா!'' என்றபடி தோழி முருகேஸ்வரியைத் தேடினாள்.

பந்தியில் யாருடனோ சுவாரசியமாகப் பேசியபடி வாளியிலிருந்த பாயாசத்தை எடுத்து டம்ளரில் ஊற்றிப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

''முருகி இங்கன இருக்கட்டும் நீ மட்டும் வெரசா போய் கூட்டியா!'' அவளைத் துரிதப் படுத்தினார்.

பரபரவென்று கவுரி தனது வீட்டிற்குள் நுழைந்து வெறுமனே சாற்றியிருந்த பின் பக்கத்துக் கதவைத் திறந்தாள்.

கொல்லைப்புறத்து கிணற்றில் டகடகடக வென்று ஜகடை உருள தண்ணீர் இறைத்து ஊற்றிக் கொண்டிருந்தாள் வேலைக்காரி.

''அக்கா! பூச்செடிக்கெல்லாம் நா தண்ணி ஊத்திக்கறேன். பாத்திரம் தேய்ச்சுட்டு நீங்க சாப்பிடப்போங்க!'' என்றபடி அவளைக் கடந்து ஓடினாள்.

கவுரி ஆசையாக ரோஜா, கனகாம்பரம், செம்பருத்தி, அடுக்கு மல்லி, பவள மல்லி, அந்தி மந்தாரை என்று பல பூச்செடிகளை நட்டு வைத்திருந்தாள்.

கவனமாக களையெடுத்து உரமிட்டு வளர்த்ததால் பல வண்ண மலர்களோடு தோட்டம் பூத்துக் குலுங்கியது கண்களைப் பறித்தது.

தோட்டத்தைச் சுற்றிலும் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. ஈசான மூலையிலிருந்த திட்டிக் கதவைத் திறந்து இறங்கி இரண்டடி நடந்து வரப்பின் மீது ஏறி ஓட்டமும் நடையுமாய் நான்கே நிமிடங்களில் முருகேஸ்வரி வீட்டின் கொல்லைப் புறத்து வழியாக உள்ளே நுழைந்தாள்.

கொல்லைப்புறம், ரேழி, சமையல் கட்டு இவற்றைத் தாண்டிச் செல்லும் போதே கூடத்திலிருந்து வந்த பேச்சுக் குரல்கள் 'அந்த வீட்டிற்கு யாரோ விருந்தாளி வந்திருக்க வேண்டும்' என்பதை அவளுக்குப் பறை சாற்றியது.

கம்பி போட்ட முற்றத்தைக் கடந்து கூடத்தை எட்டியவளுக்கு ஆச்சரியம் கிளை விட்டு படர்ந்தது.

''அட! இவங்களா? முத்துப்பாண்டி மாமாவைப் பார்க்க இவர்கள் ஏன் வர வேண்டும்? மாமாவுக்கு ஏற்கனவே இவர்களைத் தெரியுமா?''

மனசுக்குள் கேள்விகள் கொக்கிகளாய் முளைத்து மூளையைப் பதம் பார்த்தன.

கால் கொலுசு சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தனர். கைலாஷும் மரகதமும்!

''என்னம்மா கவுரி மூச்சிறைக்க இப்படி ஓடியாந்திருக்கே?'' முத்துப்பாண்டி முறுவலித்தார்.

''அப்பா உங்களைக் கையோட கூட்டி வரச் சொன்னார் மாமா!'' தயங்கி பதிலளித்தாள்.

''செரி வரேன்! இந்த புள்ள கவுரி என்னோட சினேகிதன் சொக்கலிங்கத்தோட பொண்ணு! எம் மக முருகியும் இவளும் நெருங்கின தோழிங்க கவுரி! இவுக எங்களுக்கு தூரத்து உறவுமுறைக்காரங்க இப்ப இவுக குமுளியில தேன் இருக்காக யாபார விஷயமா நா குமு



ளிக்கு போனாக்க இவுகளைப் பாக்காம திரும்ப மாட்டேன்.

நாலஞ்சு வருஷமா திருவிழாவுக்கு வராதவங்க இந்த வட்டம் வந்திருக்காக சொத்து சொகம் குவிஞ்சு கெடந்தாலும் மரகதம் அம்மாளும் அவங்க புள்ள கைலாசும் சொந்த பந்தங்களை மதிக்கிறவங்க தாயி!''

மரியாதை நிமித்தம் வணக்கம் தெரிவித்தாள் கவுரி!

''படிக்கிறயாம்மா?'' என்றபடி அவளை உச்சி முதல் பாதம் வரை ஏற இறங்கப் பார்த்தாள் மரகதம்.

கண்களில் வியப்பு மின்ன ஆர்வத்துடன் அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தான் கைலாஷ்.

''பெரியகுளம் காலேஜுல பி.எஸ்சி. செகண்ட் இயர் முடிச்சிருக்கேன்மா!'' கவுரிக்கு அங்கே நிற்பதற்கே தர்ம சங்கடமாக இருந்தது.

அதற்குள் அவளது நெற்றியோரம் முத்து முத்தாய் வியர்வை அரும்பி விட்டது.

''பூவோட சேந்த நாரும் மணக்கிறாப்பல இவ தயவுல முருகியும் காலேஜ் வாசலை மிதிச்சிருக்கா முருகிக்கு மந்த புத்தி தேன். கிளிப்பிள்ளைக்கு சொல்லித்தராப்பல. படிப்பு சொல்லிக்குடுத்து படிச்ச புள்ளங்கிற மருவாதையை அவளுக்கு ஏற்படுத்திட்டா தங்கமான கொணம் படைச்சவ கவுரி! பத்து நிமிஷத்துல நா வந்துடுவேன்னு சொக்கலிங்கத்துக்கிட்ட சொல்லிப்புடு!''

'விட்டால் போதும்' என்ற நினைப்பில மீண்டும் கைகளைக் கூப்பி வணங்கி விட்டு விரைந்தாள்.

''முருகியும் இவளும் ரெட்டைப்புள்ளக மாதிரி ஒண்ணாத்தேன் திரியுங்க கண்ணாலம் ஆகி வாக்கப்பட்டு பிரிஞ்சு போயிட்டாக்க என்ன செய்யப் போகுதுகளோ?'' என்று சிரித்துக் கொண்டே முத்துப்பாண்டி கூறியது ரேழியைக் கடந்து சென்ற கவுரியின் காதுகளில் சன்னமாய் விழுந்தது.

'கல்யாணம்' என்ற வார்த்தையைக் கேட்டதும் கவுரிக்கு திக்கென்றிருந்தது. 'இந்த காதல் கல்யாணத்தில் கை கூடுமா?' அது வரை மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்த மனது பொங்கி பாலில் தெளித்த நீராய் சப்பென்று அடங்கியது.

சோர்வுடன் வரப்பைக் கடந்து தனது வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைவதற்காக திட்டி வாசல் கதவைத் தள்ளித் திறந்தாள்.

''எனக்கு நம்பிக்கையே இல்ல ஆத்தா மாமா கூட பட்டும் படாமத்தேன் நடந்துக்கிறாங்க. கவுரியை மட்டும் எனக்கு அவரு கட்டித் தரலைன்னு வையி வெட்டிப்புடுவேன் இந்த ஊரையே கொளுத்திப் புட்டுத்தேன் மறுவேல பாப்பேன் ஆமா!'' செந்தில் கோபமாக தனது அம்மா வைரமணியிடம் இரைந்து கொண்டிருந்ததைக் கேட்டதும் சட்டென்று மகிழ மரத்தின் மறைவில் நின்று கொண்டாள் கவுரி.

ஜிலில் அவளது இதயத்துடிப்பு எகிற ஆரம்பித்தது.

## 9

வெயிலின் கண் முகமே தெரியாத ஒரு குளிர்ச்சி! ஜில்லிப்பு சிலுசிலுவென்று மேனி தொட்டுத் தழுவும் தென்றலில் ஒரு இனிய மனம் பலாப்பழம் பழுத்துவிட்டதை நாசிக்கு சேதி சொல்லும் சுகந்த நறுமணம் அது!

மரக்கிளைகளில் குயில்களின் இனிய கீத கலகல துவனி! வண்ண வண்ண பட்டாம்பூச்சிகளின் சிறகடிப்பு! பருத்த பலா மரத்தின் கிளையில் கட்டிய ஊஞ்சலில் அமர்ந்த வண்ணம் ஆடிக் கொண்டிருந்தாள் கவுரி.

அவளது மனம் எதிலும் லயிக்கவில்லை என்பது அவளது அழகிய விழிகள் இலக்கின்றி எங்கோ வெளிப்பதிலிருந்து நன்கு புரிந்தது.

சென்ற வாரத்தில் அவளது வீட்டுத் தோட்டத்தில் ஆள் அரவமற்ற நேரத்தில் செந்தில் கோபத்தில் கொந்தளித்து வைரமணியுடன் பேசியதும் அவள் அவனை சமாதானப்படுத்தியும் பேசியதும் இன்னமும் கவுரியின் செவிகளில் எதிரொலித்துக் கொண்டுதான் இருந்தது.

ராமதுரை முரடன் படிக்காதவன் சகல கெட்ட பழக்கங்கள் கொண்ட போக்கிரி என்பதை நன்கு அறிவாள் கவுரி.

ஆனால் செந்தில்! அவன் திக்கித் திணறிப் படித்தாலும் பட்டதாரி ஓரளவுக்கு பண்பானவன்! அடுத்தவர்களின் உணர்வுகளுக்க மதிப்பளிப்பவன் என்றல்லவா இதுகாலம் வரை அவள் நம்பியிருந்தாள்?

விருந்துக்கு வந்து தங்கியிருந்த நாட்களில் திருமணப் பேச்சு அடிபடும் நேரத்தில் எல்லாம் சொக்கலிங்கமும், காமாட்சியும் பிடி கொடுக்காமல் நழுவியதை நன்கு நோட்டமிட்டிருக்கிறான் செந்தில்.

உள்ளுக்குள் உலை கொதித்து விட்டது போலும்! ''வெட்டி விடுவேன் ஊரையே கொளுத்தி விடுவேன்'' என்று ஆவேசத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக குதிக்க ஆரம்பித்து விட்டான்.

சாது! படித்தவனே இப்படி குதித்தால் ராமதுரையைப் பற்றி கேட்கவா வேண்டும்? தனிப்பட்ட குடும்பப் பிரச்சனையை இரு இளைஞர்களுமே ஊர்ப் பிரச்சனையாக்கி விடுவார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

இன்னும் ஓரிரு வருடங்களில் அவளது திருமணம் நடக்கும் சமயத்தில் இரண்டு அத்தைமார்களின் குடும்பங்களோடு அவர்களுக்கிருந்த உறவு முறிந்து போகும் என்று சர்வ நிச்சயம்!

விஷயம் அத்தோடு முடிந்தால் கூட பரவாயில்லை. ஏமாற்றம் தாளாமல் ராமதுரையும், செந்திலும் அவரவர் ஊர் மக்களின் உதவியோடு போர்கொடி தூக்கி கலவரத்தை உண்டு பண்ணுவார்கள் என்று எண்ணும் போதே கவுரிக்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.






அன்று வீட்டுத் தோட்டத்தில் மகிழ மரத்தடியில் மறைந்து நின்று, தான் கேட்ட விஷயத்தை பெற்றவர்களிடம் கூறி அவர்களையும் கலவரப்படுத்த கவுரி விரும்பவில்லை.

இவ்வளவு பெரிய இக்கட்டிலிருந்து எப்படி மீளப்போகிறோம் என்று எண்ணும் போதே கவுரிக்கு மலைப்பாக இருந்தது.

'தனது மனதில் முகிழ்த்த காதல் திருமணத்தில் முடியுமா? இதயத்தில் மலர்ந்து மணம் வீசிய காதலை எப்படி வெளியில் சொல்வாள்? கடைசி வரை ஊமை கண்ட கனவாக. மனதிற்குள்ளேயே புதைத்து வைத்து மடிந்து விட வேண்டியது தானோ?'

அவளது கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்து வழிந்தது.

'வவ்...வவ்! ம்கும்... வவ்!''

காலையில் மூழ்கியிருந்த கவுரி சட்டென்று கலைந்து பத்தடி தள்ளியிருந்த மரத்தடியில் கட்டிப் போட்டிருந்த நாய்க்குட்டியைப் பார்த்தாள்.

வேக வேகமாக வாலை ஆட்டியபடி தனது எஜமானியை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது.

''என்ன ஜிம்மி? தோ வந்துட்டேன்டா!'' சட்டென்று ஊஞ்சலை விட்டு இறங்கி அதனை மிருதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

அவளது அன்பான கவனிப்பாலும், நல்ல பராமரிப்பாலும், நான்கே வாரங்களில் நாய்க்குட்டி போஷாக்காகி விட்டிருந்தது.

நாய்க்குட்டி ஜிம்மியைக் காணும் போதெல்லாம் கைலாஷின் நினைவு அவளுக்குள் முளைவிட்டு விருட்சமாய் வளர்ந்து ஆக்கிரமிக்கும்!

ஜிம்மியைத் தடவிக் கொடுத்து வாரியெடுத்து அணைத்துக் கொண்டு மெல்ல நடக்க முற்பட்டாள்.

காய்ந்த சருகுகள் மிதிபடும் சப்தம் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

மடக்கிய குடையை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, சரிந்து விழப் பார்த்த மேல் துண்டை சரியாகத் தோளில் போட்டுக்

கொண்டே அவளை நோக்கி வந்தார் முத்துப்பாண்டி.

''கவுரி! உன்னைப் பாக்கத்தேன் வாரேன் நீ இங்கன இருக்கேன்னு மருது சொன்னான்!'' தயங்கி நிறுத்தினார்.

''என்ன மாமா? இவ்ளோ தூரம்? சொல்லி அனுப்பிச்சா நான் உங்க வீட்டுக்கே வந்திருப்பபேனே மாமா? என்ன விஷயம்?''

ஓ... ஒண்ணுமில்ல! சொக்கலிங்கம் நேத்து என்கிட்ட சொல்லி வருத்தப்பட்டான் 'கவுரி புள்ள கிட்ட ஏதோ மாத்தம் தெரியுது! முன்ன மாதிரி கலகலப்பாவே இல்ல அவ மனுசுல ஏதோ கவலை அரிச்சுக்கிட்டிருக்காப்பல தெரியுது! மனசு விட்டு எதையும் சொல்ல மாட்டேங்குது' அப்படின்னு புலம்பினான்'.

இப்பக் கூட உன்னோட சாதகத்தைத் தூக்கிக்கிட்டு சோசியரைப் பாக்க போயிருக்கான்.

முருகி கூட பொலம்பினா 'எதிர் காலத்துல ராமதுரையும், செந்திலும் ஆளுகளோட கம்பும் கழியுமா வந்து கலாட்டா பண்ணுவாங்க வெட்டு குத்துன்னு ஆயிடுமேன்னு கவுரி ரொம்பவும் பயப்படுவதுன்னு முருகி சொன்னா.

எதையோ பறி கொடுத்தாப்பல கலங்கிப் போயிருக்கியேம்மா! உங்கப்பன் மலை மாதிரி நிக்கான் நாங்க எல்லாம் இருக்கோம். எது வந்தாலும் நாங்க சமாளிப்போம்! எதப்பத்தியும் கவலப்படாம கலகலப்பா இரு புள்ள!

செரியா? பச்சைக்கிளி மாதிரி வழக்கம் போல பறந்து திரிஞ்சுக்கிட்டிரு. நீயும் வெசனப்பட்டு மத்தவங்களையும் வெசனப் படுத்தாதே கண்ணு!''

அன்பாய் அதட்டினார் முத்துப்பாண்டி.

''சரிங்க மாமா!''

''நாளைக்கு விடியக் காத்தால பஸ்ஸைப் புடிச்சு யாபார விஷயமா குமுளி வரைக்கும் போறேன் புள்ள நாளன்னிக்குத்தேன் வருவேன். அப்படியே அந்த மரகதம் அம்மாளையும் கைலாசு தம்பியையும் பாத்துப்புட்டு வாரேன்! அம்புட்டு தூரம் போனாக்க அவுகளைப் பாக்காம நா திரும்பறதில்லை புள்ள!'' என்று கூறிவிட்டு அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தார் முத்துப்பாண்டி.

சட்டென்று கவுரியின் முகம் அந்திவானமாய் சிவந்தது. சோகம் ததும்பிய விழிகளில் சந்தோஷ மின்னலொன்று பளிச்சென்று வெட்டியது.

கவுரி தனது பார்வையை படக்கென்று தழைத்துக் கொண்டாள். 'இப்போது கைலாஷைப் பற்றிய பேச்சை ஏன் எடுக்க வேண்டும்? முத்துபாண்டி இலேசுப்பட்டவர் அல்ல அவ்ளது முகத்தை உற்றுப் பார்ப்பதைப் பார்த்தால் உள்ளுக்குள் அரும்பியிருந்த காதலை கண்டு பிடித்து விட்டாரோ?'

முகத்தில் எந்த பாவனையும் வெளிப்பட்டு விடாமலிருக்க கவுரி



மிகவும் பிரயத்தனப்பட வேண்டி இருந்தது.

முத்துப்பாண்டியின் ஆறுதலான பேச்சு அவளது நெஞ்சிலிருந்த பாரத்தை தற்காலிகமாக இறக்கி வைத்து சிறு நிம்மதியைத் தேடித் தந்தது என்பது நிஜம்!

## 10

காலச் சக்கரம் வெகு வேகமாய் சுழன்றது. நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

வீ.ஆர். ஹாஸ்பிடல்! அந்த வட்டாரத்திற்கே மிகவும் பிரபலமான மருத்துவமனை அது!

கைலாஷின் ஆடிட்டர் குடல்வால் அறுவை சிகிச்சையை முடித்துக் கொண்டு... கீழ் தளத்தில் ஏ.ஸி. அறையில் அனுமதிக்கபட்டிருந்தார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை! கைலாஷ் ஆடிட்டரைப் பார்ப்பதற்காக காலை பத்து மணிக்கே வந்து விட்டிருந்தான். அவரைப் பார்த்து விட்டு... ஐந்து நிமிடங்கள் அமர்ந்து அவரது உடல் நல அபிவிருத்தியைப் பற்றி அவரது மனைவி, மகளிடம் விசாரித்து விட்டு கிளம்பினான்.

ரிசப்ஷனைக் கடந்து செல்லும் போது... ஆஸ்பத்திரி வளாகத்திற்குள் ஒரு அம்பாஸிடர் விரைந்து வந்து நின்றதையும், அரக்கப் பறக்க கலைந்த கூந்தலுடன் காரிலிருந்து கவுரி வெளிப்பட்டதையும் கைலாஷ் கவனித்து விட்டான்.

மேல் தளத்திற்குச் செல்லும் லிப்ட்டுக்காக காத்திருப்பவனைப் போன்று சட்டென்று முதுகு காட்டி நின்று கொண்டான்.

ரிசப்ஷனிஸ்டிடம் ஏதோ மெல்லிய குரலில் விசாரித்து விட்டு ஓட்டமும் நடையுமாக உள்ளே விரைந்தாள் கவுரி.

வெளிர் நீல காட்டன் புடவை! கலைந்த கேசத்துடன் பதற்றமான தோற்றத்துடன் இருந்தாலும் பொலிவு குன்றாத தேவதையாகவே கைலாஷின் கண்களுக்குக் காட்சியளித்தாள்.

'இவ்வளவு பதட்டமாக ஓடுகின்றாளே? இங்கு யார் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்? ஒரு வேளை அவளது பெற்றோர்களுக்கு ஏதாச்சும்...?

மின்னல் வேகத்தில் பல கேள்விகள் தோன்றி மறைந்தன. 'என் அன்புக்குரிய தேவதை கவலையுடன் காணப்படுகின்றாள். அவளுக்கு எந்த வகையிலாவது நான் உதவ வேண்டுமே!' அவனுக்கும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

ஷூக்கள் சப்திக்க வேகமாக நடந்து வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த அம்பாஸிடரை நோக்கினான். கவுரியின் டிரைவர் மட்டும் அதனருகே நின்று கொண்டிருந்தான்.

''ஹலோ! டிரைவர்! ஒரு நிமிஷம் இங்க வரமுடியுமா?'' அவ

அது கம்பீரமான தோரணையைக் கண்டதும்... மறு பேச்சு பேசாமல் டிரைவர் ஓடி வந்தான்.

''என்னங்க சார்?''

''மிஸ் கவுரி எனக்கு ரொம்பவும் வேண்டியவங்க! பதட்டமா அவங்க உள்ளே போனதைப் பார்த்தேன். உள்ளே யார் அனுமதிக்க பட்டிருக்காங்க? அவங்கப்பாவுக்கு ஏதாச்சும்...''

''ஐயோ! அவரு நல்லாத்தேன் இருக்காருங்க... கவுரி அம்மா வழக்கமா இரத்த தானம் பண்ணுவாங்க... இரத்த தானம் குடுக்கற குழுவுல அவங்க பேர் இருக்கு!''

''ஓ! ரெகுலர் பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனா?''

''ஆமா! அதே தாங்க... இங்க யாருக்கோ அடிபட்டு உயிருக்கு போராடிக்கிட்டிருக்காங்க சீக்கிரம் இரத்தம் குடுத்தா பொழைச்சுக்கு வாங்கன்னு அந்த குழுவுலேர்ந்து அம்மாவுக்கு போன் வந்துச்சு! கவுரி அம்மாவுக்கு ரேர் குரூப் இரத்தமாம்...

அய்யா அவுக, காமாட்சி அம்மா, மருது அண்ணன் எல்லாரும் களத்துமேட்டில இருக்காக போன் வந்ததும் அடிச்சுப் புரண்டு யார் கிட்டயும் சொல்லாம வந்துட்டோம்! செரிங்க! கவுரி அம்மா வர்ற துக்கு தாமசமாகும்... எதுத்தாப்பல இருக்கற கடையில டீ குடிச் சிட்டு வாரேன்!'' விருட்டென்று நகர்ந்தான் டிரைவர்.

'கவுரி இவ்வளவு காருண்ய மனம் படைத்தவளா?' பாசத்தில் மனம் பாகாய் உருகியது.

'இளகிய மனம் அன்பு உள்ளம், சூது வாது அறியாத குணம், பெரியவர்களை மதிக்கும் பாங்கு, பன்பு, மனித நேயம், ஒப்பனை காணாத ஒப்பற்ற அழகு' இவற்றின் மொத்த உருவம் தான் என் கவுரி?

அவளுடன் நெருங்கி ஒரு வார்த்தை இது வரை பேசியதில்லை. அவளது உயர்ந்த உள்ளத்தை முழுவதுமாகப் புரிந்து கொண்ட திருப்தி ஏற்பட்டது கைலாஷுக்கு!




''சார் என் தலையில் ஒரு எறும்பு ஏறுது பாருங்க சார்'

''இதை ஏண்டா என்னிடம் சொல்கிறே?''

''உன் மண்டையில் 'எதுவும் ஏறாது' னு நீங்கதானே சார் நேற்று என்னிடம் சொன்னீர்கள்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



ஆறு மாதங்களுக்கு முன்பு முத்துப்பாண்டியின் வீட்டில் அவளைப் பார்த்தது தான்!

அதன் பிறகு நேரில் அவளைச் சந்திக்கவில்லை என்றாலும்... கனவிலும் நனவிலும் பால் வடியும் வதனத்தால் கைலாஷை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள் கவுரி.

முத்துப்பாண்டியின் மூலம் அன்று கவுரியைப் பற்றித் தெரிந்து கொண்டதும் சந்தோஷத்தில் அவனது உள்ளம் ஆர்ப்பரித்தது.

''அப்பாடி! அவளது குடும்பத்தைப் பற்றி தெரிந்து விட்டது. இன்னும் ஒரு வருடம் போனால் அவளது படிப்பு முடிந்து விடும்! அதன் பின் அம்மாவிடம் தனது ஆசையை எடுத்துக்கூறி முறைப்படி பெண் கேட்க வேண்டியது தான்!'' என்று தனக்குள் தீர்மானித்திருந்தான் கைலாஷ்.

அவன் நினைத்திருந்தால் கவுரியை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கி இருக்கலாம் தான்!

ஆனால் தனது இதய சிம்மாசனத்தில் அமர்ந்து கோலோச்சிக் கொண்டிருந்த அழகான அன்பு தேவதையை அவன் தர்ம சங்கடத்திற்கு ஆளாக்க விரும்பவில்லை என்பது தான் நிஜம்!

கீழே விழுந்து அடிபட்ட நபருக்கு உடனடியாக செலுத்த அரிய வகை இரத்தம் ஸ்டாக் இல்லாததால் மருத்துவ மனையிலிருந்து பிளட் டோனர்ஸ் அஸோசியேஷனிலிருந்து ரேர் குரூப்பைச் சார்ந்த டோனர்ஸுக்கு போன் மூலம் அழைப்பு விடுத்திருப்பார்கள்.

தகவல் அறிந்ததும் அப்படியே கலைந்த கூந்தலுடன் பறந்து வந்திருப்பாள் கவுரி.

அவளிடம் பேசியே ஆக வேண்டும் என்று ஏக்கம் பிறந்தது கைலாஸுக்கு!

தன் காதலை அவளிடம் வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என்ற ஆவலில் இருப்புக் கொள்ளாமல் தவித்தான். மருத்துவமனை வளாகத்திற்குள் குறுக்கும் நெறுக்குமாக உலாவினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே இரத்த தானம் அளித்த களைப்பில் சோர்வாய் நடந்து வந்தாள் கவுரி.

கட்டுக்கடங்காத ஆசையுடன் காத்திருந்த கைலாஷுக்கு மாசு மருமற்ற குழந்தைத்தனமான முகத்தைக் கண்டதும் சட்டென்று பரிதாபம் தான் ஏற்பட்டது.

வழக்கம் போல் நிதானித்து கரை புரண்ட உணர்வுகளை அடக்கி கட்டுக்குள் கொண்டு வந்தான்.

அவனைக் கண்டதும் அவளது அகன்ற விழிகள் ஆச்சரியத்தில் மேலும் விரிந்தன.

இருண்ட முகத்தில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் படர்ந்தது. ''கவுரி அம்மா! நீங்க பதட்டமான ஆஸ்பத்திரிக்குள்ள போனதைப் பாத்துட்டு இந்த அய்யா என்கிட்ட வந்து பதறிப்போய் விசாரிச்சாரு. நம்ம



வீட்டுலே யாருக்கு உடம்பு முடியாம போச்சுன்னு கேட்டாரு நா வெவரத்தை சொன்னேன். ஒரு மணி நேரமா ரொம்ப டென்ஷனா உலாத்திக்கிட்டிருந்தாரு சாரு நம்ம ரொம்ப வேண்டியவராமே?'' டிரைவர் சிரித்தபடி கேட்டான்.

''ஆ... ஆமா! ரொ... ரொம்ப வேண்டியவர் தான்!'' நாணத்தில் முகம் குங்குமப்பூவாய் சிவக்க தலை குனிந்து சட்டென்று அம்பாஸிடருக்குள் ஏறி அமர்ந்தாள்.

தனது படகுக்காரில் சாய்ந்து நின்றபடி கைகளைக் கட்டிய வண்ணம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த கைலாஷுக்கு... சந்தோஷத்தில் அப்படியே அந்தரத்தில் பறப்பது போன்றிருந்தது.

ஒரு கூடை பூக்களை தலையில் கவிழ்த்தது போலிருந்தது.

இந்த உலகில் வலை வீசி தேடிப் பார்த்தாலும்... காணக் கிடைக்காத குணவதி அவள்! கைலாஷ் அவளை விரும்பியதற்கு முதல் காரணமே... அன்பு, கருணை, இரக்க சுபாவம், பண்பு முதலிய நற்பண்புகள் கொண்டவள் என்பதினால் தான்!

அந்த அன்பு தேவதையும் கைலாஷை விரும்புகிறாள் என்பதை சூசகமாக அவனுக்கு 'கோடி காட்டி விட்டுச் சென்றதை எண்ணி... அவனது முகத்தில் மந்தகாசப் புன்னகை ஒன்று அரும்பியது.

எவ்வளவு பெரிய கோடீஸ்வரன்! பரம்பரை பணக்காரன் இந்த சாதாரணமான பெண்ணிற்காக கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பரிதவித்துக் காத்திருந்தானா?

தனக்கும் தன் குடும்பத்திற்கும் ஏதாவது ஒன்று என்றால் பதறுகிறானா?

அவனுடன் பத்து நிமிடங்கள் பேசுவதற்கே அப்பாயின்ட்மெண்ட் வாங்க மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டுமே?

அவனா? தனக்காக அவ்வளவு நேரம் விஷயம் செய்திருக்கிறான்!''

கவுரி கைலாஷை மிகவும் விரும்பியதற்கு காரணமே அவனது கண்ணியம் தான்!

அவளை அவன் நேசிப்பது பட்டவர்த்தனமாக... கவுரிக்குப் புரிந்தது.

பணக்கார இளைஞர்களுக்கே உரிய திமிரும் படாடோபமும் அலட்சியமும், சல்லித்தனமான பார்வையும் கைலாஷிடம் எள்ளளவும் காண முடியவில்லை.

காலேஜுக்குச் செல்லும் வழியிலோ, ஆற்றங்கரையிலோ, கோவில் பிரகாரத்திலோ அல்லது அடிக்கடி ஏதாவது சாக்கை வைத்துக் கொண்டு முத்துப்பாண்டியின் வீட்டுக்கு வருவது போல் கவுரியை சந்திக்க அவன் முயன்றதே இல்லை!

இந்த கண்ணியம் தான் கவுரியை காந்தம் போல் ஈர்த்து விட்டது. அடிக்கடி அவளை சந்திக்காமலே சதா சர்வகாலமும் அவனையே

நினைக்கும் படி செய்து விட்டானே கைலாஷ்!

காதல் சூட்சுமத்தை எண்ணும் போதே... தன்னையும் அறியாமல் அவளுக்கு சிரிப்பு வந்தது.

''ஏண்டி கவுரி? எத்தன வாட்டி சொல்லிக் குடுத்தாலும் இந்த மக்குப் பிளாஸ்திரிக்கு கிராமர் மண்டையில ஏற மாட்டேங்குதேன்னு நெனச்சு தானே சிரிக்குறே?'' முருகி சிணுங்கினாள்!''

''மை காட்! நா... நா உன்னை நெனச்சு சிரிக்கலைப்பா!''

''பின்ன எதுக்கு சிரிச்சே? எல்லாரும் வீட்டுக்குள்ளார உட்காந்து படிப்பாக நீ என்னடான்னா வீட்டுத் தோட்டத்து மகிழ மரத்தடியில் உக்காந்து படிப்போம்னு இங்க வந்துடறே பாடம் படிச்சுட்டு இருக்கையில் உச்சிக்கிளையில் ஒரு பச்சைக்கிளி பாடிட்டு பறந்துட்டா போதும் இல்ல ஒரு குயிலு கூவிட்டா போதும் உடனே மெய் மறந்து அண்ணாக்க பாத்து ரசிக்க ஆரம்பிச்சுடுவியே...?

'படித்த மாப்பிள்ளை பெரிய வீடுனு என் பெண்ணைக் கொடுத்தேன்... இப்ப அவள் கண்ணு கலங்குகிறாள்...''

''என்னவாம்?''

''சண்டை போட ஒரு மாமியார், நாத்தனார்னு யாருமே இல்லையாம்!''

-எம். அசோக்ராஜா, திருச்சி



கொஞ்ச நேரத்துக்கு முன்ன ஒரு குயிலு கூவிச்சே அதப்பாத்து சிரிச்சியோ? முத்திப் போச்சுடி உனக்கு! நா அன்னிக்கே நெனச்சேன். இயற்கை, ரசனைன்னு பினாத்திக்கிட்டு திரியறாளே கிறுக்கு புடிச்சிறப் போகுதுன்னு பயந்தேன்! அது மாதிரியே ஆயிருச்சே! அடி ஆத்தி இப்ப நா என்ன செய்வேன்?''

முருகி வலது கையை கன்னத்தில் பொருத்தி அவ்ளை பரிதாபத்துடன் ஏறிட்டு நோக்கவும். வெள்ளிக்காசுகளை இறைத்து விட்டாற் போன்று கலகலவென்று சிரித்து விட்டாள் கவுரி. விதியும் சிரித்தது!

அவளை சோகக்கடலில் தள்ளி விட நேரம் பார்த்து கொண்டிருந்தது.

11

''ஆத்தா கவுரி! போதும் இங்கன வா! உன் கையால கஞ்சியை குடுச்சாலே வவுறும் மனசும் ரொம்பிடும் தாயீ...! வெஞ்சனம் எதுவும் வேணாம். வெரசா வெளியில வா புள்ள!''



ஊஞ்சலில் அமர்ந்திருந்த சொக்கலிங்கம் இருப்புக் கொள்ளாமல் தவித்தார்.

சமையல்காரம்மா இன்று வேலைக்கு வரவில்லை. காய்ச்சலில் படுத்து விட்டதால் தகவல் அனுப்பி விட்டாள்.

இளம் பச்சை வண்ண காட்டன் புடவையை வரிந்து சொருகிக் கொண்டு களத்தில் இறங்கி விட்டாள் கவுரி.

''கவுரி! இங்கன வா புள்ள! இந்த காமாட்சி வேற! சடங்கு வீட்டுக்கு கெளம்பி போனவ அங்கனயே உக்காந்து வாயடிச்சுக்கிட்டிருக்கா போல ஆத்தா கவுரி!''

நெற்றியோரம் பூத்த வியர்வையை புறங்கையால் துடைத்துக் கொண்டே சமையல் கட்டிலிருந்து வெளிப்பட்டாள் கவுரி.

''இதோ ஆச்சுப்பா! வெங்காய சாம்பார் தக்காளி ரசம், வாழைப்பூ கூட்டு, உருளைக்கிழங்கு கறி, எள்ளு துவையல் அப்பளம் எல்லாம் ரெடிப்பா... சாப்பிடலாமா? அம்மா...சடங்கு வீட்டுலே சாப்பிட்டுட்டு வந்துடு வாங்கப்பா!...!''

சொக்கலிங்கம் பெருமிதத்தில் மிதந்தார். கவுரி ''கண் பார்த்தால் கை செய்யும்'' வகையைச் சார்ந்தவள். விடுமுறை நாட்களில் வீட்டிலிருக்கும் போது...சமையல் காரம்மா சமையலில் மும்முரமாக இருக்கும் போது கூடமாட இருந்து பேச்சு கொடுத்துக் கொண்டே உன்னிப்பாக கவனிப்பாள் கவுரி.

பத்திரிக்கையில் தான் படித்த புது அயிட்டத்தை அவ்வப்போது செய்து... பெற்றவர்களுக்குப் பரிமாறி அவர்களை சந்தோஷத்தில் திக்குமுக்காட வைப்பாள்.

'ஒன்னோட கைப்பக்குவமே தனிதேன்! இந்த கைக்கு வைர மோதிரம் செஞ்சு போடணும் கண்ணு!''

தோட்டத்து தலை வாழை இலையில் மகள் பரிமாறிய அயிட்டங்களை ஒரு பிடி பிடித்தார் சொக்கலிங்கம்.

''ஒன்னோட காலேசு படிப்பு நேத்தோட முடிஞ்சிருச்சு! இனிதேன்... என்னோட பொறுப்பு அதிகமாகுது. உனக்கேத்த ராசகுமாரனை வலை வீசித்தேட வேண்டியதுதேன்!''

''அதிருக்கட்டும்பா!... பூங்கோதை இல்லேப்பா? அய்யனாரோட பொண்ணு! அவ மனசொடிஞ்சு போயி மொட்டைக் கிணத்துல விழுந்துட்டாளாம்! நல்ல வேளையா யாரோ பாத்துட்டு கத்திக் கூப்பாடு போட்டதும்... வயக்காட்டுல வேல பாத்தவங்க திமுதிமுனு ஓடி வந்து அவளைத் தூக்கி காப்பாத்திட்டாங்க! நேத்து நைட்டெல்லாம் பூங்கோதையைப் பத்தின நெனப்புல...தூக்கமே வரலைப்பா! ரொம்ப பாவம்பா!''

''நேத்து டவுனுக்குப் போயிட்டு திரும்ப...ரொம்ப தாமசமாயிருச்சு அதேன் எனக்கு வெவரம் தெரியல... பாவம்! பூங்கோதை ரொம்ப காலமா கரையேறாம நிக்கிறா! அய்யனாரு ஏற்கனவே மூணு

பொண்ணுங்களை கட்டிக் குடுத்திட்டு முழி பிதுங்கிட்டிருக்கான். வயித்துப் பாட்டுக்கே கஷ்டம்... ஆஸ்துமா வியாதி வந்து அவஸ்தைப் படறானாம்!''

''அய்யனார் ஒரு மூட்டை தூக்கற தொழிலாளி! ஆஸ்துமா பேஷண்ட்! கடன் தொல்லை வேற 'இதுல நாம எதுக்கு அப்பாவுக்கு பாரமா இருக்கணும்'னு... பூங்கோதை தற்கொலை முயற்சியில இறங்கிட்டா... அப்பா! ப்ளீஸ் பூங்கோதைக்கு ஒரு விடிவு பிறக்கணும் பா... நீங்க மனசு வெச்சா அது நடக்கும்...!

ஒரு பெண்ணைக் கரையேத்தறது ரொம்ப புண்ணியம் இல்லியாப்பா?'' தழுதழுத்தாள்.

கழிவிரக்கத்தில் கவுரியின் விழிகள் வியர்க்க ஆரம்பித்தன. மகளை ஒரு கணம் ஊன்றி கவனித்தார் சொக்கலிங்கம்.

''எங்கிட்ட சொல்லிப் புட்டேல்ல... விடு! நா பாத்துக்கறேன். தக்காளி ரசத்தை டம்ளர்லே ஊத்து கண்ணு! ரொம்ப ருசியா இருக்கு! மருதுவை வண்டி கட்டச் சொல்லும்மா ஒரு சோலி இருக்கு!''

மகள் மனம் கலங்குவதைப் பொறுக்க மாட்டாமல் பேச்சை திசை திருப்பினார் சொக்கலிங்கம்.

மூன்று வாரங்கள் கடந்திருக்கும். வராண்டாவின் மூலையில் சுருண்டு படுத்திருந்த ஜிம்மியைத் தடவிக் கொடுத்தாள் கவுரி.

நிமிர்ந்து பார்த்து இலேசாக வாலை ஆட்டியபடி ஈனஸ்வரத்தில் முனகிவிட்டு மீண்டும் தலையை சாய்த்துக் கொண்டது.

''கவுரி! என்ன ஆத்தா வாட்டமா இருக்கே?'' பட்டுச் சேலை சரசரக்க வந்து நின்ற காமாட்சி கரிசனத்துடன் மகளைத் தொட்டாள்.

''ஜிம்மிக்கு என்னாச்சுன்னு தெரியலம்மா! நேத்து நைட்டெல்லாம் ஊளையிட்டுச்சு! சாப்பாடு வெச்சேன் தொடவே இல்ல அது உடம்புக்கு என்னவே பண்ணுது போல கண்ணீர் விடுது வழக்கத்திற்கு மாறா குரைச்சுக்கிட்டே இருந்துச்சு பாவம்மா!'' கவலையுடன்



''டேய்! நேத்து நான் அனுப்பின அதே எஸ்.எம்.எஸ்.ஐ இன்னிக்கு வேற ஒருத்தருக்கு அனுப்பிறியே! இது நியாயமா?''

விட்ரா! இது ரீ-மிக்ஸ் எஸ்.எம்.எஸ்டா!''

-தேனூர். வீ.பெரியசாமி.



ஏறிட்டாள் கவுரி.

''என்ன தாயீ? ஏன் வெசனப்படறே? மருதுவை கூட்டிக்கிட்டு ஜிம்மியை அதுக்குரிய டாக்டரு கிட்ட காமிச்சிட்டு வாயேன்! நேத்து தேன் அத நீ தூக்கிட்டு வந்த மாதிரி இருக்கு அதுக்குள்ளாற ஒரு வருஷம் ஓடிருச்சே கண்ணு!

செரி! இன்னக்கி முகூர்த்த நாள் தாயி பெரியகுளம் சுப்பிரணிய சாமி கோவில் வரை போயிட்டு வாரோம் என்ன தாயி அப்டி பாக்கறே? ஆத்தாவேட கருணையில இன்னிக்கு அய்யனாரு மவ பூங்கோதை கழுத்துல தாலியேறப் போகுது முன்ன வந்து நின்னு கல்யாணத்தை நடத்திக் குடுக்கணும்னு அய்யனாரு அழுத்தி சொல்லிப்புட்டான். அதேன்!'' காவியேறிய பற்கள் தெரிய சிரித்தார் சொக்கலிங்கம்.

கவுரியின் மனம் பெருமிதத்தில் பொங்கிப் பூரித்தது. 'அ... அப்பா! எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா! உங்கள நெனச்சா ரொம்பவும் பெருமையாக இருக்குப்பா!'' சட்டென்று எழுந்து அப்பாவின் கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

''என்ன மசமசன்னு நின்னுக்கிட்டு? வாங்க! கண்ணாலத்துக்கு போ வேணாமா?'' அதட்டினாள் காமாட்சி.

அம்மா!... நீங்க ரெண்டுபேருமே பொருத்தமான ஜோடிம்மா என் கண்ணே பட்ருரும் போல இருக்கு! உங்களுக்கு மகளா பிறந்ததுக்கு நா ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும்!'' குரல் கரகரக்க கவுரி பேசினாள்.

''அடி ஆத்தி... கிறுக்குப் பய புள்ளயா இருக்கு! மாத்தி மாத்தி பாராட்டிக்கிட்டு கெடக்கா!'' கிண்டலாய் கூறிக் கொண்டே வாசலைக் கடந்தாள் காமாட்சி.

''பாத்தியா? கிறுக்குப் பய புள்ளயாம்! சந்தடிவாக்கில என்னைத் தேன் வாரிவிடறா உங்கம்மா!'' என்று சொக்கலிங்கம் கூறியதும்... வீட்டு வாசலருகே நின்றிருந்த மருது உட்பட அனைவருமே 'குபீர்' என்று சிரித்து விட்டனர்.

பூங்கோதைக்கு நகைபோட்டு சீர் செனத்தி செய்து கல்யாணச் செலவு மொத்தத்தையும் தான் ஏற்றுக் கொண்ட பெருந்தன்மையை கவுரியிடம் கூட சொக்கலிங்கம் வெளிப்படுத்தாத பாங்கு அவளது மனதைப் பாகாய் கரைய வைத்தது.

தம்பதி சமேதராக அம்பாஸிடருக்குள் அமர்ந்தவர்களை விழிகளில் பெருமிதம் மின்ன கையசைத்து வழியனுப்பி வைத்தாள் கவுரி.

மருது வில் வண்டியைப் பூட்டி தயாராக ஏறி உட்கார்ந்ததும் ஜிம்மியுடன் அதில் ஏறி அமர்ந்தாள் கவுரி. கழுத்தில் கட்டி விடப்பட்ட மணிகள் குலுங்க காளைகள் செம்மண் சாலையில் புழுதியைக் கிளப்பிய வண்ணம் தேனியை நோக்கி விரைந்தன.

கால்நடை மருத்துவரிடம் ஜிம்மியைக் காட்டி சிகிச்சை பெற்றுக் கொண்டு விரைவில் வீடு திரும்பி விட்டிருந்தனர்.

பெரியகுளம் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் திருமணத்தை முன் நின்று நடத்தி வைத்தனர். சொக்கலிங்கமும் தம்பதியினர்! புது மணத்தம்பதிகளை வாழ்த்திவிட்டு பந்தியில் அமர்ந்து சாப்பிட்டு விட்டு காரிலேறினர். சொக்கலிங்கமும் காமாட்சியும்! விதி வழியில் காத்திருந்தது.

தேனியைக் கடந்து வரும் வழியில் எதிரே வந்த லாரி அசுரத் தன மாய் மோதியது. எமன் படுவேகமாய் பாசக்கயிற்றை வீசினான்.

## 12

அசுர வேகத்தில் லாரி மோதியதில்...அம்பாஸிடர் உருத் தெரியாமல் நசுங்கிப் போனது.

'அருமை மகளை அனாதையாக தவிக்க விட்டு, அகால மரணமடையப் போகின்றோம்' என்பதை உணர்ந்து கொள்ளும் முன்பே...கண் மூடி திறக்கும் நேரத்தில் இருவருமே இன்னுயிரை நீத்து விட்டிருந்தனர்.

கவுரிக்கு தலையில் பெரிய இடியே விழுந்தாற் போலிருந்தது. விபத்தில் மாண்டு விட்டதால்...போலீஸ் கேஸாகி... பிரேதப் பரிசோதனை செய்த பின்பு பல மணி நேரங்கள் கழித்து தான் சடலங்களை ஒப்படைத்தனர்.

''பூங்கோதையோட கல்யாணத்தை முன்ன நின்னு நடத்திட்டு வாரோம்னு போனீங்களேப்பா... சந்தோஷமா பெருமையா வழி அனுப்பி வச்சேனே? என் கண்ணே பட்டுடுச்சா? ரெண்டு பேரும் என்னை தனியா தவிக்க விட்டுட்டுப் போயிட்டீங்களேப்பா?'' கல் மனமும் கரையும் வண்ணம் பரிதாபமாகக் கதறினாள் கவுரி.

''ஒரு நல்ல காரியத்தை நடத்திட்டு வந்தீங்களேப்பா

''ஒலிக்கு 'மீனிங்' உண்டு பெயருமுண்டு - வானத்தில் கர கர ஒலியை இடி எனலாம்... எழுப்பப்படும் சறு ஒலி பற்றி கூறு!''

''விடலை வாஷ்பேசினில் 'வவ்வே' -சிறு ஒலி எழுப்ப, கர்ப்ப ஐயம் என மீனிங். படுக்கை அறையில் மனைவியின் 'உஸ்' குழந்தையை எழுப்பாதே என கணவனை கண்டிக்கும மீனிங்...!''

-எஸ்.குருமூர்த்தி. தருமபுரி.





ஐயோ நல்லதுக்கே காலம் இல்லையா? ஒரு ச எறும்புக்கு கூட கெடுதல் செய்யாத உங்களுக்கா இந்த மாதிரி சாவு வரணும்? நானும் உங்க கூடவே வராம போயிட்டேனே? ஜிம்பி நைட்டெல்லாம் ஊளையிட்டுச்சே அப சகுனத்தை புரிஞ்சுக்காம உங்களை வழியனுப்பி வச்சேனே? அம்மா ஆ நான் பாவி!''

முகத்தில் அறைந்து கொண்டு பெருங்குரலில் கதறித் தீர்த்தாள். உறவுத் தலைகள் திரண்டு வந்து ஒப்பாரி வைத்து அழுதனர்.

''அய்யோ அண்ணே போயிட்டியே? என் கடைசி பொண்ணுக்கு கண்ணாலம் பண்ணி வக்கிறேன்னு சொன்னியே எந்த பரதேசிக்கோ கண்ணாலம் பண்ணி வச்சுட்டு உனக்கு கருமாதி பண்ணும் படி போயிட்டியே?'' தங்கலட்சுமி ராகத்தோடு ஒப்பாரி வைத்தாள்.

''மச்சானோட யாபாரத்துக்கு பணம் தாரேன்னு சொன்னியே?... சொன்ன வாக்கை காப்பாத்தாம மொத்தமா போயிட்டியே?'' வைரமணி புலம்பினாள்.

கவுரிக்கு அந்த 'பொய் முகங்களைப்' பார்க்கவே அருவருப்பாக இருந்தது. உலகமே சூனியமாகி விட்டது போலவும் தான் மட்டும் தனித்து விடப்பட்டது போன்ற உணர்வில் துடிதுடித்துப் போனாள்.

''கவுரி! சொன்னாக் கேளுடி! பச்சைத் தண்ணி பல்லுலபடாம இருந்தாக்க எப்படி புள்ள? மனசைத் தேத்திக்கோ! நாம குடுத்து வச்சது அவ்ளோ தேன்! பொழுதுக்கும் நீ அழுதுக்கிட்டே இருந்தாக்க அவங்க ஆத்மா சாந்தி அடையுமா சொல்லு! முருகி, கவுரியின் அருகிலேயே இருந்து தேற்றிக் கொண்டு இருந்தாள்.

இரண்டாம் நாளே தங்க லட்சுமி மற்றும் வைரமணியின் நிறம் வெளுக்க ஆரம்பித்து விட்டது.

''கவுரி பெத்தவங்கள இழந்துட்டு தவிக்குது இனி பெரியவங்க நாமதேன் அவளுக்கு எல்லாம் செய்யணும் அவ படிப்புதேன் முடிஞ்சிருச்சில்ல? எம்மவன் செந்திலுக்கு கண்ணாலத்தைப் பண்ணி வச்சிட்டாக்க கவுரி கண்ணைக் கசக்காம இருப்பால்ல அண்ணன் அண்ணிங்க ஆசையும் நிறைவேறும்ல என்ன நா சொல்றது?''

மோவாயை சற்றே தூக்கிப் பேசிய படி கண்களில் கர்வம் வழிய தங்கலட்சுமியை ஏறிட்டாள் வைரமணி.

''கூறு கெட்டவ பேசிக்கிட்டே கெடக்கா கம்முனு வேடிக்கை பாக்குறீங்களே? மூத்தவ நானிருக்கேன் உரிமை எம்மவன் ராமதுரைக்குத்தேன்! படிப்பில்லாட்டியும் ராசாவாட்டம் நிக்கிறான்! கவுரி அவனுக்குத்தேன் இதுக்கு மேல எவளாவது வாயைத் தொறந்தாக்க வெளக்குமாறு பிஞ்சிடும் சாக்கிரதை'' அவிழ்ந்த கூந்தலை கோடாலி முடிச்சிட்டுக் கொண்டே கர்ஜித்தாள் தங்கலட்சுமி.

அக்காளும், தங்கையும் முடிவாக ஒரு கை பார்த்து விடலாம் என்று சொற்போரில் இறங்கி விட்டனர். ஒப்பாரி வைத்து அழுவதும்... பேச்சு முற்றி சண்டையிடுவதுமாக இருந்தனர்.

உறவுக்காரர்களில் பாதிப்பேர் மூத்தவளுக்கும் பாதிப்பேர் இளையவளுக்கும் வக்காலத்து வாங்கி மோதிக் கொண்டனர்.

''கெட்டது நடந்து போச்சு! இது நடந்து முடிஞ்ச கையோட நல்ல காரியத்தை உடனடியா மூணு மாசத்துக்குள்ளாற நடத்திப்புடலாம்! கவுரியோட சம்மதத்தை கேட்போம்! ராமதொரை, செந்திலு ரெண்டு பேத்துல ஒருத்தனை மாப்பிள்ளையாக்கிடலாம் ''எந்த எளந்தாரி அவளுக்க புருஷனா வாணும்னு அவளே முடிவெடுக்கட்டும்'' பாவம் படிச்ச புள்ள அது! அவ எடுக்கற முடிவுக்கு நாம கட்டுப்படலாம்!''

உறவுத்தலைகளில் இருந்த 'பெரிசுகள்' கூடி முடிவெடுத்தன. கவுரி அரண்டு போனாள். அவளுக்கு பணத்தாசை பிடித்து அலையும் சொந்தங்களைக் காணவே பிடிக்கவில்லை. நிம்மதியாக கதறி அழுவதற்குக்கூட சுதந்திரம் இல்லாத நிலையை நினைத்து தேம்பினாள்.

சோகக்கடலில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருந்தவளுக்கு அவர்கள் செய்த அட்டூழியம் திகிலை வரவழைத்தது. அவளை ஒரு பொருட்டாகவே கருதாமல் அவர்களாகக்கூடி தீர்மானித்து அவளை நெருப்புக் குழியில் தள்ள முடிவே எடுத்து விட்டதை எண்ணி அவளது மனம் குமுறியது.

ராமதுரைக்கும் செந்திலுக்கும் சிறு வயதிலிருந்தே ஒட்டுதலோ ஒற்றுமையோ லவலேசம் கூட கிடையாது. 'நானா?- நீயா?' பார்த்து விடலாம் என்ற ரீதியில் போட்டிக்குத் தயாராகும் சேவல்களைப் போன்று தலையை சிலுப்பி விடைத்துக் கொண்டு முறைத்து கொள்வார்கள்.

''நல்ல நாளிலேயே. நாயகமாகத் திரிபவர்களுக்கு இந்த மாதிரி சூழ்நிலை அமைந்து விட்டால் கேட்கவா வேண்டும்?

ராமதுரையும் செந்திலும் ஆளுக்கு பத்து பத்து தடியன்களோடு சுற்றி வந்தனர்.

அவளது பாதுகாப்பு கருதியோ மனதுக்குள் இருந்த பயத்தினாலோ அடிக்கடி கவுரியின் அறைக்குள் எட்டிப் பார்த்தார் மருதப்பன்.

''மருது மாமா! என் கண்ணுல தூசு விழுந்தாக்கூட பொறுத்துக்க மாட்டாங்க... அப்பாவும் அம்மாவும்! இப்போ நெஞ்சே வெடிக்கிற மாதிரி கதறிட்டிருக்கேன். இதெல்லாம் கெட்ட கனவா இருக்கக்கூடாதான்னு மனசு கிடந்து அடிச்சுக்குது மாமா!'' தலைவிரி கோலமாய் அவள் கதறுவதைக் காணும் போதெல்லாம்

''தைரியமா இரு ஆத்தா! அவுக தெய்வத்துக்கு கிட்ட போயி சேந்துட்டாங்க அவங்க உடம்பு தான் தாயி அழிஞ்சிருச்சு ஆனா உசுரு உன்னைத்தேன் சுத்தி வரும் ஒனக்கு துணையா காவல் தெய்வமா அவுக இருப்பாக தாயி!'' ஆறுதல் படுத்துவார் மருது!

'கவுரிக்கு கவசமாக மருது இருக்கிறான் அவன் இருக்கும் வரையில் தங்களது திட்டமெல்லாம் தவிடுபொடியாகி விடும்' என்பதை



உணர்ந்த உறவுத்தலைகள் சதியாலோசனை நடத்தினர்.

''என்ன மருது? எங்க எல்லாத்தையும் தாண்டி உள்ளாற போயி அந்த புள்ளையை பாக்குறே பேசறே! எங்க அண்ணனுக்கும் அண்ணிக்கும் புத்தியே இல்ல. நாயைக் குளிப்பாட்டி நடுவூட்டுலதேன் வச்சிருக்காக. செரி எங்கண்ணன் தேன் போயிட்டாருல்ல? இனிமே உனக்கு இங்கன என்ன வேலை? எழவு விழுந்த வூட்டுலே எதையாவது சுருட்டிட்டுப் போலாம்னு சுத்தி சுத்தி வர்றியாக்கும்?'' வைரமணி நாக்கில் நரம்பில்லாமல் கேட்டு விட்டாள்.

''அதானே வயசுப் பொண்ணு துக்கத்துல சொடக்கா சொகத்துக்கு ஆசப்பட்டு அதுக்கு தொச்சும் சூனியம் ஜீனியம் வெச்சிடப் போறியான் இவன் வச்ச வசியத்துல எங்கண்ணன் கடைசி வரைக்கும்... இவன் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டுவாருல்ல?'' பல வருடங்களாக வீட்டோடு தங்கி மாடாய் உழைத்த மருதப்பனின் மீது சேற்றை வாரி இறைத்தாள் தங்கலட்சுமி.

அந்த உண்மையான விசுவாசியால் அந்த நாராசமான வார்த்தைகளைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை! கவுரியிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் மறைந்து விட்டார் மருது.

## 13

'ஆண்டாண்டு அழுதாலும் மாண்டவர் திரும்பு வதுண்டோ?' அழுதழுது கவுரிக்கு கண்ணீரே வற்றி விட்டது. நேற்று வரை ரத்தமும் சதையுமாய் நடமாடி தன்மேல் பாசத்தை மழையாக வர்ஷித்தவர்கள்... இன்று சட்டத்திற்குள் அடங்கி நிழற்படமாய்... புன்னகைத்ததை எண்ணி விழிகளை பெற்றோர்களின் புகைப்படங்களின் மீது பதித்திருந்தாள்.

அன்று தான் அவர்களது 'காரியம்' முடிந்திருந்தது. கால் கொலுசு சப்தம் கேட்டு மெல்ல ஏறிட்டாள். முருகி நிற்பதைப் பார்த்ததும் ''முருகி! இது நாள் வரை ராத்திரி எங்கூடவே தங்கிட்டே'... 'காரியம்' தான் முடிஞ்சிருச்சே! உங்க வீட்டுக்குப் போ முருகி! இழப்புக்கு மேல இழப்பை சந்திச்சு என் இளகின மனசு இறுகிப் போயிடுச்சுடி இனி நான் தைரியமா இருந்துப்பேன். நீ கிளம்புடி!'' என்றாள்.

''கவலைப் படாதே கவுரி! மருது மாமா எப்டியும் திரும்ப வந்துருவாரு உன் மேல உசுரையே வச்சுருக்கற மனுஷரு மனுசு கேக்காம உன்னைப் பாக்க ஓடியாந்துருவார்டி!'' முன் நெற்றியில் கலைந்து புரண்ட கூந்தலை ஒதுக்கிவிட்டு கவுரியின் கண்ணீரைத் துடைத்தாள் முருகி.

அரை மனதோடு தான் வீட்டிற்கு கிளம்பிச் சென்றாள். ஆள் அரவமின்றி தனித்து விடப்பட்டது பெற்றவர்கள் மற்றும் மருது மாமா

வைப் பற்றிய நினைப்பு வந்து பாறையாய் நெஞ்சை அழுத்தியது.

நள்ளிரவு நேரத்தில் தூக்கம் பிடிக்காமல் அறைக்குள் உலாவிக் கொண்டிருந்த கவுரி ஜன்னல் கதவைத் திறந்து இருளில் மூழ்கிக் கிடந்த தோட்டத்தை வெறித்தாள்.

சில் வண்டுகளின் ரீங்காரம் அவளது செவிகளை ஸ்பரிசித்தது. திடீரென்று சருகுகள் மிதிபடும் சப்தம் கேட்டதும் காதுகளைத் தீட்டிக் கொண்டாள்.

'இந்த நேரத்தில் யார் தோட்டத்துக்குள் உலாத்துகிறார்கள்?' உள்ளூர கேள்வி எழுந்தது.

''அவ அனேகமா என்னைத்தேன் கட்டிக்க சம்மதிப்பாள்னு நெனக்கறேன். என் நெனப்புல மண்ணள்ளிப் போட்டுட்டு கவுரி வேற முடிவெடுத்தாக்க என்ன பண்றதுன்னு பயமா இருக்கு

ஏதாவது பிளான் பண்ணி எல்லார் கண்ணுலேயும் மண்ணைத் தூவிட்டு கவுரிக்கு மயக்க மருந்து குடுத்து அவளைக் கெடுத்துட்டா அப்புறம் வேற வழியில்லாம எனக்கு கழுத்தை நீட்ட சம்மதிப்பா இல்லியா?''

இருட்டில் ராமதுரை யாருடனோ மெல்லிய குரலில் பேசியது அப்படியே கவுரியின் காதுகளில் விழுந்தது.

திகிலில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. உள்ளுக்குள் பயம் ஊறியது. கால்கள் தொய்ந்து துணியாய் துவண்டன.

'ஊஹூம்! இனியும் இங்கே இருந்தால் என் பெண்மைக்கே ஆபத்து! அத்தோடு அமைதியாக இருக்கும் இந்த ஊரில் இந்த இரு கோஷ்டிகளால் பெரிய கலாட்டாவே நடக்கும் போல் இருக்கிறது. இதனால் ஊர்க்கலவரமே வந்து விடுமோ! அதற்கு நான் காரணமாக இருக்க வேண்டுமா? யாரிடமும் எந்த நியாயத்தையும் பேசி நிலை நாட்ட முடியாது இந்த சொத்துக்களை இவர்களே கட்டி ஆளட்டும்!'

அவளுக்குள் முடிவெடுத்தாள். ஒரு பையில் இரண்டு காட்டன் புடவைகளைத் திணித்துக் கொண்டாள். அன்று அதிகாலை மூன்றரை மணிக்கு மெல்ல வெளியேறினாள். கூடத்தில் அனைவரும் அடித்துப் போட்டாற்போல் உறங்கிக் கொண்டிருந்தனர்.

ராமதுரை கோஷ்டியும், செந்தில் கோஷ்டியும் கை, கால்களைப் பரத்தியபடி ஆழ்ந்த' உறக்கத்திலிருந்தனர்.

பூனைப் பாதம் வைத்து நடந்து வீட்டை விட்டு வெளியேறினாள். செம்மண் சாலையில் ஓட்டமும் நடையுமாக 'யாராவது பின் தொடர்ந்து வந்து பிடித்து விடுவார்களோ' என்ற பயத்தில் அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டே விரைந்ததில் பெரிய முள் ளொன்று அவளது வலது பாதத்தை 'நறுக்' என்று பதம் பார்த்தது.

''ஆ! அம்மா!'' பஞ்சு போன்ற மென்மையான பாதத்தைத் தைத்திருந்த முள்ளை பலங்கொண்ட மட்டும் பிடுங்கி எறிந்தாள். இளஞ்சூடான இரத்தம் குபுக்கென்று பீறிட்டதையும் பொருட்படுத்தாமல்



நொண்டி நடந்து கொண்டே பஸ் நிறுத்தத்தை அடைந்தாள்.

கிலியிலும், திகிலிலும் அந்த அதிகாலை நேரத்தில் கூட வியர்த்துக் கொட்டி தொப்பலாய் நனைந்தாள். காலில் வலி விண் விண் என்று தெறித்தது.

''நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறதே இன்னமும் பஸ்ஸைக் காணோம்? யார் கண்ணிலாவது பட்டுத் தொலைக்கும் முன் இங்கிருந்து போய் விட வேண்டுமே அம்மா கவுமாரி காப்பாத்து!'' உருக்கமாய் வேண்டிக் கொண்டாள்.

நல்லவேளையாக குமுளிக்குச் செல்லும் பேருந்து பெருமூச்சு விட்டபடி அந்த நிறுத்தத்தில் வந்து நின்றது. சட்டென்று கவுரி ஏறி ஜன்னலருகே அமர்ந்து கொண்டாள். மற்ற பயணிகளை திகிலுடன் நோட்டமிட்டாள். எல்லாரும் உழைத்து உரமேறியவர்கள். காய்ந்து காரு தட்டிய கை, கால்கள் வியர்வை நாற்றம் உள்ளே கசகசத்தது.

''குமுளிக்கு ஒரு டிக்கெட்!'' டிக்கெட்டை நீட்டிய கண்டக்டர் கவுரியை குறுகுறுவென்று பார்த்து விட்டு அப்பால் நகர்ந்தான். தன்னந்தனியே ஒரு இளம் பெண் பயணிப்பதைக் குறித்து ஒருமாதிரியாக நினைக்கிறான் போலும்!

பயத்தில் சிலிர்த்த உடலைக் குறுக்கி அமர்ந்தாள். ''என்னத்தா... குளிருதா? கண்ணாடியை மூடிடவோ?'' கொச்சையாய் ஆனால் கனிவுடன் விசாரித்தது ஒரு குரல்! கேட்ட கிழவரைப் பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

''இருக்கட்டும்! காத்து வர்றது நல்லாயிருக்குது!''

''ஆமா! இல்லாங்காட்டி பொகையிலை நாத்தம், வேர்வை வாடைன்னு உனக்கு குமட்டும் குமுளிக்கு என்ன ஜோலியா வர்றே?''

''எங்க பெரியம்மா வீட்டுக்குப் போறேன்!''

''யாரு? எங்கன இருக்காக?'' கிராம வாசிக்கே உரிய குடைந்தெடுக்



''நாட்டில் இப்படியெல்லாம் ஏமாற்றுவாங்க...ன்னு தெரியாமல் போச்சு...!''

''எப்படி ஏமாத்தினாங்க...!''

''நட்சத்திர இரவு...ன்னு ஐநூறு ரூபாய் டிக்கெட் வாங்கிட்டுப் போனேன். வானத்தில் இருக்கிற நட்சத்திரத்தைக் காட்டி அனுப்பிட்டாங்க...!''

-தேனி, எஸ்.மாரியப்பன்

கும் கேள்விகள்.

''எஸ்டேட்டுக்கு பக்கமாகத்தான்'' மேலும் ஏதேனும் கேட்கும் முன் கண்களை மூடி சாய்ந்து கொண்டாள். கிழவர் ஏதோ முணுமுணுப்பது கேட்டது. துக்கம் தாளாமல் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. அழுது கொண்டே அழகான இளம் பெண் தனியாக பயணித்தால் பார்ப்பவர்களுக்கு சந்தேகமாக, வித்தியாசமாக இருக்கும். எதற்கு பிரச்சனை? கீழுதட்டை அழுந்த கடித்து துக்கத்தை விழுங்கினாள்.

அது பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முந்தைய பேருந்து போலும்! மூச்சிரைக்க, முக்கி, முனகி, உறுமி, செருமி மலையேறிக் கொண்டிருந்தது. 'பொழுது' நன்கு புலர்ந்து விட்டிருந்தது.

கவுரிக்கு இந்த அவலம் மட்டும் நேராதிருந்தால் மிகவும் சுவாரசியமாய் ரசித்திருப்பாள். மலைப்பாதை வளைந்து வளைந்து மேலே ஏற ஏற சின்னதாகிக் கொண்டிருந்த நிலப்பகுதியைப் பார்த்தவளுக்கு தலை சுற்றியது. வெகு கீழே தெரிந்த ஊர்களைப் பார்க்க துணிவின்றி கண்களை மூடி ஜன்னல் கம்பியில் சாய்ந்தாள்.

நாற்பது பேரை ஏற்றக்கூடிய பேருந்து ஐம்பது பேர், அவர்களது கூடை, பெட்டி, சாக்கு மூட்டைகளையும் சுமக்கும் அலுப்பில் முணுமுணுத்தது.

ஆயாசத்துடன் குமுளி பஸ் ஸ்டாண்டில் வந்து நின்ற பேருந்திலிருந்துதயக்கத்துடன் இறங்கினாள் கவுரி.

**14**

மிரள விழித்தபடி நகர முற்பட்ட போது

''அட! கவுரி? என்னாத்தா இங்கன? நில்லு வாரேன்!'' என்றபடி ஓடி வந்தார் முத்துப்பாண்டி.

''தனியா எங்க கிளம்பிட்டே? நா யாவார விஷயமா முந்தா நேத்து இங்க வந்தேன் வந்த சோலிய முடிச்சுக்கிட்டு ஊருக்கு கிளம்பிட்டிருக்கேன். தேனி பஸ்சுக்காக காத்திருக்கேன். நீ வந்து இறங்கி குண்டைத் தூக்கிப் போடறே? ஏதாச்சும் பிரச்சனையா புள்ள சொல்லு!'' மணியக்காரர் முத்துப்பாண்டி உரிமையாய் அதட்டினார்.

சொந்தங்களின் கொட்டம் தாளாமல் தனியாக வீட்டை விட்டு வெளியேறும் நிலைமைக்குத் தான் ஆளானதை மெல்லிய குரலில் கூறினாள் கவுரி.

''அட என்னாத்தா? சுத்த பைத்தியக்கார புள்ளயா இருக்கியே? நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்? முருகி எதுக்கு உன்னை தனியா விட்டுச்சு? என் சினேகிதனோட பொண்ணு நீ! ஊர்ப்பெரியவங்க எல்லாம் சேந்து கூட்டம் போட்டு பேசுவோம்! என்ன தான் சொந்த பந்தமா இருந்தாலும் அவங்க வெளியூரைச் சேர்ந்தவங்க! எங்க பேச்சுக்கு அவங்க கட்டுப்பட்டுத் தேன் நடக்கணும். மீறினாக்க நாங்க



ஒரு கை பாத்துப்புடுவோம்ல? அதுக்கும் அடங்கலைன்னா... போலீசுக்குப் போயிடலாம்! என்ன சொல்றே தாயி?''

கவுரி சட்டென்று அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

''ஐயோ வேணாம் மாமா! இது அசிங்கம்... ஊர்கூட்டத்திற்கு நம்ம குடும்ப விஷயத்தை எடுத்துட்டுப் போறதுக்கு மனசில்லை. மாமா! போலீசுக்குப் போனா அது கேவலம்! பிளீஸ்... எனக்காக இதை விட்டுருங்க நா கொஞ்ச நாளைக்கு இந்த விஷயத்தை ஆறப் போட்டா ஒரு முடிவு கிடைக்கும்னு நம்பறேன்! என்ன தான் அடாவடித்தனம் செஞ்சாலும் தங்க லட்சுமியும் வைரமணியும் எனக்கு அத்தைங்க எங்கப்பா அவங்க மேல உசுரையே வச்சிருந்தாரு அதான்!''

''உன் மனசு புரியுது தாயி! நம்ம ஊருக்கும் எந்த கலவரமும் வரக்கூடாதுன்னு நெனைக்கிறே! குடும்ப விஷயத்தை வெளியில கொண்டு வரவும் தயங்குறே செரி! நீயும் எனக்கு மக தானே? நா எப்படி உன்னை வேடிக்கை பாத்துட்டு இருக்கிறதாம்?'' கோபத்தில் கொந்தளித்தார்.

''மாமா! பிளீஸ்... எனக்காக கொஞ்சம் பொறுமையா இருங்க நா எங்க பார்வதி பெரியம்மா வீட்டுக்கு தான் வந்தேன். நா இங்கயும் ரொம்ப நாள் இருக்க முடியாது. ரெண்டு கோஷ்டியும் எப்படியும் தேடி வருவாங்க பெரியம்மா மூலமா ஏதாவது வேலைக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டு வேற எடத்துக்கு சீக்கிரம் போயிடணும் மாமா!''




''எத்தனை நாளைக்குத்தேன் தலைமறைவா இருக்கிறதாம்?'' முணு முணுத்துக் கொண்டே முத்துப்பாண்டி யோசனையுடன் நடக்க ஆரம்பித்தார். கவுரியின் முகத்தில் திருப்தியும், தெம்பும் படர பின் தொடர்ந்தாள்.

அருமையான மலைப் பிரதேசத்தில் இறங்கி நடந்த போது அந்த எஸ்டேட்டின் அழகு மனதிற்கு இதம் தந்தது. பார்வதியின் வீட்டை அடைந்த போது கதவில் பூட்டு தான் தொங்கியது. பக்கத்து வீட்டில் விசாரித்த போது

''அந்தம்மா ரிட்டையர்ட் ஆயிட்டாங்க வட இந்தியாவுக்கு

டூர் போயிட்டாங்க! பார்வதியோட பெரிய மகன் மெட்ராஸ்லே இருக்கான். அவன் கூட ஒரு மாசம் இருந்தாங்க அப்படியே டூர் கிளம்பிட்டாங்க. போன்ல பார்வதி தான் இந்த விஷயத்தைச் சொல்லி 'வீட்டை பாத்துக்கண்ணு' சொன்னாங்க! வர்றதுக்கு இருபது நாளாகுமாம்!

கவுரிக்கு திக்கென்றிருந்தது. இனி எங்கு செல்வது?

''ஓ! அதான் அவங்க சாவுக்கே வரலையா? ராமதுரையும், செந்திலும் பொறுப்பா தகவல் அனுப்பலையேன்னு நெனச்சேன்!'' கவலையுடன் முணு முணுத்தாள்.

பேக்கிலிருந்த சிறு டைரியை எடுத்து கல்லூரித் தோழிகளின் முகவரிகளைப் புரட்டினாள்.

''எங்கு செல்வது? யார் வீட்டிற்கு அடைக்கலமாகச் செல்வது?'' அடிவயிற்றில் ஒரு பயப்பந்து வேகமாய் உருண்டது.

★★★

''கவுரி... கவுரி! என்ன தாயி தெகச்சு நின்னுட்டே? வாம்மா எங்கூட பார்வதியம்மா வர்ற வரைக்கும் ஒரு பாதுகாப்பான நல்ல எடத்துல நீ தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிப்புடறேன். நீ அங்கன நிம்மதியா தங்கலாம். ஒரு ஈ காக்கா உன்னை அண்ட முடியாது. நானும் ஊர்லே நிம்மதியா இருப்பேன்ல?'' என்றபடி முத்துப்பாண்டி விடுவிடுவென்று நடந்தார்.

கவுரி தயங்கித் தள்ளாடினாள். அகோரப் பசி...! சிறு குடலைப் பெருங்கடல் கல்வி இழுத்தது.

''ஏம்மா தயங்கறே? கண்ணெல்லாம் பஞ்சடைச்சாப்பல இருக்குது பாரு கொலைப் பட்டினி கெடந்து சதா கவலைப் பட்டா போனவங்க வந்துடுவாங்களா? வா! ஒரு வாய் சாப்பிடலாம். சாப்பிட்டாத்தேன் உடம்புல தெம்பு வரும்''

உணவகத்தை நோக்கி இருவரும் நடந்த போது பலாப்பழ


''என் பையன் கிட்ட சுவர்கடிகாரத்தை 'வால் கிளாக்'னு சொல்வாங்கன்னு சொன்னேன்''

''சரி அதுக்கு ஏன் வருத்தமா இருக்கே?''

''அதோட வால் எங்கே இருக்குன்னு கிண்டலா கேக்கறான்''

ஆர். தங்கராஜ்.
திருப்பூர்.





வாசனை காற்றில் மிதந்து வந்து நாசியைத் துளைத்தது. 'பழ மண்டி'யை கடந்து நடந்த போது பெரிய பெரிய பலாப்பழங்களை ஆச்சரியத்தோடு பார்த்தாள் கவுரி.

கேரளத்து எல்லை என்பதால் பழங்களின் நிறமும் வாசமும் வித்தியாசமாக கண்களைக் கவர்ந்தது. காண்போரின் நாவில் ஜலம் ஊற வைத்தது.

''தள்ளு... தள்ளு... ஓரமா தள்ளிப் போ! மணி அடிக்கிறது. காதுல விழலையா? ஓரமா ஒதுங்கு!'' சத்தம் கேட்டதும் மற்றவர்களைப் போன்றே இவர்களும் கடைத்தெருவின் ஓரமாய் சட்டென்று ஒதுங்கித் திரும்பிப் பார்த்தனர்.

ட்ரை சைக்கிளில் பருத்த பலாப்பழங்களைக் குவித்து அடுக்கி அதை ஓட்டி வருபவன் மருதப்பனா?

இனிய அதிர்ச்சியில் முத்துப்பாண்டியும் கவுரியும் ஒருவர் முகத்தை ஒருவர் சந்தோஷமாய் பார்த்துக் கொண்டனர்.

''அட மருது!''.

''ஆமா! மருது மாமாவே தான் மருது மாமா!'' உரத்துக் குரல் கொடுத்தாள் கவுரி.

வண்டியிலிருந்து துள்ளிக் குதித்த மருது கண் கலங்கியபடி விழுந்தடித்து ஓடி வந்தார்.

''என் கிட்ட சொல்லிக்காமலே வந்துட்டீங்களே மருது மாமா?''

''மன்னிச்சுடு தாயி! பழிச்சொல்லை தாங்காமத்தேன் வந்துட்டேன் கண்ணு!''

''உங்களுக்கு என்ன? சொல்லு தாங்காம வந்துட்டீங்க என்னை நரகத்தில் விட்டுட்டு நீங்க மட்டும் தப்பிச்சு வந்துட்டீங்க? நீங்க பெத்த பொண்ணாயிருந்தா இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போவீங்களா மாமா?''

''ஐயோ... இந்த பாவியை மன்னிச்சுடும்மா தப்பு தேன் செரி நீங்க இங்கன எதுக்கு வந்தீக?''

விஷயமறிந்தவர் கலங்கிப் போனார்.

''நாலு ஜனங்க வந்து போற எடத்துல நின்னு பேசிட்டிருக்கோம் வாங்க இந்த வீதியைக் கடந்து அப்பால போனாக்க ஒரு மேட்டுப் பகுதி வரும்! அங்கென ஒரு ஓலை குடிசையை வாடகைக்கு புடிச்சு தங்கியிருக்கேன். வாங்க போலாம்!'' என்று விட்டு ட்ரை சைக்கிளை பழ மண்டியில் ஓரம் கட்டி ஒப்படைத்துவிட்டு வந்தார் மருதப்பன்.

''மாமா! இனி நீங்க கவலைப்படாம கிளம்புங்க மருது மாமா என்னை கண்ணுக்குள்ள வச்சுப் பார்த்துப்பாரு!'' என்ற கவுரியை யோசனையுடன் ஏறிட்டார் முத்துப்பாண்டி.

''முதல்லே வவுத்துக்கு சாப்பிட்டுட்டு பெறவு முடிவு எடுக்கலாமே வாங்க!'' என்றபடி சிறிய உணவுகத்திற்கு நுழைந்தார் முத்துப்பாண்டி.



இட்லி, வெண் பொங்கல், வடை என்று சிற்றுண்டியை முடித்து விட்டு காபியை அருந்தும் போது சீரியஸான முகபாவத்துடன் பேச ஆரம்பித்தான் முத்துப்பாண்டி.

''கவுரி ஒன்னோட யோசனை எனக்கு உசிதமா படலைம்மா எப்படியும் ரெண்டு கோஷ்டிகளும் ஒன்னைத் தேடி இங்கென வருவாங்க மருது ஒண்டியா மேட்டுப் பகுதி குடிசையில் நீங்க தனியா தங்கறது அவ்வளவு பாதுகாப்பில்லை மோப்பம் புடிச்சு அங்க வந்துட்டாக்க உன் கெதி? மறுபேச்சு பேசாம எங்கூட கிளம்பி வாங்க சொல்றேன்!''

''ஆமா கண்ணு! அய்யா சொல்றது சரிதேன் அவங்க சொல்படி நடந்துப்போமா கவுரி?''

மருதப்பனும் ஆமோதிக்க அரைமனதுடன் வாடகைக்காரில் ஏறினாள் கவுரி.

**15**

**கா**ர் கிளம்பியதும் ஒரு வித மன இறுக்கத்துடன் அமர்ந்திருந்தாள் கவுரி. மனகம் மரந்தாற் போலிருந்தது.

''குமுளிக்கு மறுபக்கம் பார்த்தீன்னா தனியார் எஸ்டேட்டுகள் மட்டும்தேன் சாலை வசதி சுமாராத்தேன் இருக்கும்! அதுல வந்து போறவங்களும் அதிகமில்ல கவுரி!'' முத்துப்பாண்டி பேசிக் கொண்டே வந்தார்.

கால் மணி நேரத்தில் ஒரு மங்கிய கருப்புப் பலகை அம்புக் குறியோடு 'கைலாஷ் எஸ்டேட்- 15 கி.மீ'' என்று அறிவித்தது.

''இன்னுங் கொஞ்சம் தூரத்திலேர்ந்து மரகதம் அம்மாளுக்கு சொந்தமான பூமி தாம்மா- தனியார் ரோடுங்கிறதால சுமார்தேன் தவிர இப்படி அடிக்கடி பெய்யும் மழ வேற...''

குற்றாலச் சாரல் போன்று லேசாய் தூற ஆரம்பித்திருந்தது வானம்!

சாலையின் இரு மருங்கும் மரமும் பசுங்கொடிகளும் பூக்களுமாய் ஆர்ப்பாட்டமான அழகு! ஒடுங்கிய வளைந்த சாலையில் உறுமலாய் முன்னேறியது வாகனம்!

கவுரி அனுமானித்தபடியே மரகதம் அம்மாளின் பங்களாவுக்குத்தான் அழைத்துப் போனார் முத்துப்பாண்டி.

அவளால் சந்தோஷப் படவும் முடியவில்லை. துக்கப்படாமலும் இருக்க இயலவில்லை.

'பெற்றவர்களைப் பறி கொடுத்து, சொந்தங்களுக்கு பயந்து தன் பெண்மையைக் காத்துக் கொள்ள' சொத்துக்களை உதறி விட்டு ஓடி வந்த தனக்கு இப்போது இந்த பூமி தான் அடைக்கலம் ஆனால் இதுவும் எப்படியெப்படி தன்னைப் புரட்டித் தள்ளப் போகின்றதோ?' கண்களைச் சிமிட்டி பொங்கிய கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்

டாள்.

திடும்மென வெளிச்சம் மங்கி மேலும் இருண்டது. தலையைச் சற்றே குனிந்து வெளியே பார்வையோட்டினாள். சாலையின் இருபு றமும் மரங்கள் கவிழ்ந்து குடை போலிருந்ததால் ஏற்பட்ட இருள் மழை விட்டுச் சென்ற குளிருமாய் சேர்த்து அவளை அசத்தின.

பெற்றவர்களை இழந்த துயரத்திலும் சோகத்திலும் இது நாள் வரை தடைபட்டிருந்த உறக்கம் அவளைத் தழுவத் தொடங்கியது. அந்த உறக்கத்தை அவள் நன்கு அனுவிக்க ஆரம்பித்த நேரம் பெரிய பறவையொன்று கிறீச்சிட்டது போன்ற ஒலியொன்று அவளைத் தட்டி எழுப்பியது.

''ஒண்ணுமில்ல கவுரி கேட் திறந்த சத்தம் தேன்!'' என்றார் மருது.

இரட்டை இரும்பு கதவின் மறுபாதியும் விநோதமான ஒலியெ ழுப்பி விலக மிரட்சியுடன் பார்த்தாள் கவுரி.

''என்ன கவுரி? வீடு ஏதும் தெரியலையேன்னு பாக்குறியா? ரெண்டே நிமிஷந்தேன் இந்த வளைவு திரும்பியதும் புலப்படும் பாரேன்'' முத்துப்பாண்டி முறுவலித்தார்.

'அவளுக்குள் பெருத்த நிம்மதி, நிலவியதால் தான் அவளையும் மீறி அசந்து தூங்கி விட்டாள்' என்பதைப் புரிந்து கொண்டதைப் போல் கவுரியின் விழிகளை ஊடுருவிப் பார்த்தர் முத்துப்பாண்டி.

மிகப் பெரியதும் பழையதுமான பங்களா தான்! இந்தக் காலத் துக்கு ஏற்றபடி நவீனமாக மாற்றியமைக்கப் பட்டிருந்தது.

வேலையாள் சென்று தகவலைத் தெரிவித்ததும் பூஜையறையிலி ருந்த மரகதம் சால்வையைப் போர்த்தியபடி வெளிப்பட்டாள்.

''அடடே! மணியக்காரரா? வாங்க அட இந்தப் பொண்ணு... உங்க மகளோட சிநேகிதி தானே? வாம்மா உட்காருங்க!'' உபசரித் தாள் மரகதம்.

மணியக்காரர் முத்துப்பாண்டி சகல விபரத்தையும் தெரிவித்தார்.

''என் சினேகிதன் சொக்கலிங்கம் பேருக்கேத்தாப்பல தங்கமான வன். விபத்துல செத்துப் போறதுக்கு கொஞ்சம் முன்னாடி கூட ஒரு ஏழைப் பொண்ணுக்கு கண்ணாலம் செஞ்சுட்டு வந்தாங்க புருஷனும் பொஞ்சாதியும்! அவங்களோட செல்ல பொண்ணு கவுரி இன்னிக்கு கெதியத்துப் போய் நிக்கிறா!'' என்று தழுதழுத்தார் முத்துப்பாண்டி.

கவுரிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. சட்டென்று தலைமை குனிந்து கொண்டாள்.

மரகதமும் மனம் கரைந்து போனாள். கவுரியைப் பரிதாபத் தோடு ஏறிட்டுப் பார்த்தாள்.

''கவுரியை என் பொறுப்புல விட்டுட்டீங்கல்ல? கவலையை விடுங்க! கவுரியும் மருதுவும் அவுட் ஹவுஸிலே தங்கிக்கிட்டும்... படிச்ச பொண்ணுக்கு ஏத்த வேலையை கைலாஷ் கண்டிப்பா தரு வான். அவனுக்கு ஐ.ஜி. நல்ல பழக்கம்! அவன் நெனச்சா இந்தப் பிரச்



சினை எல்லாத்தையும் ஊதித் தள்ளிடுவான் ஆனா கவுரி அத விரும் பலைன்னு சொல்றீங்களே? விருப்பப்படி நடக்கட்டும் பிறகு பாத் துக்கலாம்! என்றபடி கவுரியின் மென் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள் மரகதம்.

''அப்பாடா! ரொம்ப நன்றிம்மா இனி என்பாட்டுக்கு ஊருக்குப் போயி நிம்மதியா கெடக்கலாம்! முத்துப்பாண்டி கரம் குவித்து நன்றி தெரிவித்து விட்டு விடை பெற்றுக் கொண்டார்.

மருதுவிடம் அவுட் ஹவுஸின் சாவியை எடுத்து கொடுத்து விட்டு கவுரியிடம் திரும்பினாள் மரகதம்.

''மனசுல எந்த சங்கடமும் இருக்கக் கூடாதும்மா! என்னை உன் னோட அம்மாவா நெனச்சுக்கோ! ரெஸ்ட் எடுக்க மட்டும் தான் நீ அவுட் ஹவுஸுக்குப் போகணும். மத்தபடி சதா இந்த அம்மாவோட தான் நீ இருந்தாகணும். சரியா?''

''ச... சரிம்மா!'' மரகதத்தின் கையைப் பற்றி தனது கண்களில் ஒற்றிக் கொண்டாள். மரகதம் நெகிழ்ந்து போனாள்.

''அம்மா... காபி பிளீஸ்!'' என்ற படி இரவு உடையுடன் மாடிய றையிலிருந்து வெளிப்பட்டு படிகளில் தடதடத்து இறங்கிய கைலாஷ் கவுரியைக் கண்டதும் வியப்பு மேலிட சட்டென்று நின் றான்.

கலங்கிய கண்களுடன் அவனை ஏறிட்டு கரங்களைக் குவித்து விட்டு பார்வையைத் தழைத்துக் கொண்ட கவுரியின் மனதைப் படம் பிடித்து பார்த்தது போல் உணர்ந்து கொண்டாள் மரகதம்.

'தான் ஒரு அபலையாக அகதியைப் போன்று அடைக்கலம் தேடி வந்த நிலைமையை எண்ணி உள்ளூர மிகவும் கூசிப் போனாள் கவுரி.

''கவுரி! அவுட் ஹவுஸிலே படுத்து தூங்கு! ரொம்பவும் களைப்பா தெரியறே! பல நாள் தூக்கம் காணாம கண்ணெல்லாம்



''மாறு வேடப்போட் டிக்கு ஏன் மேக்கப் போடா மல் போறே?''

''பைத்தியக்காரன் வேஷம்ப்பா அதான் ரியலா இருக்கட்டுமேன்னு வேஷம போடாமல் போறேன்''

-ஆர்.தங்கராஜ். திருப்பூர்

வீங்கி சிவந்திருக்கு பாரு! போம்மா!'' மரகதம் நாசூக்காக பணித்ததை புரிந்து கொண்டு சட்டென்று அகன்றாள் கவுரி.

லேசாக விந்தி நடந்து சென்ற கவுரியை கண் இமைக்காமல் பார்த்தான் கைலாஷ். கண்களில் குழி விழுந்து தாழம்பூ மேனி பொலிவிழந்து சோகத்தின் மொத்த உருவமாக காட்சியளித்தாள் கவுரி.

''இந்த பொண்ணை ஞாபகமிருக்கா? திருவிழாவுல முத்துப்பாண்டி வீட்டுல வச்சு பாத்தோமே?'' என்று கேட்டு சகல விபரத்தையும் தெரிவித்தாள் மரகதம்

'எனது அன்பு தேவதையின் வாழ்வில்... விதி இவ்வளவு மோசமாக விளையாடி விட்டதா?' கைலாஷின் அடிவயிறு பிசைந்தது.

**16**

ஒவ்வொரு முறை கவுரியை சந்திக்கும் போதெல்லாம்... அவள் மீது கைலாஷ் வைத்திருந்த மதிப்பு... பிறைநிலாவைப் போன்று படிப்படியாக வளர்ந்து கொண்டு தான் இருந்தது.

அவள் நினைத்திருந்தால்... அத்தைகளும் அத்தை மகன்களும் சொத்துக்கு ஆசைப்பட்டு அத்து மீறி நடந்து கொண்ட விதத்தை... ஊர்ப்பெரியவர்களிடம் முறையிட்டு தட்டிக் கேட்டிருக்கலாம்.

அல்லது துணிந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து ராமதுரை, செந்தில் கோஷ்டியினரின் அடாவடித் தனத்தை அடக்கி இருக்கலாம்.

தனது சொந்தப் பிரச்சினை வெளி உலகத்திற்குத் தெரிவதையோ அல்லது தனது உறவினர்கள் அவமானப்படுவதையோ அவள் விரும்பவில்லை!

திரண்ட சொத்துக்களை துச்சமாய் கருதி உதறி விட்டு ஓடி வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறாளே? தனக்கு கெடுதல் நினைக்கும் உறவினர்கள் கூட எந்த விதத்திலும் அவமானப்படக் கூடாது என்று நினைப்பதற்கு... எவ்வளவு பெரிய மனது இருக்க வேண்டும்?

இவளது கால் தூசுக்கு ஈடாவாளா அந்த நந்தினி? சொத்து சுகத்திற்கு ஆசைப்பட்டு இந்த வீட்டிற்கு மருமகளாக வரவேண்டும் என்று துடிக்கின்றாள் நந்தினி!

அவளது தந்தை பசுபதி... ஒன்று விட்ட அக்காளின் சொத்திற்கு ஆசைப்பட்டு தனது மகளை கைலாஷின் தலையில் கட்டப் பார்க்கிறான்.

மரகதத்தின் வருங்கால சம்மந்தி என்று சொல்லிக்கொண்டு பசுபதி, ஏகப்பட்ட இடங்களில் கடன் வாங்கி வருவதாக... அரசல் புரசலாக கேள்விப்பட்டிருந்தான் கைலாஷ்!

ஏழைப் பெண்ணின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்து



விட்டு திரும்பும் வழியில் விபத்தில் மாண்டிருக்கிறார்கள்... கவுரியின் பெற்றோர்கள்!

அந்த உன்னதமான மனம் படைத்தவர்கள் எங்கே? பசுபதி எங்கே?

அன்று ஆஸ்பத்திரியில்... அவள் இரத்த தானம் அளிக்க வந்த போது பார்த்தது தான்!

மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. அவளை இப்படியொரு சூழ்நிலையில்... அதுவும் அவனது வீட்டில் காண்போம் என்று கைலாஷ் கனவிலும் கருதவில்லை!

அவளது படிப்பு முடிந்ததும்... மரகதத்திடம் தனது விருப்பத்தைத் தெரிவித்து முறைப்படி அவளைப் பெண் கேட்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தான்.

வயதின் தள்ளாமையினாலோ... தந்தை குருமூர்த்தியை நினைத்து மனம் புழுங்கியதாலோ... சமீபத்தில் மரகதத்திற்கு 'மைல்ட் அட்டாக்' வந்து விட்டது.




நெஞ்சு வலியால் தாய் துடி துடித்துப் போனதைக் கண்டு மிகவும் அரண்டு போனான் கைலாஷ்.

''மருந்து மாத்திரைகளை விட மன நிம்மதி தான் முக்கியம்! அவங்களை கவலைப்பட விடாதீங்க! டென்ஷன் ஆகாம பாத்துக்கங்க... அதிர்ச்சியான விஷயங்களைப் பத்தி அவங்க கிட்ட எதுவும் பேசக் கூடாது...!'' என்று குடும்ப மருத்துவர் அவனிடம் எச்சரித்து விட்டிருந்தார்.

அவனது மனக்கோட்டை இடிந்து தகர்ந்து மண்ணோடு மண்ணாகி விட்டதைப் போன்ற உணர்வில்... துடித்துப் போனான்! தனது ஒன்று விட்ட தம்பியின் மகள் நந்தினியை மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம்... பல வருடங்களாக மரகதத்தின் மனதில் ஆழமாய் வேரூன்றி இருந்தது!

அந்த எண்ணத்தைத் தவிடு பொடியாக்கும் படி... தான் ஏதாவது கூறினால், அம்மாவுக்கு மீண்டும் அட்டாக் வந்து விட்டால்? தாலி கட்டிய கணவனால் இது வரை அவமானமும் வேதனையும் தான் அவளுக்குக் கிட்டியது.

பெற்ற மகனால் அந்த அம்மாவுக்கு ஏமாற்றமோ, வருத்தமோ, வேதனையோ வரவே கூடாது. தாயின் உயிருக்கு தானே எமனாய் மாறி விடக்கூடாது. அவளது ஆரோக்கியத்திற்காக... தனது உன்னமான காதலை மனத்திற்குள்ளேயே போட்டு புதைத்து விட வேண்டியது தான்!

இவ்வாறு முடிவெடுத்து வேதனையில் அவன் அனுதினமும் வெந்து கொண்டிருக்கும் தருணத்தில்... எதிர் பாராத விதமாய் கவுரியே அவனது வீட்டில் வந்து தங்கும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

எது எப்படியோ...? கவுரி இங்கு வந்து சேர்ந்து விட்டதில்... கைலாஷுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது நிஜம்!

முகத்தில் சோக முலாம் பூசிக்கொண்டு எதையோ பறி கொடுத்த வளைப்போன்று வளைய வந்து கொண்டிருந்த மரகதத்திடம் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது.

கவுரி இங்கு வந்து சேர்ந்து பத்து நாட்களுக்கு மேலிருக்கும்! மரகதத்தின் முகத்தில் கலகலப்பும் சந்தோஷமும், புத்துணர்ச்சியும் படர்ந்திருந்தது.

மரகதமும் சரி! கைலாஷும் சரி! கவுரியை வேற்று மனுஷியாக நடத்தாமல்... தங்களது குடும்பத்தில் ஒருத்தியாக நினைத்துப் பழகியதாலோ அல்லது அவள் மீது பரிதாபப் பார்வை வீசாமல் இருந்ததாலோ என்னவோ... கவுரியும் மிகவும் சகஜமாய் நடந்து கொண்டாள்.

''அம்மா! ஒவ்வொரு வீட்டிலேயும் ஒவ்வொரு விதமா சமையல் செய்முறை இருக்கும். உங்க பக்குவத்தை எனக்கு கத்துக் குடுங்க... பெரியவங்க நீங்க... உங்களுக்கு எவ்வளவோ விஷயங்கள் தெரிஞ்சிருக்கும்! உங்க நளபாகத்தை கத்துக்கணும்னு பிரியப்படறேன்.



''இந்த டாக்டர் ஆப்பரேஷன் தியேட்டருக்கு 'சொர்க்கம்'ன்னு பேர் வைத்திருக்காரே...!''

''இங்கே இறப்பவர்கள் நேராக சொர்க்கத்திற்கு போவார்கள் என்ற நம்பிக்கை டாக்டருக்கு!''

-தேனி, எஸ்.மாரியப்பன்.



நீங்க கிட்டக்க இருந்து என்னை 'கைட்' பண்ணுங்கம்மா சரியா?'' என்று தேன் போன்ற இனிய குரலில் கவுரி கெஞ்சும் போது... மரகதத்திற்கு மறுத்துப் பேச மனமே வராது.

மரகதம் கூறியதை மனதில் வாங்கிக் கொண்டு ஆர்வமும் உற்சாகமுமாய், மணக்க மணக்க ருசியாக சமைத்து விடுவாள் கவுரி.

''காரசாரமா ரொம்ப சுவையா இருக்கு கவுரி! அப்படியே எங்கம்மாவோட கைமணம்!... அசத்திட்டீங்க! அம்மா... கவுரியை ரொம்ப நல்லா ட்ரெயின் பண்ணிட்டீங்க போல...!''

கவுரி அடிப்படையில் ரொம்ப நல்லா சமைக்கத் தெரிஞ்சவ! அதான் சொன்ன செய்முறை அளவைப் புரிஞ்சு அருமையா சமைச்சுடறா!'' பாராட்டினாள் மரகதம்.

''கவுரி கண்ணு! முத்துப்பாண்டி ஐயா வந்திருக்காரு!'' முண்டாசை அவிழ்த்தபடி மருது கூறியதும்... ஆர்வமாய் திரும்பிப் பார்த்தாள் கவுரி.

மருது... அந்த பங்களாவின் முன்பு இருந்த அழகான தோட்டத்தைப் பராமரித்துக் கொண்டார். ஜீப்பில் ஏறிக்கொண்டு ''வீட்டிற்குத் தேவையான காய்கறி, பழங்கள், சாமான்களை வாங்கி வரும் பணியை ஏற்றுக் கொண்டார்.

''மரகதம்மா சௌக்கியந்தானே? கைலாக தம்பி நல்லா இருக்கீங்களா?'' என்று கேட்டு விட்டு கவுரியை ஏறிட்டார் முத்துப்பாண்டி.

''கவுரி! அந்த ரெண்டு கோஷ்டியும் வலைவீசி உன்னைத் தேடிக்கிட்டிருக்காங்க... அப்பப்ப ரெண்டு கோஷ்டியும் அடிதடியில இறங்கிப்புடறாங்க... இங்கன... பார்வதி அம்மா வீட்டுக்குக் கூட அவங்க வந்து தேடியிருக்காங்க... கேள்விப் பட்டேன். சரி! உன்னோட ஜிம்மி... நீ இல்லாம தவிச்சுப் போச்சு! முருகி நம்ம வீட்டுல வச்சு சாப்பாடு வச்சுப் பாத்தா... சாப்பாட்டை திங்கவே இல்ல... பட்டினி கெடந்து செத்துடும் போல...!

''அய்யோ! ஜிம்மா இப்போ எப்படி இருக்கு மாமா?''

''பொறு! வழக்கம் போல யாபாரத்துக்கு சரக்கை லாரில ஏத்தி விட்டேன். வாயில்லா ஜீவனைப் பாக்க பாவமா இருந்துச்சு! அதையும் லாரியில ஏத்திக்கிட்டு வந்துட்டேன்!''

''கவுரி! அவுட் ஹவுஸ் வராண்டாவுல கட்டிப்-போட்டிருக்கேன்!'' என்று மருது கூறியதும் ஓட்டமும் நடையுமாக விரைந்தாள் கவுரி.

அவளைக் கண்டதும் ஜிம்மி தனது முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி அவள் மேல் விழுந்து புரண்டு கொஞ்சியது.

வாசலில் வந்து நின்ற மரகதம் திகைத்துப் போய் பார்த்தாள்.

## 17

''வயசுப் பொண்ணு அதுவும் ரொம்ப சிக்கல்லே இருந்து தப்பிச்சு இங்க வந்திருக்கு! முத்துப்பாண்டி என்கிட்ட அவளை ஒப்படைச்சிருக்காரு! அவ கூட கம்ப்யூட்டர் கோர்ஸ் எல்லாம் முடிச்சிருக்காளாம் மேல உன்னோட ஆபீஸ் ரூம்லே உட்கார்ந்து ஒர்க் பண்ற மாதிரி ஒரு வேலையை போட்டுக் குடேன்!''

புருவங்களை நெரித்து சிறிது நேரம் யோசித்து விட்டு கவுரியை அழைத்தான் கைலாஷ்.

''சார்! நா இப்பத்தான் டிகிரி முடிச்சேன். சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களையும் முடிச்சிருக்கேன். ஆபீஸ் விஷயமா எனக்கு எக்ஸ்பீரியன்ஸ் இல்ல தான் ஆனா 'கைட்' பண்ணினா போதும்! சீக்கிரமா இம்ப்ரூவ் பண்ணிடுவேன்!''

கைலாஷ் பேச வாயெடுப்பதற்குள் கவுரி படக்கென்று கூறி விட்டாள். அவளது வார்த்தைகளில் ஆர்வமும், தன்னம்பிக்கையும் தொனித்தன. மரகதத்தின் முகத்தில் முறுவல் பூத்தது.

கவுரி கூறியது வாஸ்தவம் தான்! 'சிறு கோடு போட்டால் பெரிய ரோட்டை போட்டு விடும் சாமர்த்தியசாலியாக இருந்தாள் கவுரி.

கைலாஷ் வெளியில் சென்று அலுவலகப் பணிகளை முடித்து விட்டு திரும்பும் போது தன்னுடனே சில முக்கியமான 'கான்பிடென்ஷியல் பைல்களை எடுத்துக் கொண்டு வந்து கவுரியிடம் கொடுத்து விடுவான்.

ஆரம்பத்தில் சில நாட்கள் மட்டும் தான் கைலாஷ் கவுரிக்கு சில விளக்கங்களை கொடுத்தான். அவ்வளவு தான்! அதன் பின் பைலை அவளாகவே புரட்டிப் பார்த்து கம்ப்யூட்டர் முன் அமர்ந்து கொண்டு நேர்த்தியாக பணிபுரிவதைப் பார்த்துவிட்டு கைலாஷ் அசந்தே போய் விட்டான்.

சின்ன கிராமத்தில் பிறந்து வளர்ந்த பெண் கவுரி! அவளுக்கு எவ்வளவு பெரிய மதி நுட்பம்! விசாலமான அறிவு!

டெண்டர் விஷயமாக இருந்தாலும் புராஜெக்ட் விஷயமாக இருந்தாலும் கவுரி திறம்பட பைலை தயார் பண்ணி கொடுத்ததால் கைலாஷுக்கு பரம திருப்தியும் நிம்மதியும் ஏற்பட்டது.

மூன்றே மாதங்களில் இவர்கள் உருவாக்கிய 'புராஜெக்ட்' வர்த்தக ரீதியாக வெற்றி பெற்று பிரபலமடைந்தது ''மிஸ், கவுரி! ஆபீஸ்லே எனக்கு வந்து வாய்க்கிற செக்ரட்டரிங்க எல்லாருமே என்னோட எக்ஸ்பெக்டேஷனுக்கு ஏத்த மாதிரி வேலை செஞ்சதில்லை. இதனால அவங்க அந்த போஸ்ட்லே நீடிக்க மாட்டாங்க. 'அயாம் அன் லக்கி' அப்படீன்னு நெனச்சுப்பேன்.

ஆனா அதுக்கெல்லாம் சேத்து வச்சு கடவுள் உங்களை என்கிட்ட அனுப்பியிருக்கார். வாட் எ டேலண்ட்! ஐ ரியலி அப்ரிஷியேட்



கவுரி!''

''கைட் பண்ணினது நீங்க! கத்துக்கிட்டு என்னோட கடமையை செய்திருக்கேன். இதுவொரு, பெரிய விஷயமே இல்ல'' தன்னடக்கத்துடன் பதிலளித்தாள் கவுரி.

''சாமர்த்தியமா அழகா பேசறீங்க. இந்த ஆகாய வண்ண காட்டன் புடவை உங்களுக்கு ரொம்பவே சூட் ஆகுது கவுரி! ரொம்ப நாளா சொல்லணும்னு நெனச்சிருந்தேன். கவுரி என் மனசுல என்ன இருக்குன்னு ஐ மீன் ஐ ஹேவ் பாலன் இன் லவ்''

அவளையும் அறியாமல் கம்ப்யூட்டர் மவுசைப் பற்றியிருந்த கவுரியின் கரத்தைப் பற்றினான் கைலாஷ்.

''இந்த காட்டன் புடவை உங்களோட செலக்ஷன் தானே? டைமாச்சு! அம்மாவுக்கு டேப்ளட்ஸ் தரணும்.'' நாசூக்காக எழுந்து நழுவப் பார்த்தாள்.

''சிட் டவுன் கவுரி! எனக்கு இன்னிக்கு தெரிஞ்சாகணும். பதில் சொல்லிட்டுப் போ!'' உரிமையுடன் அதட்டியபடி கையை மேலும் இறுகப் பற்றினான்.

''பெரிய பிஸினஸ் மேன் நீங்க! பெரிய ஜீனியஸ்! உங்களால இந்த கிராமத்துப் பொண்ணோட மனசை இன்னுமா புரிஞ்சுக்க முடியலை? ஆஞ்சநேயரோட இதயத்துல ஸ்ரீராமர் இருக்கிற மாதிரி இந்த பட்டிக்காட்டோட இதயத்தைக் கிழிச்சுப் பாத்தா அதுல இந்த கைலாஷ் மட்டும் தான் இருப்பார்!''

செக்கர் வானமாய் முகம் சிவக்க கிசு கிசுப்பான குரலில் தன் மனதை கவுரி வெளிப்படுத்தியதும் கட்டுக் கடங்கா மகிழ்ச்சியில் சட்டென்று அவளது கரத்தில் மென்மையாக முத்தமிட்டான் கைலாஷ்.

கரத்தை விடுவித்துக் கொண்டு கம்ப்யூட்டரை ஷட் ஆப் செய்து விட்டு கீழே இறங்கி ஓடினாள் கவுரி.

அவள் இங்கு வந்த சில நாட்களில் ''கவுரி சதா மூணு புடவைகளையே மாத்தி மாத்திக் கட்டறா அவளுக்கு நல்ல புடவைகள் எடுத்துக் குடுக்கணும் அவளுக்கு பவுடர் சோப்பு இத்யாதிகளை டவுன்லேர்ந்து வாங்கிட்டு வந்துடறியா கைலாஷ்?'' மரகதம் கூறியது தான் தாமதம்.

ஒரு டஜன் காட்டன் புடவைகள், ஷாம்பு, பவுடர், ஹேர்பின் ஒரு இளம் பெண்ணுக்குத் தேவையான அயிட்டங்களைப் பட்டியலிட்டு வாங்கி குவித்து விட்டான் கைலாஷ்.

இளம் மஞ்சள், வெளிர் நீலம், இளம் பச்சை, இளம் சிவப்பு என்று எல்லாமே கவுரிக்கு மிகவும் பிடித்த வண்ணங்களில் புடவைகள்!

இருவரது ரசனையும் ஒத்துப் போவதை எண்ணி அதிசயப் பட்டாள் கவுரி.

அன்று இரவு டைனிங் ஹாலில் கவுரி பரிமாறினாள். ''சப்பாத்தியும், காலி பிளவர் குருமாவும் எக்ஸலண்டா இருக்கு! எங்கம்மா இருக்காங்களே? பி.பி. ஷுகர்னு ஏகப்பட்ட வியாதிகளை குத்தகைக்கு எடுத்திருந்தும் மாத்திரை சாப்பிடாம நல்லா டிமிக்கி அடிப்பாங்க எனக்கு தன் கையால சமைச்சுப் போட்டாத்தான் அவங்களுக்கு திருப்தி. சமையல்காரனை ஓரங்கட்டிட்டு சுவையும் மணமுமா அபாரமா சமைச்சு 'டேஸ்ட் பாக்கிறேன் பேர் வழி'ன்னு எல்லாத்துலயும் கொஞ்சம் ஸ்வாஹா பண்ணிடுவாங்க. சுகர் கிர்னு கூடி கேஸ் டிரபிள், நெஞ்சுவலி அது இதுன்னு நைட்ல கலாட்டா பண்ணி ஏகாதசிக்கு முழிக்கிற மாதிரி ராத்திரி தூங்க முடியாம விடிய விடிய அவஸ்தைப் படுவாங்க. நீங்க வந்தப்புறம் தான் அவங்க சமத்தா இருக்காங்க குட்! இப்படியே மெயின்டெயின் பண்ணுங்க!''

முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு கைலாஷ் சொன்ன விதத்தைப் பார்த்து மரகதம் கலகலவென்று சிரிக்க கவுரியும் சேர்ந்து தன்னை மீறி சிரித்து விட்டாள். நீண்ட காலம் கழித்து கைலாஷும் மனம் விட்டு சிரித்து விட்டான். சிரிப்பொலி அடங்க சிறிது நேரம் பிடித்தது.

கவுரி மனம் விட்டு சிரிக்கும் அழகை ஓரக்கண்ணால் பார்த்து ரசித்தான் கைலாஷ். அவளது கண்களில் கண்ணீர் 'மளுக் என்று தளும்பியது.

'உள்ளும் புறமும் ஒரே எண்ணம் கொண்டவர்களால் மட்டுமே இவ்வாறு கண்களில் கண்ணீர் துளிர்க்கும்படி நகைக்க முடியும்' என்று எப்போதோ எதிலோ படித்த ஞாபகம் வந்தது.

அம்மாவும் பாவம் தான்! அப்பா குருமூர்த்தியின் செயலால் உள்ளுக்குள் உணர்வுகள் செத்து நடைப் பிணமாக நடமாடியவள் இன்று கவுரியின் வரவால் ஆரோக்கியமாக நடமாடுகிறாள். மனம் குளிர சிரிக்கிறாள்! கவுரியை மருமகளாக ஏற்றுக் கொள்ள சம்மதிப்பாளா? இதை எப்படி அவளிடம் சொல்வது?'' இருதலை கொள்ளி எறும்பு போல் தவித்தான்.

## 18

மரகதத்தின் மனம் நிலை கொள்ளாமல் குழம்பித் தவித்தது. தலைக்குள் வண்டு குடைந்தது. கலகலவென்று நகைத்த கவுரியை இமை கொட்டாமல் கைலாஷ் பார்த்ததை மரகதம் கவனித்து விட்டாள்.

தந்தை குருமூர்த்தியின் நடத்தையை அறிந்ததாலோ என்னவோ கைலாஷ் பெண்கள் இருந்த திசைப்பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டான்.

கல்லூரியிலும் சரி! அலுவலகத்திலும் சரி வெளியிடங்களிலும்



சரி! எந்த பெண்ணிடமும் இதுவரை அநாவசியப் பேச்சு பேசிய
தில்லை. பணி நிமித்தமாக சில விளக்கங்களைக் கூறி கட்டளையிட்டு
கறாராக நடந்து கொள்வான்.

எந்த இளம் பெண்ணின் முன்னாடியும் கலகலத்துப் பேசி நகைத்
தது இல்லை நகைச்சுவை ததும்ப சுவாரசியமாகப் பேசியதுமில்லை.
முறைப்பெண் நந்தினியிடம் கூட அவன் கலகலத்துப் பேசி நகைத்த
தில்லை.

இன்னும் சொல்லப்போனால் நந்தினியைக் கண்டாலே தாடை இறுக முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க 'கடுவன் பூனை' போல் அப்பால் நகர்ந்து விடுவான்.

சமீப காலமாக அதுவும் கவுரி இங்கு வந்தபின்பு அவனிடம் நிறைய மாற்றங்கள் தென்பட்டன.

அதிகாலையில் தோட்டத்தில் மலர்ந்த பூக்களைப் பறித்து நேர்த்தியாகத் தொடுத்து ஸ்வாமி படங்களுக்குச் சாற்றிவிட்டு அப்படியே பூஜையறையில் அமர்ந்து கண்களை மூடி தியானிப்பாள் மரகதம்.

கவுரி இங்கு வந்ததும் தோட்டத்தில் பூக்களைப் பறித்து தொடுக்கும் பணியை அவள் ஏற்றுக் கொண்டு விட்டாள்.

கைலாஷ் எப்போதும் தாமதமாகத்தான் எழுந்து கொள்வான். சமீப காலமாக அவனும் வெகு சீக்கிரமே எழுந்து கொண்டு வாக்கிங் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டு விட்டான்.

போகிற போக்கில் ''குட்மார்னிங் மிஸ். கவுரி!'' என்று புன்னைகைத்துவிட்டுத் தான் போவான்.

வீட்டில் அவன் இருக்கும் தருணங்களில் கலகலப்பாக அவன் பேசும்போதெல்லாம் 'நம் வீட்டிற்கு அடைக்கலமாய் வந்த கவுரி



முடிந்த மட்டும் பழைய சம்பவங்களை மறந்து சந்தோஷமாக சகஜமாக இருக்க வேண்டும்' என்ற நல்ல எண்ணத்தில் கைலாஷ் நடந்து கொள்வதாகத் தான் மரகதம் நினைத்துக் கொண்டிருந்தாள்.

இது காலம் வரை கைலாஷின் முகத்தில் இருந்த இறுக்கம் தளர்ந்து சிரிப்பும் குறும்புத்தனமும் அதில் தாண்டவமாடின. அதுவும் இன்று சாப்பிடும் போது அனைவரும் நகைத்தபோது கைலாஷின் விழிகளில் காதல் ததும்ப ஆசையுடன் கவுரியைப் பார்த்ததும் தான். 'இது சாதாரணமான நட்பு ரீதியான பழக்கம் இல்லை. அதையும் தாண்டி 'காதல்' கனிந்திருக்குமோ? என்ற சந்தேகம் முளை விட்டது.

'கவுரியை கைலாஷ் காதலிப்பதாக இருந்தால் அதை வெளிப்படையாக என்னிடம் சொல்ல ஏன் தயங்க வேண்டும்? அம்மா-மகன் என்ற உறவைத் தாண்டி அவனிடம் நான் ஒரு இனிய சினேகிதியாகத் தானே பழகுகிறேன்? பிறகென்ன தயக்கம்? கௌரியை மறுப்பதற்கு யாருக்காவது மனம் வருமா?

எனக்கு 'அட்டாக்' வந்ததிலிருந்து கைலாஷ் பாவம் மிகவும் அரண்டு போயிருக்கிறான். தனிமையில் அருகே வந்தமர்ந்து கொண்டு பரிதாபமாக ஏறிட்டு விட்டு எதையோ சொல்ல வருகிறான். சொல்ல மனமில்லாமல் மென்று முழுங்கி விட்டு போய்விடுகிறான்' அது என்னவாக இருக்கும்.

அப்படியே அவர்களுக்குள் காதல் மலர்ந்திருந்தால் என்னால் தடை சொல்ல முடியுமா? அவன் ஆசைப்பட்ட வாழ்வை ஏற்படுத்தித்தர வேண்டியது என் கடமையல்லவா?

இதெல்லாம் சரி பசுபதிக்கு நான் என்ன பதில் சொல்வது? 'குடுத்த வாக்கை தவறிட்டியே அக்கா?' என்று கேட்டால் என் முகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வது?

மரகதத்தின் அடிவயிற்றில் பய வண்டுகள் பறந்தன.

வாரந்தோறும் ஞாயிறு அன்று மரகதம், கைலாஷ், கவுரி, மருதப்பன் ஆகியோர் ஜீப்பில் ஏறி தேக்கடிக்கு கிளம்பி விடுவர். சமுத்திரம் போன்ற பெரிய ஏரியில் அமைந்த சிறு சிறு குன்றுகளை, தீவு போன்று அமைந்த பசிய காடுகளை பிரமாண்டமான படகு சுற்றி சுற்றி வரும்போது கவுரி தன்னையே மறந்து விடுவாள்.

பஞ்சு பொதியாக மேகங்கள் இறங்கி சிகரங்களை மூடும் அழகு கிறங்க வைப்பதாக இருக்கும். மரகதமும், மருதப்பனும் ஆளுக்கொரு பக்கம் நின்றபடி இயற்கை அழகில் லயித்துப்போக இளையவர்களின் விழிகள் அடிக்கடி சந்தித்து மௌன பாஷையில் அன்பை வெளிப்படுத்தும்!

ஆனால் இந்த முறையோ மரகதம் படகிலிருந்த சேரில் நன்கு சாய்ந்து அமர்ந்து இளையவர்களை கண்காணிக்கலானாள். கைலாஷ் பைனாகுலரின் வழியாக, தான் கண்டு ரசித்த காட்சியை கவுரியும்



கண்டு ரசிக்க வேண்டும் என்று ஆலாய் பறந்து கொண்டிருந்தான்.

''கவுரி! அதோ எதிர்த்தாப்பல இருக்கிற குன்றுல ஒத்தையா ஒரு யானை மேயுது பாரேன் இந்தப்பக்கம்!'' பைனாகுலரை சட்டென்று அவளது கண்களுக்கு அருகே வைத்து அவனும் அவளது புஜத்தருகே குனிந்து தூரத்திலிருந்த குன்றை வெறித்தான்.

''சூப்பர்ப்! மரக்கிளையை லாவகமா ஒடிக்குதே கம்பீரமா அழகா இருக்கு யானை!'' கவுரியும் குதூகலித்தாள்.

''ட்ரிங்... ட்ரிங்...'' கைலாஷின் 'செல்' அழைப்பு விடுத்ததும் சட்டென்று செல்லை எடுத்துப் பேசினான்.

''கைலாஷ் ஸ்பீக்கிங்! எஸ் ஓ நீங்களா மாமா?'' என்று கேட்டு விட்டு கவுரியிடம் திரும்பினான்.

''இந்தா கவுரி! முத்துப்பாண்டி மாமா லைன்ல இருக்காரு!''

''மாமா சவுக்கியமா? முருகி எப்டி இருக்கா?''

''எல்லாரும் சொகமா நம்மூரு தலைவர் கிட்டே உங்க தோட்டத்து கூலியாளுங்க, வயக்காட்டுல வேல பாக்குற பசங்க எல்லாருமா முறையிட்டிருக்காங்க போல தலைவரு ஊர்க்கூட்டம் கூட்டி உங்க அத்தைங்க குடும்பத்தை வரவழைச்சு, ''எங்க ஊரு பொண்ணு காணாம போனதுக்கு நீங்க தேன் பதில் சொல்லணும். சொத்துக்கு ஆசப்பட்டு அந்தப்பொண்ணை நீங்க ஏதாச்சும் பண்ணிப்புட்டீங்கன்னு நாங்க போலீசுக்கு புகார் தரலாம்னு இருக்கோம்'னு ஒரு போடு போட்டாரு.

ரெண்டு கோஷ்டியும் வெல வெலத்துப் போச்சு ஆத்தா! 'எப்டியும் கவுரியை கண்டுபிடிச்சு கூட்டியாந்துடறோம்'னு சொல்லிப்புட்டு பேயறைஞ்ச முகத்தோட நடந்தாங்க. அநேகமா ரெண்டு கோஷ்டியும் மெல்ல கழண்டு அவுகவுக ஊரப்பாக்கப்போயிடும்னு நெனக்கிறேன் தாயி!''

''நல்லது மாமா! யாருக்கும் எந்த பாதகமும் இல்லாம விஷயம் சுமுகமா முடிஞ்சா சரி தான். முருகியை நா விசாரிச்சதா சொல்லுங்க, மாமா செல்லை அணைத்து விட்டு நீண்ட பெருமூச்செறிந்தபடி கைலாஷிடம் முத்துப்பாண்டி கூறிய விவரத்தைத் தெரிவித்தாள் கவுரி.

சகஜமாக, உரிமையாக, நெருக்கமாக நின்றபடி பேசிக் கொண்டிருந்தவர்களை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மரகதம்.

'ஊஹூம் சந்தேகத்திற்கே இடமில்லை. இருவரும் காதலர்கள் தான்! என்னவொரு ஜோடிப்பொருத்தம்! கைலாஷுக்கு ஏற்ற துணைவி கவுரி தான்! என்ற எண்ணம் எழும்பி அழுத்தமாய் நெஞ்சினில் நங்கூரம் பாய்ச்சியது.

மணியக்காரர் தந்த தகவலைக் கேட்ட பின்பு கவுரியின் இதயத்தில் நிம்மதி நிலவியது நிஜம்! அந்த நிம்மதி கூட மறுநாள் காலையில் நந்தினியின் குரலை முதன் முறையாக போனில் கேட்

டபின்பு, சட்டென்று மாயமாய் மறைந்து போனது. இதயம் சுக்கு நூறாய் உடைந்தாற் போலிருந்தது. சொல்லவொண்ணா சோகம் அவளைச் சூழ்ந்து கவ்வி ஆட்டிப்படைத்தது.

## 19

ஹாலில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் ''குக்...குக்...குக்...'' என்று இரட்டைக் குருவிகள் ஒன்பது முறை வெளியில் தலைகாட்டி, கதவை மூடிக் கொண்டு அடங்கின.

வீட்டைத் துடைத்து முடித்த வேலைக்காரிக்கு பாத்திரங்களை ஒழித்து போட்டு விட்டு, வாசலில் வந்து நின்று தோட்டத்தில் பார்வையைப் பதித்தாள் கவுரி.

சற்று முன்பு ஜிம்மியைக் குளிப்பாட்டி விட்டிருந்தாள். தோட்டத்தில் இதமான வெயிலில் துள்ளிக் குதித்து சுற்றி வந்து கொண்டிருந்தது.

எஸ்டேட்டில் வேலை பார்க்கும் பணியாள் ஒருவனின் இல்லத் திருமணத்தில் கலந்து கொள்ள சென்று விட்டிருந்தாள் மரகதம். இவர் இல்லாத சமயங்களில் அவுட் ஹவுஸிலேயே அடைந்து கிடப்பாள் கவுரி.

வேலைக்காரி பாத்திரம் தேய்த்து முடித்ததும், அவளை அனுப்பிவிட்டு, அவுட் ஹவுஸுக்குச் செல்ல முற்பட்டாள் கவுரி.

''ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்'' டெலிபோன் மணி அவசரமாக ஒலித்து அவளைத் தடுத்தது.

தயக்கத்துடன் ரிசீவரை எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''ஹலோ!... மரகதம் ஆன்ட்டி இல்லையா?... ஹூ இஸ் தட்?'' மறுமுனையில் ஒரு இளம் பெண்ணின் குரல் அதிகாரத்துடன் அதட்டியது.

''நா... நான் கவுரி! கொஞ்ச நாளா அம்மாவுக்கு உதவியா இங்க இருக்கேன். நீங்க...?''

''ஓ! நீ தான் அவுட் ஹவுஸிலே தங்கியிருக்கிற அப்சரஸா? உன்னைத் தான் கைலாஷ் அத்தான் பி.ஏ. மாதிரி வீட்ல வச்சுட்டிருக்காரா?... நான் யாருன்னு கேள்வி கேக்கற அளவுக்கு வந்துட்டியா? குட்! நான் நந்தினி! கைலாஷோட பியான்ஸி! மரகதத்துக்கு தம்பி பொண்ணு... அந்த வீட்டுக்கு வரப்போற மருமக... இதைப் பத்தி யாரும் உன்கிட்ட சொல்லலையா? கூப்பிடு மரகதம் ஆன்ட்டியை.. நா பேசிக்கிறேன்! நா கேள்விப்பட்டது சரி தான்!

''அ... அம்மா ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்காங்க. அவங்க வந்ததும் நீங்க போன் பண்ணினதாக சொல்லிடறேன்!'' கை நடுங்க ரிசீவரை வைத்தாள் கவுரி.



''உன்னைத்தான் கைலாஷ் அத்தான் பி.ஏ. மாதிரி வீட்ல வச்சுட்டிருக்காரா? என்று நந்தினி கேட்டது இன்னமும் எதிரொலிப்பது போலிருந்தது. அதிலும் ''வச்சுட்டிருக்காரா?'' என்ற வார்த்தையை அழுத்தம் திருத்தமாக இளக்காரம் தொனிக்க உச்சரித்தாளே!

நம்ம தலைவர் சந்நியாசி ஆகப்போறாராம்!''
''இதுவரை அடிச்ச துட்டு காணாதுன்னு நினைக்கிறாரோ!''
-கு.அருணாசலம், தென்காசி.



அவளது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அந்த வார்த்தை மீண்டும் மீண்டும் எதிரொலித்தது அவளது மெல்லிய இதயத்தைக் கிழித்து கூறு போட்டது.

தள்ளாடியபடி அவுட் ஹவுஸுக்குச் சென்று படுக்கையில் விழுந்தாள் கவுரி.

''கைலாஷ் தனக்கொரு முறைப்பெண் இருப்பதை ஏன் என்னிடம் மறைத்தார்? மரகதம் கூட மனம் விட்டு எவ்வளவோ விஷயங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டாரே? இவ்வளவு பெரிய விஷயத்தைப் பற்றி யாரும் ஏன் மூச்சு கூட விடவில்லை?''

உலகமே தட்டாமாலையாக சுழல்வது போலிருந்தது. குப்புறப் படுத்து முதுகு குலுங்க தலையணை நனையும் வரை கண்ணீர் உகுத்தாள்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில்... மரகதத்தின் கார் போர்டிகோவில் வந்து நின்ற சப்தம் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, முகத்தை அலம்பி துடைத்து கலைந்த கூந்தலைக் கோதி சீராக்கி விட்டு அவுட் ஹவுஸை விட்டு வெளிப்பட்டாள்.

சகஜமான முகபாவனையுடன்... நந்தினி... போன் செய்த விபரத்தை மரகதத்திடம் தெரிவித்து விட்டு கிச்சனுக்குள் புகுந்து கொண்டாள்.

பாகற்காய் பிட்லை, எலுமிச்சை ரசம், வாழைத்தண்டு பொரியல் என்று சமைத்து விட்டு டைனிங் டேபிளில் பரத்தினாள். வழக்கம் போல் மரகதத்திற்கு பரிமாறி விட்டு கூடவே அமர்ந்து பெயருக்கு இரண்டு பிடி சாதத்தைக் கொறித்து விட்டு... மரகதத்திற்குத் தர வேண்

டிய மாத்திரைகளைக் கொடுத்து விழுங்க வைத்து விட்டு... மீண்டும் அவுட் ஹவுஸை தஞ்சம் புகுந்தாள்.

மாலையில்... கைலாஷ் வந்ததும்...அவனுக்குப் பிடித்த மசாலா டீ தயாரித்துக் கொண்டு மாடியிலிருந்த ஆபீஸ் ரூமுக்குச் சென்றாள்.

சுடச்சுட டீயை பருகிக் கொண்டே ஏற இறங்க கவுரியை அளவெடுத்தான். மவுனமாக பைலை எடுத்துப் புரட்டியபடி கம்ப்யூட்டர் முன் அமர்ந்து கொண்டாள் கவுரி.

பைலில் இருந்த எழுத்துக்கள் புலப்படாதபடி கண்களில் நீர்த்திரையிட்டது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''கவுரி! வாட் ஹாப்பண்ட்? ஆர் யூ நாட் பீலிங் வெல்?'' சட்டென்று அருகில் வந்து அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

அவ்வளவு தான்! இமைக்கரைகளை உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்து வழிந்தது கண்ணீர். நா தழுதழுக்க... அன்று காலை நந்தினி போன் செய்து பேசிய விதத்தைப் பற்றிக் கூறினாள்.

''நந்தினியைப் பத்தி எதுவுமே என் கிட்ட சொல்லாம மறைச்சுட்டீங்களே கைலாஷ்? என்னால ஊருக்கோ, மத்தவங்களுக்கோ எந்த பாதகமும் வரக்கூடாதுன்னு தான்... ஊரை விட்டே ஓடி வந்தேன். அடைக்கலமா இந்த வீட்டுல தஞ்சம் அடையறதுக்கு முன்பே... உங்களை நான் நேசிக்க ஆரம்பிச்சுட்டேன்! நந்தினிங்கிற முறைப் பொண்ணு உங்களுக்காக ரொம்ப வருஷமா காத்துட்டிருக்காள்னு தெரிஞ்சிருந்தா... மனசில துளிர்த்த காதலை அப்படியே புதைச்சுட்டு இங்கே தங்காம வேற எங்கேயாவது போயிருப்பேன்.

அந்த பொண்ணோட ஆசையில மண்ணள்ளிப் போட்ட பாவம் எனக்கு வேணாம்! நான் மருது மாமாவோட எங்க ஊருக்கே போயிடறேன். நா வந்து...''

சிறு கையசைவுடன் குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தான் கைலாஷ்.

''என்னையும் கொஞ்சம் பேச விடேன் கவுரி! நந்தினி விஷயத்தைப் பத்தி உன் கிட்ட நா எதுவும் சொல்லலை... அதுக்கு எந்த விதமான உள் நோக்கமும் இல்லைன்னு நீ புரிஞ்சுக்கணும்! சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு... நந்தினியை மருமகளாகக் கொண்டு வரணும்னு ரொம்ப நாளா அம்மா சொல்லிட்டிருந்தாங்க... பந்தயக் குதிரை மாதிரி நடை! அகம்பாவமான பேச்சு... எனக்கு அவளைக் கண்டாலே பத்திக்கிட்டு வரும்!

அம்மா கிழிச்ச கோட்டை இது வரைக்கும் நா தாண்டினது இல்ல... அதனால பட்டுன்னு என்னோட விருப்பமின்மையை தெரிவிக்கலை... கல்யாணப் பேச்செடுக்கும் போதெல்லாம் தட்டிக் கழிச்சு நழுவினேன்... உன்னை முதன் முதலா சந்திச்சப்போ... உன்னோட உயர்ந்த குணத்தையும் நல்ல மனசையும் புரிஞ்சு என் மனசைப் பறி கொடுத்தேன்.

உன்னோட படிப்பு முடிஞ்சதும்... உன்னோட நல்ல குணத்தை



அம்மா கிட்ட எடுத்துச் சொல்லி... முத்துப்பாண்டி மாமா மூலமா முறைப்படி உங்க வீட்டுக்கு வந்து பெண் கேட்கலாம்னு தீர்மானிச்சிருந்தேன்... ப்ச்! துரதிர்ஷ்டவசமா அம்மாவுக்கு 'அட்டாக்' வந்துடுச்சு! கடவுள் புண்ணியத்துல பிழைச்சு வந்தாங்க... டாக்டர்ஸ் 'அதிர்ச்சி தர்ற எந்த விஷயத்தையும் அவங்க கிட்ட பேசாதீங்க'ன்னு ஸ்ட்ரிக்டா சொல்லிட்டாங்க...

இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி நான் உள்ளூர தவிக்கவிட்டிருந்த சமயத்துல... நீ பேரண்ட்ஸை இழந்துட்டு சொந்த பந்தங்களையும் உதறிட்டு இங்க வந்தே! நீ இங்க வர்றதுக்கு முன்னாடி... இரண்டு மூணு தடவை நாம்ப எதேச்சையா சந்திச்சிருக்கோம். அந்த சின்ன சின்ன சந்தர்ப்பங்கள்லேயே உன்னோட கருணை உள்ளம், தயாள குணம், உதவும் மனப்பான்மை, மனித நேயம்னு... பல நல்ல 'குணாதிசயங்களைப் பாத்து பிரமிச்சிருக்கேன்! என் மனசுல சிம்மாசனம் போட்டு உட்கார்ந்துட்டே!

கடந்த சில மாதங்களா... சதா அம்மா கூடவே நீ இருந்ததால... உன்னோட நல்ல குணத்தைப் பத்தி அவங்க ரொம்ப தெளிவா புரிஞ்சிருப்பாங்க... உன் கால் தூசுக்கு கூட நந்தினி ஈடாக மாட்டாள்னு... அம்மாவுக்கு ஒரு அபிப்பிராயம் வந்திருக்கும். அதனால இன்னிக்கே நம்ப விஷயத்தைப் பத்தி நா பேசிடறேன் கவுரி!''

''அய்யோ! இந்த விஷயத்தை அடியோடு மறந்துடுங்க கைலாஷ்! அம்மா... பாவம்!'' கணவரால கஷ்டப்படலை! அவரால ரணப்பட்ட மனசுக்கு... கைலாஷ் தான் பால் வார்க்கிறான்! 'நான் கிழிச்ச கோட்டைத் தாண்டாத பத்தரை மாத்து தங்கம்'னு அடிக்கடி உங்களைப் பத்தி பெருமையா சொல்வாங்க! எனக்காக... அந்த குணத்தை நீங்க மாத்திக்க வேணாம்.

'நந்தினி தான் வருங்கால மருமகள்' அப்படிங்கிற நம்பிக்கையில... நீங்க மண்ணள்ளிப் போட்டா... அவங்க தாங்குவாங்களா? அதிர்ச்சியில ஏதாவது ஒண்ணு ஆயிட்டா?... மைகாட்! நம்ப காதல் நிறைவேறணும்கிறதுக்காக... ரிஸ்க் எடுக்க துணிஞ்சுட்டீங்களா? அவங்க உயிருக்கு உலை வச்சுத்தான்... நாம்ப வாழ்வைத் துவங்கணுமா? தேவையே இல்ல...

ஒரு ஏழைப் பொண்ணை வாழ வச்சோம்கிற திருப்தியில தான் என்னைப் பெத்தவங்க கண்ணை மூடினாங்க! அவங்க பொண்ணு நான்... ஊர்லே இருக்கற சொத்துக்களோட வருமானத்தை வச்சு ஒரு அறக்கட்டளையை என்னோட பேரண்ட்ஸ் பேர்ல தொடங்கலாம்னு இருக்கேன். ஏழைப் பெண்களோட படிப்பு, திருமணம், செலவு, வைத்திய செலவு, ஊனமுற்ற பெண்களுக்கு உதவித்தொகை... இப்படி நல்ல விஷயங்களை அறக்கட்டளை மூலமா செய்யலாம்னு இருக்கேன். 'அன்னை இல்லம்'கிற ஒரு ஹாஸ்டலையும் நா தொடங்கப் போறேன்.

இளம் வயசுப் பெண்கள் பெத்தவங்களையும் சொந்தங்களையும் இழந்துட்டு நிக்கிற பெண்கள், கணவரால கைவிடப்பட்ட பெண்கள்... இப்படி அகதியா அநாதரவா நிக்கிற பெண்களுக்கு இந்த 'அன்னை இல்லம்' அடைக்கலம் கொடுக்கும் கைலாஷ்! இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நீங்க தான் செய்து தரணும். அடுத்த வாரமே நா ஊருக்குப் போயிடலாம்னு இருக்கேன். சீக்கிரமா எனக்காக இதை முடிச்சுக் குடுங்க!''

''வெல்டன்! காதலை தியாகம் பண்ணிட்டு... வாழ்க்கையை சோஷியல் சர்வீஸுக்கே அர்ப்பணிக்கப் போறியா? குட்! என்னைப் பத்தி கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்தியா கவுரி? இந்த... குணம் தான் காந்தமா என்னை ஈர்த்துச்சு! இந்த அன்பு தேவதைக்கு அடிமையா என்னை ஆக்கிடுச்சு!'' கண்ணீர் மல்க கவுரியின் விழிகளை ஊடுருவிப் பார்த்தான் கைலாஷ்.

''கண்ணியம் நேர்மை, உத்தமம் இவற்றோட மொத்த உருவம் நீங்க தான்! இந்த உன்னதமான மனிதருக்கு மனைவியாகக்கூடிய பாக்கியத்தை... அடுத்த ஜென்மத்திலாவது எனக்கு குடுன்னு அம்மனை ஒவ்வொரு நிமிஷமும் நா வேண்டிட்டு இருக்கேன்... அப்படி பாக்காதீங்க கைலாஷ்! உங்களைப் பிரியணும்னு முடிவெடுக்கும் போதே நா பாதி செத்துட்டேன். ஆனா... வேற வழி?''

சில்லிட்டுப் போன நடுங்கும் கரங்களால் கைலாஷின் கரங்களைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

குமுறிக் கொண்டு வந்த அழுகையை உதட்டைக் கடித்து கட்டுப்படுத்தி விட்டு ஏறிட்டாள்!

''இதுக்கு மேல நா இங்க இருந்தா... ரொ... ரொம்ப உடைஞ்சு போயிடுவேன்!'' மெல்ல முணு முணுத்து விட்டு ஓட்டமும் நடையுமாக அந்த அறையை விட்டு வெளியேறினாள் கவுரி.

அவுட் ஹவுஸில் அன்று இரவு வெகுநேரம் வரை மவுனமாக கண்ணீர் உகுத்தாள். நள்ளிரவில் திடீரென்று ஜிம்மி தீனமாய் அழ ஆரம்பித்தது. அந்த ஊளைச் சத்தம் இனம் புரியாத திகிலை வரவழைத்தது!

20

''அய்யோ! கைலாஷ்... உனக்கா இந்த கதி?'' ரிசீவரை விட்டு விட்டு சோபாவில் பொத்தென்று சரிந்து அமர்ந்தாள் மரகதம். அவள் அலறிய அலறல் பங்களா முழுவதும் எதிரொலித்தது.

பூஜையறை அருகே அமர்ந்து தோட்டத்தில் பறித்த பூக்களை சரமாகத் தொடுத்துக் கொண்டிருந்த கவுரிக்கு தூக்கி வாரிப் போட்டது. இதயம் அதிர்ச்சியில் தடதடக்க எழுந்து விரைந்தாள்.



''அம்மா! பதறாதீங்க! என்னாச்சும்மா?'' படபடத்தபடி மரகதத்தின் தோளைத் தொட்டாள்.

''க... கம்பத்தை தாண்டினதும் கைலாஷோட கார் விபத்துக்குள்ளாயிடுச்சாம்! கம்பத்துல இருக்கற ஆஸ்பத்திரியிலிருந்து போன் பண்ணினாங்க... இன்னிக்கு விடியக் காத்தாலயே அவசரமா கிளம்பினான்... முகமெல்லாம் ரொம்ப வாட்டமா இருந்துச்சு!... அய்யோ கடவுளே! என் பிள்ளையை என்கிட்ட இருந்து பறிச்சுடாதே! கேவினாள் மரகதம். தேம்பியவளுக்கு கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

கண்கள் சொருக சோபாவில் சரிந்து படுத்ததும்... சட்டென்று மரகதத்தின் அறைக்குச் சென்று ஷெல்பில் இருந்த பி.பி. மாத்திரையை எடுத்துக் கொண்டு வந்து... மரகதத்தின் முகத்தை ஈரத்துணியால் துடைத்தாள் கவுரி.

சில நிமிடங்களில் அலங்க மலங்க கண் விழித்தவளுக்கு பி.பி. மாத்திரையைக் கொடுத்து விழுங்க வைத்தாள்.

''அவருக்கு ஒண்ணும் ஆகாது! தைரியமா இருங்க! நம்பிக்கையை தளர விடாதீங்க! நீங்க தினமும் கும்பிடற கடவுள்... கைவிட மாட்டார்.

டென்ஷன் பட்டா... உங்க உடம்புக்கு ஆகாதும்மா...!'' அவரது கூந்தலைக் கோதி விட்டாள் கவுரி.

''இ... இப்ப பரவாயில்ல... டிரைவரை வண்டி எடுக்கச் சொல்லு! மருதுவைக் கூப்பிடு!'' கார் பறக்காத குறையாக கம்பத்தை நோக்கி விரைந்தது.

''தாயே! வீரபாண்டி அம்மா! கவுமாரி....! என் உயிரை எடுத்துக்கோ! அவரை பத்திரமா திருப்பிக்குடு...! ஜிம்மி வேற, ஊளையிட்டுச்சே அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா... நா உயிரோட இருக்க மாட்டேன்மா!'' உள்ளுக்குள் அம்மனை வேண்டி கதறினாள் கவுரி.



''நம்ம சேகர் பரமக் குடிகாரன்னு உள்ளதைச் சொல்லி பொண்ணு கேட்டதுல ஒருத்தருமதரலியாம்!''

''ஏன்''

''அவன் பரம-குடிகாரன்னு நெனைச்சுட்டாங்களாம்!''

-ஆர்.ஜி.கலியாணி, நெல்லை.

கம்பத்தில்... 'தீன தயாளன் மருத்துவமனை'யில்.... அவசர சிகிச்சைப் பிரிவின் வாசலின் அருகே அவர்கள் வெகு நேரமாய் காத்திருந்தனர். வெள்ளைச் சீருடையில் ஷூக்கள் சப்திக்க நர்ஸ் பட்டாளம் சீரியஸான முகபாவனையுடன் குறுக்கும் நெடுக்குமாக விரைந்து கொண்டிருந்தது.

ஆப்ரேஷன் தியேட்டரை விட்டு ஒரு வழியாக தலைமை மருத்துவர் வெளிப்பட்டார்.

''ஆக்ஸிடெண்ட் ஆனதிலே கைலாஷோட இடது கால்லே பலத்த எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கு! ரெண்டு மூணு மாசம் காலை அசைக்காம அவர் ரெஸ்ட்லே இருந்தாகணும்! முகத்துல கன்னத்து சதையை கண்ணாடி கிழிச்சிருக்கு... பதினொரு ஸ்டிச்சிங் போட்டிருக்கோம்! பை காட்ஸ் கிரேஸ்... அவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லாம பிழைச்சு வந்ததே பெரிய விஷயமில்லையா? ஐ.ஸி.யு.வுக்கு அவரை மாத்தினதும்... நீங்க பாக்கலாம்!'' என்று கூறிவிட்டு நடக்க முற்பட்டவரின் முன்பாக வந்து நின்றாள் கவுரி.

''தேங்க் யூ டாக்டர்! அ.... அவரால பழைய படி நல்லா நடக்க முடியுமா? டாக்டர்!'' தழுதழுத்தாள் கவுரி.

''வீ ட்ரை அவர் லெவல் பெஸ்ட்! அதுக்கு மேல பகவான் செயல்! கட்டை பிரிச்சதும்... பிஸியோ தெரபி குடுத்துப் பாக்கலாம். நம்பிக்கையோட இருங்கம்மா!'' இலேசாக முறுவலித்து விட்டு நகர்ந்தார்.

இடது காலில்... பலத்த கட்டு போடப்பட்டிருந்தது! வலது கன்னத்தில் நீள வாட்டில் பெரிய பாண்டேஜ் போடப்பட்டிருந்தது. கழுத்திலும் முழங்கையிலும், மார்பிலும் ஆங்காங்கே பிளாஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. மயக்க நிலையில் விழிகளை மூடிப் படுத்திருந்தவனைக் காணும் போதே... குற்றவுணர்வில் அடி வயிறு பிசைந்தது.

''நேற்று நான் பேசியது அவருக்கு பெரிய மன வருத்தத்தை தந்து விட்டது. அதே நினைப்பில் காரை ஓட்டி விபத்துக்கு ஆளாகி விட்டார்!'' குற்றம் செய்து விட்ட தவிப்பில்... உள்ளூர புழுவாய் துடித்துப் போனாள் கவுரி.

அன்று மாலை விஷயம் கேள்விப்பட்டு நந்தினியும் பசுபதியும் ஓடி வந்தனர். ''ஆன்ட்டி! அத்தானுக்கு இப்போ பரவாயில்லையா?'' என்று மரகத்திடம் கேட்டு விட்டு... கவுரியை எரித்து விடுவது போல் ஏற இறங்க முறைத்தாள் நந்தினி.

நாசூக்காக அறையை விட்டு சட்டென்று வெளியேறினாள் கவுரி. ஆஸ்பத்திரி வளாகத்தில் ஒரு மர நிழலில் போடப்பட்டிருந்த சிமெண்டு பெஞ்சில் வந்தமர்ந்தாள். காற்றில் கிளைகள் சலசலத்து வேப்பம் பூக்களை அவளது தலையிலும் தோளிலும் அர்ச்சித்தன.

''என்னம்மா அந்தரங்க காரியதரிசி! இங்க வந்துட்டே? ஆமா... நான் மாசத்துல ரெண்டு வாட்டி அக்காவை பாக்க வருவேனே? நீ



எப்டி என் கண்ணுலயே படலே? வாசல்லே வேத்து மனுசங்களோட கார் வர்ற சத்தம் கேட்டாலே... அவுட் ஹவுசுக்குள்ளே பதுங்கிக்குவே போலிருக்கு!'' நக்கலாகப் பேசிவிட்டு சிரித்தான் பசுபதி.

''நான் மதுரையில எம்.எஸ்.சி. செகண்ட் இயர் படிக்கிறேன். செமஸ்டர் லீவு விட்டா போதும்! தினமும் அத்தையைப் பாக்காம இருக்கவே மாட்டேன். இந்த வாட்டி தான்... உன்னைப் பத்தின கண்றாவி கதையை கேள்விப்பட்டு அங்க இப்டி அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கு! இவ கிட்ட என்ன பேச்சு? வாங்கப்பா!''

கல்லாய் சமைந்து நின்றாள் கவுரி. அவர்கள் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மருது மெதுவாக வந்து அவள் முன் நின்றார்.

''அவங்க என்ன சொல்லிட்டுப் போறாங்கன்னு தெரியுமா மாமா? வாஸ்தவம் தான்! இந்த பாவியைப் பெத்த பாவத்துக்குத் தான்... என்னைப் பெத்தவங்க போய் சேந்துட்டாங்க... இங்க நான் அடி எடுத்து வச்ச நேரம்... அடைக்கலம் குடுத்த மனுஷருக்கு பெரிய விபத்து நேர்ந்திருக்கு! நான் ராசியில்லாதவ மாமா!'' முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

''ஆத்தா! சும்மாயிரு! யாரோ பொறாமை பிடிச்சவங்க என்னவோ உளறிட்டுப் போயிட்டாங்க... அத நெனச்சு வெசனப்படலாமா கண்ணு? நீ கைராசிக்காரப் புள்ள... மண்ணைத் தொட்டாலும் அது பொன்னாகும்'னு ஐயா அடிக்கடி சொல்வாக... பைத்தியக்காரப் புள்ளயா இருக்கியே? வா உள்ளார போகலாம்''

அவமானத்தில் தேகமே தீப்பற்றி எரிவது போலிருந்தது.

''ஆத்தா! ஒனக்கு சங்கடமா இருந்தாக்க... நாம்ப ஊருக்கே போயிடலாமா?''

''வே.... வேணாம் மாமா! அடைக்கலம் குடுத்தவரு இப்போ ஐ.சி.யு.வில படுத்துக்கிடக்கிறாரு.... அம்போன்னு அம்மாவையும் விட்டுட்டுப் போறது சரியில்ல... அவர் பழையபடி எழுந்து நல்லா நடமாடணும். அடுத்த நிமிஷமே நாம்ப போயிடலாம் மாமா!''

வராண்டாவில் போடப்பட்டிருந்த நீளமான பெஞ்சில்... சுவரில் தலை சாய்த்தபடி அமர்ந்திருந்த மரகதத்தின் அருகில் வந்து நின்றாள் கவுரி.

''கேண்டீன்லேயிருந்து பால் வாங்கிட்டு வந்தேன். நீங்க மாத்திரையை கண்டிப்பா போட்டுத்தான் ஆகணும்! நீங்க தெம்பா இருந்தா தான் அவரை கவனிச்சுக்க முடியும்! ப்ளீஸ் மா எனக்காக...!'' அவளது பேச்சைத் தட்ட முடியாமல்... மாத்திரையை போட்டுக் கொண்டு பாலைப் பருகினாள் மரகதம்.

நடைச் சத்தம் கேட்டு திரும்பினர். குருமூர்த்தி தனது நண்பர்களுடன்... வெளிறிய முகத்துடன் மகனைக் காண வந்து கொண்டிருந்தார்.

அச்சில் வார்த்தது போன்ற முக சாயலைப் பார்த்ததுமே கவுரி

புரிந்து கொண்டாள்.

''மரகதம்! என் மகனுக்கு இப்போ எப்டி இருக்கு? யாரோ சொல்லித்தான் நா தெரிஞ்சுக்கணுமா? ஏன் போன் பண்ணலே?'' அதட்டி விட்டு பதிலுக்கு காத்திராமல் உள்ளே விரைந்தார்.

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்? மரகதத்தின் கன்னத்தில் வழிந்த கண்ணீரை தனது முந்தானையால் துடைத்து விட்டாள் கவுரி.

அன்றிலிருந்து தினமும் தவறாமல் குருமூர்த்தி தனது நண்பர்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து கொண்டிருந்தது...மரகதத்திற்கு சிறு நிம்மதியை மீட்டுத் தந்திருந்தது.

கைலாஷிற்குத் தான் படு அவஸ்தையாக இருந்தது. குருமூர்த்தி குரூப்பையும், நந்தினி பசுபதியையும் கண்டாலே... எட்டிக்காயாக கசந்து தொலைத்தது.

முள்ளின் மேல் படுத்துக் கொண்டிருப்பது போன்ற அவஸ்தையில் தவித்துப் போனான்.

''தோ, பாருங்கம்மா! வந்து அட்மிட் ஆகி பத்து நாட்களாச்சு! இங்க காட்சிப்பொருளா படுத்திருக்கிறதுக்கு... வீட்லேயே படுத்துக்கலாம். இந்த ஆஸ்பத்திரி சூழ்நிலை எனக்கு சுத்தமா பிடிக்கலை. நம்ம பேமிலி டாக்டரை வச்சுப்பாத்துக்கலாம். டிஸ்சார்ஜ் பண்ணச் சொல்லுங்க!'

வீட்டிற்கு கைலாஷை அழைத்து வந்ததும் மரகதம், கவுரியை அழைத்தாள்.

கைலாஷை கவனிச்சுக்க ஒரு நர்ஸை அனுப்பட்டுமான்னு ''நம்ம... பேமிலி டாக்டர்'' கேட்டாரு... 'கவுரி இருக்கா நான் இருக்கேன். மருது துணைக்கு இருக்கான். அதனால் வேணாம்'னு சொல்லிட்டேன். போ கவுரி! வேளா வேளைக்கு என்னென்ன மருந்து தர



''நம்ம முத்துக்கிருஷ்ணனுக்கு ஆபிஸ்ல பர்மனென்ட் ஆயிட்டது...''

''அப்ப இனிமேல் ஆபிஸ்ல படுத்த படுக்கையாக இருப்பான்''னு சொல்லு!

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



ணும்கிற விவரத்தை டாக்டர் கிட்ட கேட்டுக்கோ!'' என்று கைலாஷின் அறைக்கு அவளை அனுப்பி வைத்தாள்.

## 21

நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. கவுரியின் அன்பான அக்கறையான கவனிப்பில்.. வெகு சீக்கிரமே உடல்நலம் தேறி விட்டிருந்தான் கைலாஷ்.

இரவு பகல் பாராமல் அருகிலிருந்து நன்கு கவனித்துக் கொண்டாள். மரகதம் உதவிக்கு வந்தால் கூட அன்பாய் அதட்டி அனுப்பி வைத்தாள் கவுரி.

''பி.பி. மாத்திரை போட்டுக்கிட்டா... ரொம்ப நேரம் கண் முழிக்க முடியாது மயக்கமா வரும். எனக்கு ஒரு சிரமமும் இல்ல... நா பாத்துக்கிறேன். இதோ இங்க வராண்டாவில் மருது மாமா படுத்துருக்கிறாரு. குரல் கொடுத்தா உதவிக்கு ஓடி வரப்போறாரு... வயசானவங்க... அதிலும் உடம்புக்கு முடியாதவங்க... கவலைப்படாம போய் படுத்து ரெஸ்ட் எடுங்க போங்க!''

மின்னல் வேகத்தில் சமையலை முடித்து விட்டு வேளா வேளைக்கு மருந்து மாத்திரைகளை கைலாஷுக்கும், மரகதத்திற்கும் கொடுத்து... ஆபீஸிலிருந்து வரவழைக்கப்பட்ட பைல்களை பிராஜெக்ட் ரிப்போர்ட்களை செக் செய்து பம்பரமாய் சுழன்றாள் கவுரி.

இருபதே நாட்களில் அவனது கன்னத்தில் போடப்பட்ட பாண்டேஜ் அகற்றப்பட்டு தையல் பிரிக்கப்பட்டது. நீளவாக்கில் ஒரு வடுவைப் போன்று தோன்றி... கைலாஷின் முகத்தையே விகாரமாக்குவதாய் இருந்தது.

கிட்டத்தட்ட ஐம்பது நாட்களிலேயே அவனது காலில் எலும்பு கூடி விட்டதால் கட்டு அவிழ்க்கப்பட்டது. ஆனால் கைலாஷால் காலை இழுத்து இழுத்து தான் நடக்க முடிந்தது.

''டோண்ட் ஒர்ரி மிஸ் கவுரி! பிஸியோதெரபி குடுத்தா சரியாயிடும். நா எழுதித் தர்ற ஆயிண்மெண்ட்டை டெய்லி நாலஞ்சு வாட்டி அப்ளை பண்ணி நல்ல மசாஜ் குடுங்க. காலை நீட்டி மடக்கி பயிற்சி பண்ண வைங்க. டெய்லி இரண்டு வேளை நல்லா 'வாக்' பண்ணிட்டா. நாளடைவில் கைலாஷ் நார்மலா நடக்க ஆரம்பிச்சிடுவாரு.... சரியா?'' குடும்ப மருத்துவர் முறுவலித்தபடி அவளிடம் பிரிஸ்கிரிப்ஷனை நீட்டினார்.

பரிதாபமாய் மருதுவை ஏறிட்டாள் கவுரி. 'ஊருக்குச் செல்வதற்குரிய நேரம் இன்னமும் வரவில்லை. கடமை பாக்கி இருக்கிறது' என்பதை அவளது அர்த்தம் பொதிந்த பார்வையிலேயே புரிந்து கொண்டார் மருது.

விடாமுயற்சியுடன் டாக்டர் கூறியபடி பயிற்சி பண்ண வைத்தான்

கவுரி. மருதுவின் உதவியுடன் மருந்து தேய்த்து மசாஜ் செய்தது வீண் போகவில்லை. மூன்று வார காலப்பயிற்சியின் முடிவில் கைலாஷின் நடையில் நல்ல மாற்றம் தென்பட்டது.

இதற்கிடையில் பசுபதியும் நந்தினியும் கைலாஷை பார்க்க வந்த தருணங்களில்... கவுரியும் மருதுவும் அவர்களது கண்ணிலேயே படாமல் விலகியே இருந்தனர்.

மூன்று வாரங்களாக அவனது காலுக்கு நல்ல பயிற்சி அளித்து முடித்ததும், கவுரியின் மனதில் பூரண திருப்தி பரவியதும் சட்டென்று அந்த முடிவுக்கு வந்தாள்.

''கைலாஷ்! நானும் மருது மாமாவும் கிளம்பறோம். எனக்கு நம்பிக்கை வந்திடுச்சு. உங்களால கம்பீரமா பழையபடி நடக்க முடியும்? உங்க நடையில நல்ல மாற்றம் தெரியுது. நா ராசியில்லாதவ! எனக்கு அடைக்கலம் குடுத்த பாவத்துக்குத் தான் உங்களுக்கு இந்த கதி ஏற்பட்டுச்சோன்னு... எனக்குள்ளே ஒரு குற்றவுணர்வு! திரும்ப நீங்க நல்லா நடமாடற வரைக்கும்... இங்க இருந்து உங்களை கவனிக்க வேண்டியது என் கடமையன்னு நெனச்சேன்!

என்னோட கடமை முடிஞ்சு போச்சு! நான் அன்னிக்கு கேட்டுக்கிட்ட ஏற்பாட்டை கூடிய சீக்கிரம் நீங்க செய்வீங்கன்னு நம்பறேன். அம்மா கிட்ட உத்தரவு வாங்கிக்கிட்டு நா கிளம்பறேன் கைலாஷ்!''

கண்ணீர் மல்க கரங்களைக் குவித்தாள் கவுரி.

''இன்னமும் அதே முடிவில தான் இருக்கியா கவுரி? என்னோட துரதிர்ஷ்டம்.... இந்த ஆக்ஸிடெண்ட்லே அப்படியே போய் சேராம பிழைச்சு உட்காந்தேன் பாரு...! ஓகே! எல்லா ஏற்பாடுகளையும் சீக்கிரமே செய்துடறேன்!''

தாடை இறுக முகத்தைத் திருப்பிக் கொண்டு... பால்கனி வழியே தூரத்தில் மங்கலாகத் தெரிந்த மலைத்தொடர்களின் மீது பார்வையைப் பதித்தான்.

விம்மலை அடக்கிய வண்ணம் அவனது முதுகைப் பரிதாபமாக ஏறிட்டு விட்டு நடக்க முற்பட்ட போது சட்டென்று உள்ளே புகுந்தாள் மரகதம்.

''நீ பேசினதெல்லாம் நா கேட்டுக்கிட்டு தான் வரேன்! ஊருக்குப் போகணும்னு முடிவே பண்ணிட்டியா? உன்னோட கடமை முடிஞ்சு போச்சுன்னு யார் சொன்னாங்க? இந்த வீட்டோட மருமக நீ! உன்னை அந்த ஊருக்குப் போக... நா அனுமதிக்க மாட்டேன்!''

''அம்மா...! எ... என்னம்மா சொல்றீங்க? நீங்க என்ன பேசறீங்கன்னு புரிஞ்சு தான் பேசறீங்களா? உணர்ச்சி வசப்படாதீங்க! உ... உங்க தம்பி மக நந்தினியை மறந்துட்டு... நீங்க...''

''எல்லாம் புரிஞ்சு தான் பேசறேன்! ரொம்ப காலத்துக்கு அப்புறம் இப்ப தான் தெளிவடைஞ்சிருக்கேன். கைலாஷ் உன்னை மனப்பூர்வமா விரும்புறான்னு என் மனசுக்கு பட்டுச்சு! நந்தினியை விட



சகல விதத்திலும் நீ தான் அவனுக்கு பொருத்தமான துணைன்னு எனக்கு தோணுச்சு! ஆனா... பசுபதி? வாக்கு மாறிட்டியே அப்படின்னு பிரச்சனையை கெளப்புவானோ? அந்த குழப்பம் தான் ரொம்பவும் என்னை ஆட்டிப் படைச்சது.

நேத்து சாயந்தரம் கைலாஷுக்கு காலை நீட்டி மடக்கி பயிற்சி குடுத்துட்டிருந்தே... உன்னை தொந்தரவு பண்ணாம நான் மட்டும் கோவிலுக்கு கிளம்பி போனேன். தரிசனம் முடிஞ்சதும் பசுபதி வீட்டுக்குப் போயி... இந்த விஷயத்தைப் பத்தி சுத்தி வளைச்சுப் பேசிடலாம்னு முடிவு பண்ணி அவங்க வீட்டுக்குப் போனேன்.

காரை கோவிலுக்குப் பக்கமா நிறுத்திட்டு நடந்து தான் போனேன். நந்தினியும் பசுபதியும் சத்தமா பேசிட்டிருந்தாங்க. வாசல்லே தயங்கி நின்னேன். பகல்லே பக்கம் பார்த்து பேசணும்னு பெரியவங்க சொல்வாங்க.

நந்தினி கோபமா 'இந்த கைலாஷை கட்டிக்க எனக்கு துளி கூட விருப்பமில்லை அப்பா... ஏறெடுத்துக்கூட பாக்க மாட்டேங்கிறான். கன்னத்துல விகாரமான வடு வேற... இழுத்து இழுத்து நடக்கிறான். இந்த ஆளை கட்டிக்கிட்டா... என்னோட ஃப்ரெண்ட்ஸ் என்னை கிண்டல் பண்ணுவாங்கப்பா' அப்படின்னு சொன்னா...

'அட போம்மா' பத்து தலைமுறைக்கும் உட்காந்து சாப்பிடற மாதிரி கோடி கோடியா சொத்து இருக்கே? அதை நினைச்சுப்பாரு? இந்த குறையெல்லாம் உன் கண்ணுக்குத் தெரியாது' அப்படின்னு பசுபதி பதிலுக்கு சொன்னதும்... எனக்கு சுரீர்னு சூடு வாங்கின மாதிரி ஆயிடுச்சு!

பணத்தாசை புடிச்ச பசுபதிக்கு போய்... நான் ஏன் பயப்படணும்? அவன் குணம் தெரிஞ்ச பின்னாடி... நான் ரொம்பவும் வெறுத்துட்டேன் வந்த சுவடு தெரியாமல் அப்படியே திரும்பி வந்தட்டேன்.

குடும்ப கவுரவத்துக்காகவும், ஊர் நன்மைக்காகவும் சொத்துக்களை துச்சமா தூக்கியெறிஞ்சுட்டு வந்த என் கவுரி எங்கே? அந்த கேடு கெட்ட நந்தினி எங்கே?... அப்புறம் இன்னொரு நல்ல சமாச்சாரம்! கைலாஷோட அப்பா இன்னும் கொஞ்ச நேரத்துல இங்க வரப்போறார்... வந்து நிரந்தரமா இங்கேயே இருக்கப்போறாரு...!''

கைலாஷ் விருட்டென்று திரும்பி அம்மாவின் அருகில் வந்து நின்றான்.

''கொஞ்சம் பொறுமையா கேளுப்பா! நீ அடிபட்டு கிடந்ததும்... தினமும் உன்னைப்பாக்க அவரு வந்துட்டிருந்தாரு இல்ல? அது அவரு கூட இருந்த அந்த பொம்பளைக்கு புடிக்கலை! 'பெத்த பாசம் திடீர்னு பொத்துகிட்டு வருதோ? மகனைப்போய் பாக்காதீங்க... அப்படி பாக்கணும்னா உங்க பேர்ல மிச்சம் மீதி இருக்கிற சொத்தையும் பேங்க்ல இருக்கற பணத்தையும் எனக்கும் என் புள்ளைக்கும் எழுதி வச்சுட்டுப் போங்கன்னு சண்டை போட்டிருக்கா...!

அப்ப தான் நம்ம அருமை உங்கப்பாவுக்கு புரிஞ்சிருக்கு! 'நான் பெத்த புள்ளையை பாக்க வேணாம்னு சொல்றதுக்கு நீ யாருடி?'ன்னு கேட்டுட்டு வெளியே வந்துட்டாராம்! இப்போ லாட்ஜ்லே தங்கியி ருக்காரு. நேத்து நைட்லே எனக்கு போன் பண்ணி... மன்னிப்பு கேட் டாரு கைலாஷ்!

எல்லாம் கவுரி வந்த நேரம்! இழந்த நிம்மதியும், சந்தோஷமும் நமக்கு திரும்ப கிடைச்சிருக்கு! உங்கப்பா கிட்ட உங்க விஷயத்தைப் பத்தி சொல்லிட்டேன். ரொம்பவும் சந்தோஷப்பட்டாரு! அவரு வந் ததும்... நீ, நான் உங்கப்பா, கவுரி, மருது எல்லாருமா சேந்து 'வீரபாண் டிக்கு' போகப்போறோம்! அங்க போய் முத்துப்பாண்டி கிட்டயும், ஊர் தலைவருக் கிட்டயும் 'உங்க ஊரு பொண்ணு கூடிய சீக்கிரம் எங்க வீட்டுக்கு மருமகளா வரப்போறாள்னு சொல்லிட்டு... வீர பாண்டி அம்மன் கோவில் குருக்கள் கிட்ட முகூர்த்த தேதி குறிச்சிட்டு வரப்போறோம்.

என்னடா அப்டிப் பாக்கறே? இந்த தாயோட நலனுக்காக உன்ன தமான காதலை நீங்க ரெண்டு பேரும் தியாகம் செய்ய துணிஞ்சீங் களே? இந்த அன்பு உள்ளங்களை பிரிக்கிறதுக்கு... இந்த அம்மாவுக்கு மனசு வருமா? பைத்தியக்காரப் புள்ளைங்க!'' கண்களில் துளிர்த்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டு... பரபரப்பாக வெளியேறினாள் மரகதம்.

''கவுரி! இந்த முகத்தைப் பாத்தா... உனக்கு நிஜமாவே சங்கடமா இல்லையா?'' கேட்டபடி அவளருகே வந்து நின்றான் கைலாஷ்!

''அய்யோ! நீங்க திரும்ப முழுசா கிடைச்சதே பெரிய பாக்கி யம்னு நினைக்கிறேன். அம்மனோட கருணையால மறு ஜென்மம் எடுத்திருக்கீங்க... நி... நிஜமா எனக்கு எந்த சங்கடமும் இல்ல''

''நோ! நான் நம்ப மாட்டேன்''

''சத்தியமா! நா... எப்டி உங்களை நம்ப வைக்கிறது? திணறிய வளாய் பரிதாபமாய் அவனை ஏறிட்டாள். தாடை இறுக முகத்தில் சோகத்தை ஏந்தியபடி இருந்த கைலாஷைக் கண்டு ... மனம் பாகாய் கரைந்தது.

சட்டென்று அவனது கன்னத்தில் வடுவைப் போன்று தோன்றிய காயத் தழும்பில் இதழ்களைப் பதித்தாள்.

''வாரே வா! இதை... இதைத் தானே எதிர்பார்த்தேன்! என் கவுரி யைப் பத்தி எனக்குத் தெரியாதா? நீ திருமதி. கவுரி கைலாஷா ஆன பின்னாடி... உன் ஆசைப்படியே அறக்கட்டளை மூலமா சமூக சேவை செய்! அடடே... அந்திவானமாய் உன்னோட அழகுமுகம் சிவந்து போச்சே?'' முகத்தில் குறும்பு மின்ன சிரித்தான்.

நாணத்துடன் நகர முற்பட்ட கவுரியின் கரம் பற்றி இதமாய் தோளில் சாய்த்துக் கொண்டான் கைலாஷ்.

-முற்றும்-